11th February 1958]

Employees State Insurance Scheme

* 50 *Q.*—SRI A. R. MARIMUTHU (on behalf of Sri P. S. Chinnadurai) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to extend the Employees State Insurance Scheme throughout the Coimbatore district?

THE HON. SRI R. VENKATARAMAN : A proposal to extend the scheme to unimplemented areas including those in the Coimbatore district is under consideration.

SRI N. K. PALANISAMI : தொழிலாளிகளுக்குமட்டும் இந்தச் சலுகை இல்லாமல், அவர்களுடைய குடும்பம் பூராவுக்கும் இந்தச் சலுகை கொடுக்கும் விஷயம் சர்க்கார் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எப்பொழுது அமுலாக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தினுடைய சலுகைகளை தொழிலாளர்களுடைய குடும்பத்தாருக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயத்தை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது நடைமுறையில் வருவதற்கு முன்பே, இன்னும் இந்தத் திட்டமே விஸ்தரிக்கப்படாத இடத்திற்கு முதலிலே விஸ்தரிக்க வேண்டுமென்று சென்னை ராஜ்ய சர்க்கார் அபிப்பிராயம் கூறியது. அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : இன்ஷீயூரன்ஸ் திட்டம் ஹோட்டல் தொழிலாளிகளுக்கும் இருக்கிறதா? இல்லையென்றால், அவர்களுக்கும் கொண்டுவரப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கும் இன்ஷீயூரன்ஸ் சட்டப் பிரகாரம் ஹோட்டல் தொழிலாளிகளுக்குச் செல்லுபடி ஆகாது.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk(*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : It is customary that, on the second day of the discussion on the Governor's Address, amendments to the Motion of Thanks will be moved. If the House has no objection, I shall ask all those hon. Members who have given notice to move their amendments formally. A vote on these amendments will be taken on the last day of the discussion. I shall call the hon. Members one by one. Hon. Member Sri Krishnaswamy Naidu has already moved the main Motion of Thanks. If any hon. Member who has given notice of the amendments is not in his seat when I call him, his amendment will be deemed not to have been moved. But, if the House agrees, as a special case, I shall allow one or two amendments on the last day. Now, hon. Member Sri Marudachalam may move his amendment. 9-10 a.m.

SRI N. MARUDACHALAM : நான் என் திருத்தத்தைப் பிரேரேபிக்கின்றேன்.

" *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about the closure of the weaving sections in the Textile Mills in Coimbatore district and the consequent misery to more than three thousand families of Textile Workers.' "

[11th February 1958

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move—

" *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about the steps to be taken to bring down the cost of living.' "

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI A. R. MARIMUTHU : Sir, I move—

" *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about (1) the fixation of minimum wages to the agricultural labourers; and (2) provision of house-sites to the agricultural labourers in a speedy manner.' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

MR. SPEAKER : Hon. Member Sri P. S. Chinnadurai is absent. But he has already told me that he would be away on some urgent business and has requested permission to move his amendment later. So, I shall allow him to move his amendment on the last day.

SRI S. B. ADITYAN : நான் என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்.

" *Add* at the end the following :—

' but regret to point out that the Madras State Government have failed to take adequate steps to bring within the boundary of the State several predominantly Tamil-speaking areas.' "

SRI D. S. AUTHIMOOLAM : I second the amendment, Sir.

SRI S. B. ADITYAN : நான் என் திருத்தத்தை முன்மொழி கின்றேன்.

" *Add* at the end the following :—

' but regret to note that the Government have failed to insist on Tamil as Language of communication with the Centre.' "

SRI D. S. AUTHIMOOLAM : I second the amendment, Sir.

SRI K. RAMACHANDRAN : Sir, I move—

" *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about (1) the proposals to improve the backward riot-affected areas in Ramanathapuram district, (2) the introduction of new blocks in the remaining parts of our State and (3) the proposals that will be followed for ensuring the stability of the handloom industry.' "

11th February 1958]

SRI T. S. RAMASWAMY PILLAI : I second the amendment, Sir.

SRI M. D. RAMASAMI : Sir, I move—

" *Add* at the end the following :—

' but regret to note that no mention has been made about (1) the unemployment position and the measures, if any, which the Government proposes to take to tackle it and (2) the present food situation and the Government's action to tackle it.' "

SRI K. RAMACHANDRAN : I second the amendment, Sir.

SRI T. VELUSAMI : நான் என் திருத்தத்தை முன்மொழிகின்றேன்.

" *Add* at the end the following :—

' but regret to bring to notice that the people of this State have been deprived of their constitutional right of expression of opinion and of security for life and holdings.' "

SRI S. B. ADITYAN : நான் அதை வழி மொழிகின்றேன்.

SRI D. S. AUTHIMOOLAM : நான் என் திருத்தத்தை முன்மொழிகின்றேன்.

" *Add* at the end the following :—

' but regret to point out that the Government have not been well advised in abolishing the District Boards.' "

SRI S. B. ADITYAN : நான் அதை வழி மொழிகின்றேன்.

MR. SPEAKER : The next two amendments are those of Sri Kalyanasundaram. He has informed me that he could not be present to-day in the House and has requested permission to move his amendments later. So, I shall allow him to move his amendments on the last day.

SRI S. PAKKIRISWAMY PILLAI : நான் என்னுடைய திருத்தத்தை பிரேரேபிக்கின்றேன் :—

" *Add* at the end the following :—

' but regret to find that no mention has been made about the hardship felt by the citizens of Madras in finding proper housing accommodation and about the failure of the State Government in taking up the facilities offered by the Central Government in the matter of Housing Scheme in the State.' "

SRI N. K. PALANISAMI : I second the amendment, Sir.

SRI K. ANBAZHAGAN : நான் முன்மொழிகின்றேன் :—

" *Add* at the end the following :—

' but regret to note that no reference is made to the Police excesses on 3rd and 6th January 1958, and the suffering of the public, the ill-treatment of the D.M.K. Leaders in Police custody,

[Sri K. Anbazhagan] [11th February 1958

and the demise of two men on account of Police action and (2) the plight of the handloom weavers, the Elementary School Teachers, the N.G.Os. and the Last Grade Government servants.' "

Sri M. P. SUBRAMANIAM : நான் வழிமொழிகின்றேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, I rise on a point of order.

" முன் மொழிகின்றேன் " என்று சொன்னால் " **propose** செய்கிறேன் " என்று அர்த்தம் ஆகாது. ஆகையால், " **propose** செய்கிறேன் " என்பதற்கு " பிரேரேபிக்கிறேன் " என்ற வார்த்தையை நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்டு அதை உபயோகிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

Sri K. ANBAZHAGAN rose—

Mr. SPEAKER : I do not wish to enter into a controversy over this question. For the present I shall allow the use of the word 'முன் மொழிகின்றேன்' to indicate 'propose' or 'move'. But, later if I find that it is not satisfactory, I shall come back to the House.

Sri A. GOVINDASAMY : என் பேரில் இருக்கும் திருத்தத்தை நான் முன்மொழிகின்றேன் :—

" *Add* at the end the following :—

'but regret to add that the address has failed to emphasise the need for a judicial enquiry into the action of the police in denying the just and democratic rights of the opposition parties to hold public meetings and peaceful demonstrations during the recent visit of the Prime Minister, Nehru, resulting in repression and incidents which marred the prestige of our State.' "

Sri V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

Sri V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" *Add* at the end the following :—

'but regret to note that no mention has been made about (1) the crisis in the handloom industry due to heavy stock of handloom products for want of markets outside and the reduction of the rate of rebate on the handloom sales; (2) the necessity to maintain and increase the number of Fair Price Shops in the State due to the prevalent high price of rice; (3) the need to increase the educational, welfare, and such other facilities which would increase the status of the Harijans and other Backward Class people and the effective steps the Government propose to take to eradicate caste oppression predominantly prevailing in the rural areas; (4) the steps to be taken to reopen the industries and factories closed in the State in the private sector; (5) the steps taken to expedite the opening of a steel plant at Salem; and (6) the necessity to bring in legislation to ensure subsistence allowance of at least half a month's wage rate to the workers when their dispute is before the Labour Department or before the Court.' "

Sri N. K. PALANISAMI : I second the amendment, Sir.

Mr. SPEAKER : I shall now accept 'முன்மொழிகின்றேன்' as equivalent to the word 'propose'. If, on further consideration, I find that it is wrong, I shall have to come back to the House.

III.—POINT OF ORDER *RE.* CRITICISM OF THE ACTION OF THE PRIME MINISTER.

MR. SPEAKER : Yesterday, hon. Member Sri Lazar raised a point of order when the Hon. Deputy Speaker was in the Chair. Interrupting the speech of hon. Member Sri A. V. P. Asaithambi, Sri Lazar, rising on a point of order had asked whether Sri A. V. P. Asaithambi was in order in criticising the action of the Prime Minister of India who was not a member of this House. On a consideration of the matter with the Deputy Speaker also, I do not think that in the present context I can rule out any reference to the Prime Minister. Because, in the course of the discussion on the Governor's Address, it may be necessary to refer to the Prime Minister as Prime Minister. But, in view of the person not being present in this House, it is desirable that hon. Members use restrained language when referring to him.

SRI M. P. SUBRAMANIAM : On a point of information, Sir.

MR. SPEAKER : There can be no point of information on a ruling. If the hon. Member wants he can raise a point of order.

II—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : The hon. Member Sri Asaithambi may continue his speech on the Governor's Address.

*SRI A. V. P. ASAITHAMBI : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் மூன்றாம் தேதி நடைபெறவிருந்த திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்தை ஆட்சியில் இருப்போர் தடை செய்தது மாத்திரம் அல்லாதபடி திராவிட முன்னேற்றப் கழகத் தலைவர்களைக் கைதி செய்ததும், கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் மீது வரம்புக்கு மீறி அடக்கு முறையை அவிழ்த்து விட்டதும் ஆகிய செயல்களைப் பற்றி ஒரு பகிரங்க விசாரணையை நடத்தவேண்டுமென்பதை என்னுடைய கட்சியின் சார்பில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். ஜனவரி மாதம் மூன்றாம் தேதி தலைவர்களைக் கைதி செய்கிற விஷயத்தில், ஆங்கிலேயர்கள் அடக்குமுறைக்குப் பெயர் பெற்றவர்கள் என்று இருந்தாலும்கூட, அவர்களையும் மிஞ்சும் விதத்தில் இந்தச் சர்க்கார் நடந்துகொண்டது என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். 9-20 a.m.

தடை உத்திரவை மீறுவதற்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை மாத்திரம் இந்தச் சர்க்கார் கைதி செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைக் கைதி செய்து போலீசார் அழைத்துச் செல்லுகையில், பின்னாலே வந்து கொண்டிருந்த திரு. கருணாநிதி, எம்.எல்.எ. அவர்களையும் இந்தப் போலீசார் ஒரு காரணமும் இல்லாமல் கைதி செய்தார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I point out, Sir, that a specific case is pending with the Court with regard to this arrest? The hon. Member's point that without any reason the arrests were made, when the matter is *sub judice* may not be proper.

MR. SPEAKER : The hon. Member will take note of the point.

[11th February 1958

SRI A. V. P. ASAITHAMBI : நான் அவர்கள் தவறு செய்தார்களா இல்லையா என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. கார் டிரைவரைக் கைதி செய்தார்கள் என்று அதைக் கூட நான் குறிப்பிடவில்லை. திரு. கருணாநிதியின் காரை முதற்கொண்டு கைதி செய்தது வேறு எந்த ஆட்சியிலாவது நடைபெற்றிருக்கக்கூடிய அக்கிரமமாக இருக்குமாவென்று குறிப்பிட்டுக் கேட்க விரும்புகிறேன்.

ஜனவரி மாதம் 3-ந்தேதி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை அடையார் போலீஸ் லாக்கப்பில் ஒரு சிறிய அறையில்—அதாவது 10×8, என்று அந்த அறையின் விஸ்தீர்ணம் போட்டிருந்தார்கள்—ஒரு அறையில் ஆறு பேர்களையும், இன்னொரு அறையில் 5 பேர்களையும் போட்டு அடைத்திருந் தார்கள். அது மாத்திரம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மேலே போட்டிருந்த துண்டுகளை முதற்கொண்டு அந்த இரவில் போலீசார் பறித்துக்கொண்டார்கள். இந்த அளவுக்கு போலீசார் செய்ததை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் அவ்வாறு கைதி செய்யப்பட்டவர்களில் 3 எம்.எல்.ஏ-க்களும், 2 எம்.பி-க்களும் இருந்தார்கள். இவர்கள் எல்லாம் மக்களின் ஆதரவைப் பெற்று இந்த மன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள். அந்த மாதிரியான நிலைமை இந்த ஆட்சியில் இருக்கிறதென்று சொன்னால் மிக மிக வருந்தத்தக்கது. கண்டிக்கத்தக்கது என்று நான் இதைக் கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை மாலை நேரத்தில் கைதி செய்யாமல், காலை நேரத்திலேயே கைதி செய்து இருந்தால், தலைவர்கள் கைதி செய்யப்பட்ட விஷயம் மாலைக்குள் நகரம் பூராவும் பரவியிருக்கும். அதனால் ஏராளமான ஜனங்கள் கடற்கரையில் கூடாமல் இருந்திருப்பார்கள். அசம்பாதவிதமான சம்பவங்களும் நடைபெறாமல் இருந்திருக்கும். ஆனால் போலீசார் பொறுப் பற்ற முறையில் மாலை நேரத்தில் மக்களைக் கடற்கரையில் கூட விட்டு, மக்களுக்கு அருகிலேயே தலைவர்களைக் கைதி செய்ததினால்தான் மக்கள் ஆத்திரம் அடைந்து இத்தகைய இழி செயல்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இச்சம்பவங்கள் நடைபெறுவதற்குக் காரணமான முறையில் பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்ட அமைச்சர்களும், போலீஸ்காரர் களும், இன்று இதற்கெல்லாம் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று பொறுப்பற்ற முறையில் பேசுகின்றார்கள். ஆனால் ஜனவரி மாதம் 3-தேதியிலிருந்து 6-ந்தேதி வரைக்கும் நடைபெற்ற அசம்பாவிதங் களுக்கு எல்லாம் இந்தச் சர்க்கார்தான் காரணம் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். அதற்கு ஒரு பகிரங்க விசாரணை கட்டாயம் நடைபெறவேண்டும். இரண்டு உயிர்கள் அகாரணமாக போலீசாரின் அடக்குமுறையின் விளைவாக பலியாகியிருக்கிறது. அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட அல்ல. ஒருவர் இஸலா மியர், இன்னொருவர் மராட்டியர். 6-ந்தேதி அடக்குமுறைச் செயல் களில் ஈடுபட்ட போலீசார் யார் யார் கண்ணுக்குச் சிக்குகிறார்களோ அவர் களையெல்லாம் அநீதியான முறையில் கைதி செய்தும், அடித்தும் துன் புறுத்தியுமிருக்கிறார்கள். சென்டிரல் ஜெயிலில் கைதி செய்யப்பட்டு வைத் திருந்தவர்களில் வடநாட்டாரும் கூட ஒருவர் இருந்தார். நாலாயிரம் பேர்கள் வரையில் அந்த நிகழ்ச்சியையொட்டிக் கைதி செய்தார்கள். எப்படி யிருந்தாலும் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட கருப்புக்கொடி காட்டும் நிகழ்ச்சிகள் அன்றையதினம் வெற்றிபெற்றுவிட்டது என்பதனால் நாங்கள் பெருமைப்படுகிறோம். அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தி னர் இந்த நாட்டில் தம் செல்வாக்கை அதிகம் பெற்று வருகிறார்கள் என் பதை உணர்ந்துதான் காங்கிரஸ் அங்கத்தினர்கள் யாவரும் இன்றைக்கு வடநாட்டாராவது, தென்நாட்டாராவது, இந்தப் பிரிவினை எல்லாம் கூடாது. எல்லோரும் ஒருவர் தான் என்பதாகப் பேச முன்வந்திருக்கிறார்கள். அவர் களுக்கு எல்லாம் சபாநாயகர் மூலமாக நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியா என்பது பரந்த நிலப்பரப்பை உடைய ஒரு நாடு என்று கருதுவது தவறு ஆகும். இது ஒரு நாடு அல்ல. உப கண்டம் இதில் ஒரு நாடு அல்ல, பல நாடுகள் இருக்கின்றன. பல நாடுகள் இருக்கின்ற காரணத்தினால் தென்னகத்தில் மாத்திரம் பிரிவினை இயக்கம் வளரவில்லை. எங்கே பார்த்தாலும் இருக்கிறது. நமது கவர்னர் பெரு மானுடைய நாடாகிய அஸ்ஸாமில் நாகர்கள் தனி ராஜ்யம் கேட்கிறார்கள். காஷ்மீர் தனியாகப் பிரியவேண்டுமென்று விரும்புகிறார்கள். மராட்டியர்

11th February 1958] [Sri A. V. P. Asaithambi]

தனியாகப் பிரிந்திருக்க விரும்புகிறார்கள். சீக்கியர்கள் தனி ராஜ்யம் கேட்கிறார்கள். இங்கே—தென்னகத்திலும்—தனியாகப் பிரிந்து இருக்கத்தான் விரும்புகிறோம். தமிழகம் தனி அரசாகப் பிரிந்து இருக்கவேண்டும் என்பதற்காக நண்பர் ஆதித்தியன் கூட நேற்று தினம் ஒரு புதுக் கட்சியை ஆரம்பித்திருக்கிறார். இந்த நாட்டில் பிரிவினை இயக்கம் வலுத்துக் கொண்டுதான் வருகிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த இரண்டு பிரிவினருக்கும் என்ன வித்தியாசம் என்பதை கனம் அங்கத்தினர் விளக்கினால் நன்றாக இருக்கும்.

SRI A. V. P. ASAITHAMBI : சபாநாயகர் எனக்குப் பேச நேரம் கொடுத்தால் அவற்றையெல்லாம் விளக்க நான் ஒரு மணி நேரமானாலும் பேசத் தயாராய் இருக்கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினருக்கு நான் பத்து நிமிஷங்களுக்கு மேல் கொடுக்கத் தயாராக இல்லை. பத்து நிமிஷங்கள் கொடுத்திருக்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : அவர் தமிழ்நாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்று சொல்கிறார். நாங்கள் திராவிட நாடு—அதாவது கர்னாடகம், மலையாளம், தெலுங்கு, தமிழ்—எல்லாவற்றுக்கும் தனியாக சுதந்திரமளிப்பது ஆகும். தமிழக சட்டமன்றம் என்றாலும் கர்னாடகர் இன்று சபாநாயகராக வீற்றிருப்பது போல, தெலுங்கர் பக்தவத்சலு நாயுடு உப சபாநாயகராக வீற்றிருப்பது போல ஒருமையுடன் நான்கு மொழி மக்களும் கூட்டாக அமையும் தன்மையை விரும்புகிறோம். நாடு பிரிவினை என்றால் ஏதோ துண்டாக வெட்டி அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் கொண்டுபோய் வைத்துவிடுவது என்பது அல்ல. இந்த நாட்டில் வட நாட்டாருடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது. இந்த நாட்டுப் பணம் வெளியே போகக்கூடாது. வரிப்பணம் இந்த நாட்டில் வசூலிப்பது இந்த நாட்டிலேயே, இருக்கவேண்டும். இப்படி பொருளாதாரக் கட்டுப்பாடு செய்வதற்குத்தான் தனித் திராவிட நாடு வேண்டுமென்று விரும்புகிறோம். நம்முடைய மொழி வளருவதற்கு தனி திராவிட நாடு வேண்டுமென்று கோருகிறோம். இந்த அளவில் வைக்கப்படுகிற கோரிக்கைகளுக்கு மக்களின் ஆதரவு பெருகி வருகிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. எல்லா அங்கத்தினர்களும் இதைப்பற்றி தங்கள் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டைப் பொறுத்த வரையில் ஆட்சி மொழி எந்த மொழியாவது என்ற பிரச்னையில் இன்றைக்கு நிதி மந்திரி அவர்கள் இந்த நாட்டின் கவனத்தை வேறு பக்கம் திருப்பக்கூடிய முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழியை ஏற்றுக்கொண்டுவிட்டதாக நாடு எங்கிலும் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : உங்கள் கட்சி ஏற்றுக்கொண்டதாகச் சொல்ல வில்லை. உங்கள் கட்சித் தலைவர் ஏற்றுக்கொண்டதாகச் தான் சொல்கிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : எங்கள் கட்சி என்றாலும், எங்கள் கட்சித் தலைவர் என்றாலும் ஒன்றுதான். இந்தி மொழியை திராவிட முன்னேற்றக் கழகம் ஒப்புக்கொண்டுவிட்டதாகச் சொல்வது திராவிடமுன்னேற்றக் கழகத்தைபற்றி நிதி மந்திரி அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாததைத்தான் காட்டுகிறது. ஏனென்று சொன்னால் சர்க்காரால் நடத்தப்பட்ட ஆட்சிமொழி மாநாட்டு நடவடிக்கையைக் கவனித்துப் பார்த்தால் திராவிட முன்னேற்ற கழகம் இந்தியை ஏற்றுக்கொண்டதா ? அல்லது இந்தி மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று ஒரே பிடிவாதமாக் இருந்த காங்கிரஸ்காரர்கள் ஆங்கில மொழியையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதற்கு இணங்கியதா என்று பார்த்தால் இந்தச் சர்க்கார்தான் ஆங்கில மொழியை ஒப்புக கொண்டதாக இருக்கிறதே தவிர நாங்கள் இந்தி மொழியை ஒப்புக்கொள்ளவில்லை.

[11th February 1958

9-30 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM : நான் எப்பொழுதும் அப்படி சொன்னது கிடையாது. 1955-ம் ஆண்டிலே தயாரித்த யாதாஸ்தைப் பார்த்தால் தெரியும். அதையேதான் இப்பொழுதும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒன்றும் எங்கள் மனதை மாற்றிவிடவில்லை.

SRI M. P. SUBRAMANIAM : When the hon. Member speaks, the Hon. Leader of the House is interrupting him now and then. When he replies to the debate, he can answer but he should not interrupt the Member when he speaks.

SRI A. A. RASHEED : Is it parliamentary?

MR. SPEAKER : There is no objection to interruption but the only difficulty is the Hon. the Minister must be prepared to face similar interruptions when he speaks. So, it is advisable not to interrupt. It will lead to disharmony and not to harmony.

THE HON. SRI C. SUBRAMANIAM : With great respect to you, Sir, particularly when a wrong fact is mentioned, it is better it is contradicted at once; otherwise, it is likely to lead to misunderstandings.

SRI C. N. ANNADURAI : இந்த பிரச்னையில் என்னைப்பற்றியும் குறிப்பிட்டபடியால் நானும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : கடைசியாக நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்கிறேன்.

I must say, in the interests of harmonious working, it is better that frequent interruptions are not made. Every hon. Member will have an opportunity to speak and it would be better if he takes advantage of it and replies to the points he wants to answer. I have no objection to interruptions which are permitted in Parliaments. But interruptions often lead to counter-interruptions and not smooth working.

The hon. Member, Sri Asaithambi, spoke for five minutes yesterday. I have not taken that into account. To-day he has got another three minutes.

SRI A. V. P. ASAITHAMBI : இந்த ஆட்சிமொழி மாநாட்டிலே திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலே கலந்துகொண்ட எங்கள் அண்ணா அவர்கள் இந்தியை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லுவது தவறாகும். இன்னும் இந்த ஆட்சிமொழி மாநாட்டு நடவடிக்கைகளை அலசிப்பார்த்தால் அது ஒரு கேலிக்கூத்தாகத்தான் இருக்கிறதென்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் இந்த ஆட்சி மொழி மாநாட்டில் சட்டசபையிலுள்ள அங்கத்தினர்கள் மாத்திரம்தான் பங்கு கொள்ளவில்லை. இதற்கு நிதி அமைச்சர் பல காரணங்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்த மாநாடு சட்டசபை கட்சித் தலைவர்களுக்கு மாத்திரம் கூட்டப்பட்டதென்றால் அந்தக் கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ராமமூர்த்தி எவ்வாறு கலந்து கொள்ளமுடியும்? கலந்து கொள்ளக்கூடாது. இது சட்டவிரோதம் என்று சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஒரு அணாவுக்கு பஸ் டிக்கட் வாங்கினால்கூட அதில் "not transferable" என்று போடப்பட்டிருக்கிறது. அதுபோல் இந்த மாநாட்டிலே சட்டசபை அங்கத்தினராக இல்லாத ஒருவரை சேர்த்திருப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். திரு. கல்யாணசுந்திரம் அவர்கள் இந்த சட்டசபைக்கு வரமுடியவில்லை என்றால் அவர்களுக்கு பதிலாக அவர்களின் கட்சியைச் சார்ந்த திரு. ராமமூர்த்தி

11th February 1958] [Sri A. V. P. Asaithambi]

அவர்களை நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்தால், காங்கிரசை சேர்ந்த 152 அங்கத்தினர்களும் அதை ஒப்புக்கொள்வார்களா? நிச்சயமாக ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் அதற்கு சட்டம் இடம் கொடுக்காது.

Sri N. K. PALANISAMI : Sir, on a point of order எங்களைப் பொருத்தவரையில் திரு. ராமமூர்த்தி அவர்களை வரவேற்க நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

Mr. SPEAKER : How can it be a point of order? (Laughter.)

Sri A. V. P. ASAITHAMBI : திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியை ஒரு போதும் ஏற்றுக்கொண்டதில்லை. 1936-ம் வருஷத்தில் நடந்த இந்தி கிளர்ச்சியின் போது இந்தியை எதிர்த்து அப்போது இருந்த எங்கள் திராவிட கழகத் தோழர்கள் பலியானார்கள். அதற்குப் பிறகு திரு. அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியை ஆரம்பித்து போராடி அதை விரட்டி அடித்தோம். அதற்கு பிறகு திரு. மாதவ மேனன் கல்வி மந்திரியாக இருந்தபோது இந்தியை புகுத்த முயற்சி எடுத்தபோது, நாங்கள் கிளர்ச்சி செய்து இந்தியை விரட்டி அடித்தோம். இந்த சர்க்கார் மாத்திரம் அல்ல வேறு எந்த சர்க்கார் வந்தாலும் இந்தியை புகுத்த முடியாது என்று நான் உறுதியாக கூறுவேன். அவ்விதம் புகுத்தினால் திராவிட முன்னேற்றக் கழகம் அதை விரட்ட தயங்காது. போரிட்டே தீரும் என்று இந்த சமயத்தில் நான் பெருமையுடன் சொல்லவிரும்புகிறேன். நம் மதிப்புக்குறிய முன்னாள் கவர்னர் ஜனரல் திரு. ராஜகோபாலாச்சாரியாரும் கூட 'இந்த முயற்சியில் நான் தோற்றால் அண்ணாதுரை வெற்றி பெறுவார்' என்று சொல்லி இருக்கிறார், என்பதை இந்த சட்ட சபையில் நினைவுறுத்த விரும்புகிறேன். திரு. ராஜகோபாலாச்சாரியார் அப்படி சொல்லியிருப்பதின் அர்த்தம் என்ன? இந்தி இந்த நாட்டிலே புகுத்தப்பட்டால் திரு. அண்ணாத்துரை வெற்றி பெற்றுவிடுவார். அதற்கு பின்னால் தனித்தமிழ்நாடு பிரிவினை கொள்கை இந்த நாட்டில் வலுவடையும் என்பதுதானே அர்த்தம். இன்று இல்லாமல் போனாலும் ஒரு நாளைக்கு திராவிடநாடு பிரிந்தே தீரும். அந்த அளவிற்கு இந்த நாட்டிலே திராவிட முன்னேற்ற கழக கொள்கைகள் வளர்ந்திருக்கிறது. கவர்னர் உரையில் திராவிட முன்னேற்ற கழகத்தின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி எந்த விதமான குறிப்பும் இல்லாத காரணத்தினால், இந்த சபை முன் கொண்டுவந்த நன்றி தெரிவிக்கும் பிரேரேபணையை ஆதரிக்க முடியாமல் இருப்பதற்கு நாங்கள் வருந்துகின்றோம். ஜனவரி 3-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை போலீசாரால் நடத்திய கொடிய செயல்களுக்கு ஒரு பகிரங்க விசாரணையை அத்தியாவசியமாக ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri S. LAZAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கவர்னர் உரையின் மீது எனது கருத்துக்களை தெரிவிப்பதற்கு முன்பாக திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொண்டுவந்த நன்றி செலுத்தும் பிரேரேபணையை நான் முழுமனதுடன் ஒப்புக்கொள்வதோடு, இந்தத் தீர்மானம் வழக்கமாக இருக்கவேண்டிய முறையில் இல்லை என்ற காரணத்தினால் ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். சாதாரணமாக கவர்னருக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய பகுதியை தனியாக கொண்டுவரவேண்டுமென்பது கருத்து. அந்த முறையில் பார்க்கும்போது இந்தத் தீர்மானம் இருக்கவேண்டிய முறை இல்லை என்பதற்காக பின் வரும் திருத்தத்தைக் கொடுக்கிறேன் that a humble address be presented to the Governor in the following terms ஒன்று சொல்லி பிறகு that the Members of the Madras Legislative Assembly assembled here thank the Governor for the address by him to Members of both the Houses of Legislature on 8th February 1958 என்று இருக்கவேண்டுமென்று முதல் முதலாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[Sri S. Lazar] [11th February 1958

அடுத்தபடியாக கவர்னர் அவர்கள் தங்கள் உரையிலே இந்த மாகாணத்திலுள்ள மக்கள் மீது அவர்களுக்கு எவ்வளவு அக்கரை இருக்கிறது என்பதை காண்பிக்கக்கூடிய முறையில் ஒரு சில குறிப்புகளைத் தந்து இருக்கிறார். இதற்கு பிறகு முக்கியமாக இந்த நாட்டில் இருக்கக்கூடிய பிரச்னைகளை எப்படி அணுகவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். குறிப்பாக எல்லைப் பிரச்னை, மொழி பிரச்னை, மேலும் உணவு பிரச்னை இது போன்ற பல பிரச்னைகள் எழும்பக்கூடிய நேரத்தில் எந்தவிதமான கொள்கையைக் அரசாங்கம் கடைபிடித்தது கடைபிடித்துக் கொண்டிருக்கிறது என்று மிக அழகாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். மேலும் மக்களின் நல் வாழ்விற்கு என்ன என்ன கொள்கையைக் கைப்பற்றினால், அனுஷ்டித்துவந்தால் நாடு முன்னேறும் என்பதை மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தில் அனுசரிக்கக்கூடிய சில கொள்கைகளைப்பற்றியும், நிலச்சீர்த்திருத்தம் ஏற்படக்கூடிய முறை, உணவு நிலைமையை சமாளிக்கக்கூடிய கொள்கையை மிக அழகாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். இவைகளெல்லாம் நல்லமுறையில் நடைமுறையில் வருவதற்கு என்னென்ன சட்டங்கள் அவசியம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லி இருக்கிறார். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் கூறியிருக்கிறார். இந்த கவர்னர் உரையின் மீது பேசுகின்ற நேரத்திலே சில அங்கத்தினர்கள் அதில் இல்லாத பல கருத்துக்களை கூறி வருகிறார்கள். ஏதோ சரித்திரத்தைச் சொல்லுவதுபோல் வரிசை கிரமமாக எடுத்துச்சொல்லிவருகிறார்கள். கவர்னர் உரையாகப்பட்டது அரசாங்கத்தின் பாலிசி ஸ்டேட்மெண்டாக, இருப்பதனால் அதை அந்த முறையில் பேசவேண்டும். குறிப்பாக, நாட்டில் என் ஒற்றுமை தேவை என்பதுபற்றி கவர்னர் அவர்கள் தமது உரையில் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஒற்றுமையுடன் இல்லாத எந்த நாடும் முன்னுக்குவந்ததில்லை என்பது உலகமறிந்த சரித்திரம். எந்த ஒரு வேலையைச் செய்துமுடிப்பதற்கும் ஒற்றுமையே ஆதாரமாக இருக்கிறது.
9-40 a.m. ஆகவே பிளவு மனப்பான்மை இருக்கவே கூடாது. பிளவு மனப்பான்மை உள்ள எந்த நாடும் முன்னுக்கு வந்ததே கிடையாது. ஆகவே தான் ஒற்றுமை அவசியம் என்பதை கவர்னர் அவர்கள் அழகாக எடுத்துரைத்தார்கள். அதை உணராமல் அரசியல் கட்சிகளின் கொள்கைகளை அழகாக எடுத்துச்சொல்லி அவைகளின் பிளவு மனப்பான்மையை விவரித்து நாம் தனி நாடாகப் பிரிய வேண்டுமென்று இந்த சபையில் கூறுவது சரியல்ல. ஆகவே நாட்டில் ஒற்றுமை அவசியமென்று கவர்னர் அவர்கள் கூறியதை நாம் முற்றிலும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை விட்டுவிட்டு, பிரிவு மனப்பான்மையுடன் செய்த கிளர்ச்சிகளுக்கு போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கப்படவில்லை என்றும், அவைகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்றும் இந்த சபையில் பேசுவது முற்றிலும் பொருத்தமற்ற வாதமாகும்.

அடுத்தபடியாக, மொழிப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், அதை அணுகவேண்டிய முறையே வேறு என்று கூற விரும்புகிறேன். எந்தப் பிரச்னையை அணுகும்போதும் பொதுமக்களின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டு அதற்குத் தீர்வுகாண வேண்டும். அரசியல் கட்சி மனப்பான்மையுடனோ ஒரு தனிப்பட்ட மனிதனின் கொள்கை அடிப்படையிலோ பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முயன்றால், அதனால் ஏற்படும் பலன் பொது மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்காது ; அது ஒரு தனி மனிதனுக்கு நன்மை பயப்பதாகவோ ஒரு அரசியல் கட்சிக்கு நன்மை பயப்பதாகவோ தான் இருக்கும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, நமது மாநில அரசாங்கம் ஆட்சி மொழி சம்பந்தமாகக் கடைப்பிடித்துவரும் கொள்கையானது இந்த மாநிலத்தால் மட்டுமின்றி அகில இந்தியா பூராவாலும் ஒத்துக்கொள்ளப்படக்கூடிய கொள்கையாக இருக்கிறதென்றால், அதுகுறித்து நாம் பெருமைப்பட வேண்டும் ; அதை விட்டுவிட்டு அரசாங்கத்தின் கொள்கையில் குற்றம் குறை இருப்பதாகச் சொல்வது நம்மை நாமே தாழ்த்திக்கொள்வதாக ஆகுமே தவிர, அதனால் எந்த நல்ல காரியத்தையும் செய்யமுடியாது.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு முக்கியமான கருத்தை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். மத்திய அரசாங்கம் சம்பந்தப்படாத துறைகளில் ராஜ்ய மொழிகளில் அரசாங்க நடவடிக்கைகளை நடத்த வேண்டு

11th February 1958] [Sri S. Lazar]

மென்பது எல்லோராலும் முற்றிலும் ஒத்துக்கொள்ளப்பட வேண்டியது தான். ஆனுல் மருத்துவம். நாட்டின் விஞ்ஞானம் எஞ்சினியரிங் போன்ற டெக்னிகல் துரைகளில் கூடியமட்டும் ஆங்கிலததை வைத்துக்கொள்வது தான் நல்லது என்று கூற விரும்புகிறேன். இந்தக் கருத்தையும் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமீபத்தில் ஒரு சில பெரிய மேடைகளில் எடுத்துச்சொல்ல மற்றவர்களும் அதற்கு ஒப்பும்படியான ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியிருப்பது, காங்கிரஸ் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் மட்டுமின்றி இந்த அரசாங்கத்திலும் இந்த ராஜ்ஜியத்திலும் உள்ள அத்தனை பேரும் பெருமைப்படத்தக்க காரியமாகக் கருதப்படவேண்டும். அதை விட்டுவிட்டு மொழிக் கொள்கையில் குற்றம் குறை இருப்பதாகக் கூற முயற்சிப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

அடுத்தபடியாக, எல்லைப் பிரச்னைகளில் நல்ல முடிவுகள் கண்டிருக்கி றேம். தனிப்பட்ட நபர்களோ கட்சிகளோ தாங்கள் எதிர்ப்பார்த்த முடிவு ஏற்படாததால் இந்த முடிவில் குற்றங்குறை காண முயற்சிக்கக்கூடுமே தவிர, பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நோக்கும் யாரும் இது நல்ல முடிவு என்றுதான் கருதமுடியும்.

அடுத்தபடியாக, பிளவு மனப்பான்மையினல் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதை இப்போது நாம் கண்கூடாகக் காண்கிறேம். பாஷை அடிப்படையில் ராஜ்யங்கள் பிரிந்த பிறகு, பல ராஜ்யங்கள் சம் பந்தப்பட்ட பொதுநலக் காரியங்களைச் செய்வதற்காக வட்டாரக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. வட்டாரக் குழுக்கள் அந்தக் காரியங்களை கவனிக்கும்போதும் பலதரப்பட்ட கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நாட்டில் ஒற்றுமை மிகவும் அவசியம் என்பதை இது எடுத்துகாட்டுகிறது. பெரிய ராஜ்யங்களாக இருந்திருந்தால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்பட்டிருக்காது ; நாட்டின் பல ராஜ்யங்களின் தேவைகளும் சுலபமாகப் பூர்த்தி செய்யப்படக் கூடிய சூழ் நிலை இருந்திருக்கும் ; பெரிய ராஜ்யத்தின் ஒரு பகுதியிலுள்ள உபரிச் செல்வங்களை பற்றாக்குறைப் பகுதிகளுக்கு எளிதில் கொண்டு போக முடியும்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்களுடைய உரையில் நிலச்சீர்திருத் தத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னைப் பொருத்தவரையிலும், சரியான நியாய வாரச் சட்டத்தையும், விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கும் சட்டத்தையும் இயற்றிய பிறகும் நில உடைமைக்கு உச்ச வறம்பு நிர்ணயிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்றுதான் தோன்றுகிறது. இந்த இரு சட்டங்களும் வந்த பிறகு, பெரிய நிலப் பிரபுக்கள் தங்கள் நிலங்களை விற்கவேண்டுமென்றே எண்ணம் கொண்டிருக்கிறுர்களே தவிர, மேலும் நிலம் வாங்க வேண்டும் என்று எண்ணவில்லை. ஆகவே நில உடைமைக்கு உச்ச வறம்பு நிர்ணயிக்கும் சட்டத்தை இயற்றினல் அதனுல் ஏதாவது பிரயோஜனம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை.

அடுத்தபடியாக, திருச்சி ஜில்லா சம்பந்தமாக ஒரு அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு, நாம் எதிர்பார்த்ததற்கு மாறுன விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன். நியாய வாரச் சட்டத்தையும் நில வெளியேற்றத் தடுப் புச் சட்டத்தையும் கொண்டுவந்தபோது திருச்சி ஜில்லாவில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்தக் கொந்தளிப்பு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தான் ஒரளவு நீங்கியது. அங்கே ஒரளவிற்கு சமாதான நிலைமை ஏற்பட்டபோது இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் மறுபடியும் அங்கே மாபெரும் கொந்தளிப்பு ஏற்பட் டிருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். நாம் எதிர்ப்பார்த்த பலன் அவசரச் சட்டத்தால் கிடைக்கவில்லை என்பதை நாம் உணர வேண்டும். குறிப்பாக 6 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் நிலம் உடைய சிறு நிலக்காரர்கள் மிகவும் கஷ்டப்படுகிறுர்கள். நிலச் சட்டங் களில் அவர்களுக்கு அவசியமான விதிவிலக்கு அளிக்கும் திருத்தங்களைச் செய்யப்போவதாக அரசாங்கம் அடிக்கடி சொல்லியிருந்தும்கூட, இது வரையில் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். இதை அரசாங்கத்திற்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

[Sri S. Lazar] [11th February 1958

அடுத்தபடியாக, கல்வித் துறையிலும் மற்ற பல துறைகளிலும் ஹரிஜன மக்களுக்கு எத்தனையோ சலுகைகளைக் கொடுக்கும் இந்த அரசாங்கம் அவர்களிடம் மதத்தின் அடிப்படையில் எந்தவிதமான பாரபட்சமும் காட்டக்கூடாதென்ற உண்மையை எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். அப்படியிருக்கும்போது, ஹரிஜன மக்களுக்குள்ளே பிளவு இருப்பதாகக் கருதி ஒரு மதத்தைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்குச் சலுகைகள் அளித்து வேறு மதத்தைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்குச் சலுகைகள் மறுக்கும் முறையில் இந்த அரசாங்கம் செயல்படுவதானது, உள்ளபடியே மக்களிடையே பிளவு மனப்பான்மையை உண்டாக்குவதாக இருக்கிறதே தவிர எல்லோருடைய நன்மையையும் கருதிச் செயல்படுவதாக இல்லை.

பொதுவாக கவர்னர் பெருமானுடைய உரையில் உள்ள கொள்கைகளும் அம்சங்களும் நல்ல முறையில் அமைந்திருப்பதால் அவைகளை சபை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

9-50 a.m. Sri J. MATHA GOWDER: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் அங்கு ஏற்கனவே ஒரு பிலிம் உற்பத்திசாலை ஏற்படுத்தப்படும் என்று சென்ற ஆண்டிலே சொல்லப்பட்டது. இந்த ஆண்டிலே அது, கொடைக்கானலுக்கு மாற்றப்படுகிறது என்று கேள்விப்பட்டு நாங்கள் மிகவும் வருந்துகிறோம். அதே நேரத்திலே நீலகிரியின் துரதிர்ஷ்டம், அங்கு கோடை காலத்திலே சட்டசபை நடத்த வேண்டுமென்று சென்ற கூட்டத்திலே நாங்கள் கேட்டிருந்தும் இந்த கோடைகாலத்திலேகூட சட்டசபை நீலகிரிக்கு வருவதாகத் தெரியவில்லை. வாருங்கள் என்று நாங்கள் அழைத்தும்கூட வருவதற்கு அங்கத்தினர்கள் தயங்கித் தயங்கி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கட்சிகளைப் பார்த்துக் கொண்டு அல்லது வேறு அரசியல் துறைகளை வைத்துக் கொண்டு வர தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். உங்களிடம் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அரசியல் காரணத்திற்காக நாங்கள் உங்களை நீலகிரிக்கு அழைக்கவில்லை. ஆனால் நீலகிரியிலுள்ள மக்களின் ஷேமத்திற்காகத்தான் உங்களை அங்கு வர அறைகூவி அழைக்கிறேன். அங்கு வந்தால் முன்பு வெள்ளைக்காரன் இருந்தபோது, வெள்ளைக்காரர்கள் டொமஸ்டிக் சர்வன்ட்ஸ்ஸாக, அவர்களது வீட்டு வேலை செய்யக் கூடியவர்களாக இருந்த பலர், இன்று வெள்ளைக்காரன் போன பிறகு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதால், அவர்களுக்கு ஓரளவு உதவியாய், அங்கு சட்டசபை நடத்துவதாக இருந்தால் வேறு மாகாணத்தில் இருப்பவர்களும் அங்கு சட்டசபை நடக்கும் காரணத்தால் நீலகிரி ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்று அங்கு மக்கள் வருவார்கள். அப்படி வரும்போது அங்குள்ள மக்களுக்கு அதனால் ஒரு நல்வாழ்வு ஏற்படும் என்ற காரணத்திற்காகத்தான் உங்களை நான் அங்கு அழைக்கிறேனே தவிர அரசியல் காரணத்திற்காக, உங்கள் அரசியல் சூதாட்டத்திற்காக நான் உங்களை அங்கு அழைக்கவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் நீலகிரி வாழ் மக்கள் சார்பாக உங்கள் எல்லோரிடமும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் நீலகிரியில் நெல் சாகுபடி செய்வதற்கு இடங்களிருக்கிறது. மலைப் பிரதேசம் என்றாலும்கூட நெல் சாகுபடி செய்ய சில இடங்கள் அங்கு இருக்கிறது. அந்த இடங்களை நெல் சாகுபடி செய்ய கேட்கும்போது, 'அந்த இடங்கள் ரிஸர்வ் பாரஸ்ட்டில் இருக்கிறது. பாரஸ்ட் நிலங்களை கொடுக்க சட்டம் இல்லை' யென்று சர்க்கார் சொல்கிறார்கள். அந்த இடங்களை நெல் சாகுபடி செய்வதற்கு உத்தரவு கொடுத்தால் நீலகிரி ஜில்லாவின் பற்றுக்குறையை நாங்களே தீர்த்துக் கொள்ளமுடியும் என்ற காரணத்தால், அந்நிலங்களை கூட்டுறவு முறையில் சாகுபடி செய்கிறோம் என்று கேட்டால் அவர்களுக்கு அந்த பாரஸ்ட் நிலங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக, கூடலூர் பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கு இன்னும் மலபார் சட்டம்தான் அமலில் இருக்கிறது. கூடலூரிலே மலபார் குத்தகைக்காரர் சட்டம் இன்னும் அகற்றப்படவில்லை. அங்கு ஜென்மி சட்டம் இன்னும் அமுலில் இருக்கிறது. அங்கு ஜமீன்தார்கள் நிலங்களை

11th February 1958] [Sri J. Matha Gowder]

வைத்துக் கொண்டு இன்னும் விவசாயிகளுக்கு தொல்லை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மலபார் நமது ராஜ்யத்திலிருந்து பிரிந்து போன பிற்பாடும் கூட இன்னும் மலபார் சட்டத்தை வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். ஆகவே, உடனடியாக மலபார் சட்டத்தை அங்கிருந்து எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற கூட்டத்திலே நான் இங்கு குறிப்பிட்டிருந்தேன். நீலகிரியில் தங்கம் நூறு ஆண்டுகளுக்கு முன்பு கண்டெடுக்கப்பட்டது. அதை பரிசீலனை செய்து மறுபடியும் அதை எடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் அதற்கு வேண்டிய எந்தமாதிரியான முயற்சியும் செய்யப்படுவதாகத் தெரியவில்லை. நீலகிரியில் அதிகமாக கனி வளங்கள் இருக்கின்றன. அக்கனி வளங்கள் பற்றி நன்கு ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமேஜான் என்ற பச்சைக் கல் அங்கு நீலகிரி பிரதேசத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டது என்று சிந்துவெளி நாகரீகம் என்ற சரித்திரத்தில் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த அமேஜான் பச்சைக் கல் குறித்து ஒரு ரிசெர்ச் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அங்கு கிடைக்கக் கூடிய பொருள்கள் குறித்து ஒரு ரிசெர்ச் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் சென்ற மாதத்தில் பட்டணத் திலே, அதாவது மதருஸிலே நடந்த சில சம்பவங்கள் குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் ஒரு கிராமப் பகுதியில் இருந்து வரும் காரணத்தால் அதைப் பற்றி உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். கிராம மக்கள் எல்லோரும் சென்ற மாதத்தில் இங்கு, மதருஸில் நடை பெற்ற கலவரத்தைப் பற்றி மிகவும் வெட்கப்படுகிறார்கள். நாங்கள் மிகவும் வேதனையும் படுகிறோம். நம்முடைய ஒப்பற்ற தலைவர் நேருஜி அவர்கள் மதருஸிற்கு வந்திருந்த போது இங்கு நடந்த காரியங்களைப் பற்றி நாங்கள் மிகவும் வெட்கப் படுகிறோம், வேதனைப்படு கிறோம். நான் கட்சியைப் பற்றி சொல்லவில்லை. இன்று ரஷ்யாவைப் பார்த்தால் அவர்கள் செயற்கை சந்திரனை வானில் மிதக்க விடுகிறார்கள். எனது தாய் மொழி, கன்னடம். ஆனால் நாங்கள் நாகரீகம் படைத்த வர்கள், நாங்கள் தமிழர்கள் என்று மார்தட்டிச் சொல்லக் கூடியவர்கள், ரஷ்யாவில் செயற்கைச் சந்திரனை வானில் மிதக்க விடும்போது இங்கு தமிழர்கள் நேருஜி வரும்போது எல்லோரும் சேர்ந்து செருப்பை வானத்தில் வீசுகிறார்கள் என்பதை நினைக்கும்போது நாங்கள் வெட்கப் படுகிறோம். கடலில் சப்மரைன்-ல் இருந்து குண்டுகளை எப்படி வெளியே வீசுவது என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் இக்காலத்தில் இங்கு தமிழ் நாட்டில் பார்த்தால் கருப்புக் கொடிகளில் கற்களை வைத்துக் கொண்டு வீசுவதைப் பார்க்கும்போது தமிழ் நாட்டு மக்களின் வீரத்தைப் பற்றி மெச்சுவதா அல்லது சிரிப்பதா என்று தெரியவில்லை. இவ்வளவு கேவலமான நிலைமை தமிழ் நாட்டில் இருக்கிறது. இது, பட்டணத்தில் உள்ளவர்களுக்கு வேடிக்கையாக இருக்கலாம் அல்லது பொழுது போக் காக இருக்கலாம் அல்லது அவர்களது சாமர்த்தியத்தைக் காண்பிப்பதாக இருக்கலாம். கிராமப் பகுதியில் உள்ள எங்களுக்கு அவைகளைப் பற்றி பத்திரிகைகளில் பார்க்கும்போது கிராமப் பகுதியில் இருப்பவர்களை விட பட்டணத்தில் இருப்பவர்கள் மிகவும் பின் தங்கிப் போயிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அறிகுறியாக இருக்கிறது, என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஐந்து பஸ்கள் மதருஸில் எறிக்கப்பட்டிருப்பதாக பத்திரி கைகளில் பார்த்தேன். ஒரு லேலண்ட் பஸ், ரூ. 1,10,000 அல்லது ரூ. 1,20,000 விலையாகிறது. அப்படி பார்க்கும்போது ஐந்து பஸ்களுக்கு சுமார் ஆறு லட்சம் ரூபாய் வரை ஆகிறது. இந்த மாகாணத்து மக்களின் ஆறு லட்சம் ரூபாய் கரியாக்கப் பட்டிருக்கிறது. இவைகள் யாரால் செய்யப் பட்டது எதற்காக செய்யப் பட்டது என்பதைப் பற்றி நாம் இங்கு சர்ச்சை செய்ய வேண்டிய தில்லை. அதைப் பற்றி பொதுமக்களுக்கு நன்கு தெரியும். நன்கு சேமிப்பு செய்து நாட்டிற்கு நலம் புரிய, நாட்டிற்கு நல்ல சேவை செய்ய வேண்டுமென்று நாங்கள் இங்கு இருக்கும் போது ஆறு லட்சம் ரூபாயை கரியாக்கியிருக்கிறார்கள். பொதுமக்களின் பஸ்கள் கல்லால் அடிக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் பார்க்கும்போது நாம் வெட்கப் படத்தான் வேண்டியிருக்கிறது. அரசியல் கட்சிகளை வளர்ப்பதற்கு மக்களின்

பணத்தை கரியாக்குவதைக் கண்டு எங்கள் மனம் வேதனைப்படுகிறது. தாங்கள் பெரியவர்கள், தாங்கள் எதையாவது செய்து எந்தக் காரியத்தையும் சாதித்துவிடலாம்.

SRI C. N. ANNADURAI : அங்கத்தினர் அவர்கள் கருப்பு கொடி காட்டியதையும், பஸ்களைக் கொளுத்தியதையும் ஒன்றாக இணைத்து பேசிக் கொண்டு போகிறார்கள். கருப்பு கொடி காட்டியது திராவிட முன்னேற்ற கழகத்தினர், பஸ்களைக் கொளுத்தியது காலிகள். ஆகவே, இவ்விரண்டையும் ஒன்றாக இணைத்துப் பேசுவது பஸ்களைக் கொளுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரே என்று பொருள் படுவதால், இது வழக்கில் இருப்பதால் அது குறித்து சொல்வது பொருத்தமல்ல என்று உங்களிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : கேஸ் இருந்தால் அதைப்பற்றிப் பேச வேண்டாம்.

SRI J. MATHA GOWDER : பத்திரிகைகளில் படித்தேன். திராவிட முன்னேற்றக்கழகக்காரர்கள் தான் கருப்புக் கொடி காட்டியதும், பஸ்களைக் கொளுத்தியதும் என்று பத்திரிகைகளில் படித்தேன்.

MR. SPEAKER : அது கேஸில் இருப்பதால் அதைப்பற்றி பேச வேண்டாமென்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வழக்கில் இருக்கிறதோ இல்லையோ எனக்கு தெரியாது. ஆனால் குறிப்பிட்ட ஏதாவது நபர்களைப் பற்றி பேசினால்தான் "ஸப்-ஜுடிஸ்" ஆகும். பஸ்கள் கொளுத்தப்பட்டது உண்மையே. ஆகவே அதைப் பற்றி சொல்வது "ஸப்ஜுடிஸ்" ஆகாது.

SRI C. N. ANNADURAI : பஸ் கொளுத்தப்பட்டது பற்றி வழக்கில் இருக்கிறதோ இல்லையோ என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீயிட்ட வழக்கு ஒரு சாரார்மேல் இருக்கிறது. அங்கத்தினர் சொன்னது போல், பஸ்கள் கொளுத்தப்பட்டது, பஸ்களை கொளுத்தியவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினராய் இருக்கலாம் என்று பேசப்படுகிறது. பத்திரிகை பாஷையில் அப்படி போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அது வழக்கில் இருப்பதால் அதைப்பற்றி பேசுவது சரியல்ல.

MR. SPEAKER : கோர்ட்டில் இந்த கேஸ் இருப்பதால் பஸ்கள் கொளுத்தப்பட்டது பற்றி பேசலாமே தவிர இவர்கள்தான் கொளுத்தினார்கள் என்று சொல்வது நல்லதல்ல.

SRI J. MATHA GOWDER : யாரைப் பற்றியும் நான் குறிப்பிடவில்லை. பத்திரிகைகளில் வந்த செய்தியைப் பற்றித்தான் சொல்கிறேன்.

10-00 a.m. அதே நேரத்தில் நாம் பார்க்கிறோம். இப்போது அருமை ஆசைதம்பி அவர்கள் பேசியிருக்கிறார்கள். நேற்றைக்கு அவர்கள் பேசும்பொழுது நேருஜி வரும்பொழுது அவர்களுக்கு மாத்திரம் கருப்புக்கொடி காட்டக் கூடாது என்று ஒரு சட்டம் இருக்கிறதா என்று கேட்டார். அவ்விதம் நேருஜிக்கு என்று ஒரு தனிச்சட்டம் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். எல்லோருக்கும் ஒரு சட்டம் தான். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களை இங்கு கைதியாக்கி மஜிஸ்ட்ரேட் முன்னால் கொண்டு போகும்பொழுது அவர்களை சரியான முறையில் நடத்தப்படவில்லை என்றும் அவர்களுக்கு நாற்காலி கொடுக்கப்பட்டு உட்கார வைக்கவில்லை என்றும் எடுத்துச்சொன்னார்கள். கைதியாக்கி கொண்டு வரும் பொழுது சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தாலும் சரி, அல்லது யாராக இருந்தாலும் சரி ஒரே மாதிரி, ஒரே முறையில் நடத்தப்பட வேண்டுமே தவிர சட்டசபை அங்கத்தினர்களுக்கு என்று தனியாக சட்டம் கிடையாது என்பதை நமது ஆசைத்தம்பி அவர்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன்.

SRI C. N. ANNADURAI : On a point of explanation. கைதிகளுடைய தராதரத்தை அனுசரித்து சிறைச்சாலைகளில் பல பிரிவுகளாக பிரித்து வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக சமுதாயத்தில்

11th February 1958] [Sri C. N. Annadurai]

இருக்கிற அந்தஸ்துக்கு தகுந்தபடி அதிகாரிகள் நடத்தவில்லை என்ப தான் புகார், இதல்லாமல் இதற்காக சட்டம் வரவேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri J. MATHA GOWDER : அரஸ்டு செய்யப்பட்டவர்களை உடனே சிறைச்சாலைக்கு கொண்டு போகவில்லை. மாஜிஸ்ட்ரேட் என்கிற முறையில் போலீஸ் கமிஷனர் முன்பு தான் கொண்டு போகப்பட்டனர்.

Sri C. N. ANNADURAI : நாங்கள் கைதிகளாக கொண்டு போகப் படவில்லை, போலீஸாரால் அழைத்துச்செல்லப்பட்டோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Sri J. MATHA GOWDER : போலீஸ் கமிஷனர் மாஜிஸ்ட்ரேட் என்ற ஹோதாவில் அவர்கள் முன்பு கொண்டு போகப்பட்டனர். அப் பொழுது உட்காருவதற்கு இடம் கொடுப்பதற்கு சட்டத்தில் இடம் கிடையாது என்று தான் நான் தெரிந்திருக்கிறேன். நேருஜிக்கு மாத்திரம் தனி சட்டம் எதற்கு என்று கேட்கிறவர்கள் சட்டசபை அங்கத்தினர்களுக்கு மாத்திரம் சேர் போட்டு உட்கார வைக்க வேண்டுமென்றால், அதற்கென்று ஒரு சட்டம் வேண்டுமென்றால் இந்த சட்டமன்றத்தில் கொண்டு வந்து ஏற்படுத்திக்கொள்ளலாம். அப்படி தங்களுக்கு மாத்திரம் நியாயம் கேட் பவர்கள், சென்னை சட்டசபை அங்கத்தினர்களுக்கு இவ்வளவு வேண்டு மென்று கேட்டால் நேருஜிக்கு இருக்கிற அந்தஸ்துக்கு எவ்வளவு தான் இருந்தால் என்ன ? இதை அவர்கள் மறந்து விட்டார்கள் என்று எண்ணுகிறேன். இவ்வளவு தூரம் மறந்துவிட்டு பேசுகிறார்களே என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்) வெளிநாட்டி லிருந்து விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து வந்தி ருக்கும் விஞ்ஞானிகள் நம் நாட்டைப்பார்த்து விட்டு போகும் போது என்னவெல்லாம் சொல்லிவிட்டு போகிறார்கள். எப்போதுமே பெருமை யாக சொல்லிவிட்டு போகிறார்கள். அதே போல் தான் நம் நாட்டிலிருந்து போகக்கூடியவர்களும் வெளிநாட்டில் நம் நாட்டைப்பற்றி பெருமையாக பிரசாரம் செய்து விட்டு வருகிறார்கள். நேரடையாக பார்த்தால் இன் றைக்கு செயற்கை சந்திரனை அயல் நாடுகளில் வானத்தில் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் தமிழ் நாட்டில் செருப்பை வானத்தில் பறக்கவிடுகிறார்கள் என்பதை மனம் நொந்து தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் மொழி பிரச்னை, மாகாணப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், இன்று காலையில் பார்த்தேன், தமிழ்நாடு அமைக்க ஒரு தனிக்கட்சி திரு ஆதித்தன் அவர்களால் ஆரம்பிக்கப்போவதாக பத்திரிகையில் பார்த்தேன். ஆனால் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்களோ நான்கு மாகாணங்களை கொண்ட திராவிட நாடு வேண்டுமென்று சொல்லு கிறார்கள். இவர்கள் தமிழ்நாடு தனியாக வேண்டுமென்று கேட்கிறார்கள். தமிழரசு கட்சிக்காரர்களோ மத்திய அரசாங்கத்தின் கீழ் எல்லா அதிகாரங் களையும் கொண்ட தனி அரசு வேண்டுமென்று கேட்கிறார்கள். இவ்விதம் நான்கு மாகாணங்களும் ஒரே நாடாக இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வரும் சமயத்தில், மலையாள போலீஸ்காரர்களைப்பற்றி சொல்லும் இடங்களில் மலையாள போலீஸ்காரர்கள் அடிதடி ஏற்பட்டபொழுது அடிக் கும்பொழுது " சவட்டிக்கொல்லடா " என்று சொன்னார்கள் என்று பத்திரிகையில் வருவதை நாம் பார்க்கிறோம்.

Mr. SPEAKER : எனக்கு மலையாளம் அவ்வளவாக தெரியாது; இருந்தாலும் இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது நல்ல வார்த்தை அல்ல என்று நினைக்கிறேன்.

Sri J. MATHA GOWDER : நான் பத்திரிகையில் வந்ததைத்தான் கூறினேன்.

Mr. SPEAKER : பத்திரிகையில் வந்திருந்தாலும் அதைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri J. MATHA GOWDER : பத்திரிகையில் இப்படிப்பட்ட தமிழர், மலையாளிகள் என்ற பிரச்சாரங்களை செய்து வரும்பொழுது அங்கே இருக்கிற கேரள மக்கள் எப்படி திராவிட நாட்டுக்கு ஒத்துக்

[Sri J. Matha Gowder] [11th February 1958

கொள்வார்கள் என்று தெரியவில்லை. அதே மாதிரிதான் தெலுங்கர்களும் இருந்து வருகிறார்கள். அதே மாதிரி நீலகிரியில் இருக்கும் கன்னடம் பேசுபவர்கள் தங்களுடைய நாடாகிய கர்நாடகத்தோடு சேரும்பொழுது இப்பொழுது கட்டெறும்பாயிருப்பது பின்னால் குட்டெறும்பாகிவிட்டால் என்ன செய்வது என்று புரியவில்லை. அதன் பின்னால் இவர்கள் எப்படி திராவிட நாடு அமைக்க முடியும் என்பதை யெல்லாம் இவர்கள் விவரமாக எடுத்துச்சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன். (இச்சமயத்தில் கனம் உதவி சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்.)

Sri K. RAMACHANDRAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரையின்மீது சில குறிப்புகளை சொல்ல ஆசைப்படுகிறேன். முதலில் கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையில் முக்கியமாக தமிழை அரசாங்கத்தில் அரசாங்க மொழியாக ஆக்கியதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதிலே 1922 ஆபீஸ்களில் தமிழ்மொழியை கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன். அதில் ஒரு சில குறைகளை சொல்ல விரும்புகிறேன். அதாவது தமிழை அரசாங்கத்தில் கொண்டுவரப்படுகிற இந்த சமயத்தில் மந்திரிகள் அனைவரும் இதை நடைமுறையில் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று சொல்ல ஆசைப் படுகிறேன். உதாரணமாக நமது முதன் மந்திரி அவர்கள் சமீபத்தில் கைத்தறி வார விழாவிற்கு அனுப்பியிருந்த வாழ்த்து செய்தியை ஆங்கிலத்தில் அனுப்பியிருந்தார்கள். அதை ஆங்கிலத்தில் படிக்கப் பட்டதை பார்த்து விசனப்பட்டேன். மந்திரிகளாய் இருப்பவர்கள் தமிழை நடைமுறையில் கொண்டுவருவதற்கு இதுபோன்ற சந்தர்ப்பங்களில் தமிழில் அனுப்பியிருந்தால் மற்றவர்களுக்கும் அது வழிகாட்டியாக இருந் திருக்கும், என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய மொழி எதுவாயிருக்கவேண்டும் என்பதைப்பற்றி சட்டசபை கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒரு விக்ஞாபனத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி இப்போது அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அடுத்ததாக ஸோனல் கவுன்சிலை பொறுத்தவரையிலும் இதனுடைய மீட்டிங்குகள் எல்லாம் மிக முக்கியமானவை. மூன்று அரசாங் கத்திற்கும் பொதுவான கொள்கையை வகுத்துக்கொள்வதற்கு என்று இருக்கக்கூடிய இந்த கவுன்சில் முக்கியமானதாகும். குறிப்பாகப் பார்த்தால் என்.ஜி.ஓ.க்களுடைய பிரச்னையை எடுத்துக்கொண்டால் இந்த மூன்று மாகாணங்களிலும் இந்த பிரச்னை இருக்கிறது. இதில் அடிப்படையாக தீர்வுகாண்பதற்கு இந்த ஸோனல் கவுன்ஸில் பயன் படும். அதே மாதிரிதான் இன்று விலைவாசிகள் எல்லாம் கட்டுப்படுத்த முடியாத நிலையில் போய்க்கொண்டிருக்கிறது. இதுவும் மூன்று மாகாணங்களுக்கும் பொதுவான பிரச்னையாக இருந்துகொண்டு இருக்கிறது. பற்றுக்குறை நாட்டில் இருக்கிறது. விளைச்சல் ஓரளவு உயர்ந்திருக்கிறது. என்றாலும் பற்றுக்குறையைப் போக்குவதற்கு ஸோனல் கவுன்ஸிலில் விவாதித்து முடிவு எடுத்தால் நல்லதாக இருக்கும். இன்னும் தண்ணீர் பிரிவினை விஷயத்திலும் கேரள முதல் மந்திரி நம்பூதிரி பாட் அவர்கள் இதைப்பற்றி குறிப்பிடும்பொழுது இந்தியா ஒரே யூனிட் என்ற முறையில்தான் இந்த பிரச்னையை நாங்கள் அணுகுகிறோம். அந்த முறையில் சென்னை அரசாங்கமும் அணுகுமானால் இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்னையை சென்னை அரசாங்கமும் இதே விதத்தில் அணுகி இதற்கு நல்ல முடிவு எடுக்கும் என்று நான் நம்புகிறேன். பரம்பிக் குளம் பிரச்னையில் தீர்வு காணுவதற்கு ஆட்சேபனை இருக்க முடியாது என்று நம்புகிறேன். அடுத்தபடியாக local self Government சம்பந்தப்பட்ட விஷயங்களை பொறுத்தவரையில் இப்போது வரப்போகும் சீர்திருத்தங்களை கொண்டுவருவதற்கு வருஷக்கணக்கில் காத்திராமல், இப்போது இருக்கும் ஸ்பெஷல் ஆபீஸர்களிடமே விட்டு வைக்காமல் சீக்கிரமாகவே புதிய திட்டங்களை கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நிலச் சீர்திருத்தத்தை பொறுத்தவரையிலும் இதைப்பற்றி சமீபத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபையிலும் தீர்மானங்கள் போடப்பட்டிருக்கிறது. அதில் நிலங்களை மேற்கொண்டுவாங்குவதை தடைசெய்யவேண்டுமென்று சட்டம் கொண்டுவரவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய பெரிய நிலச்சுவான்தாரர்கள் எல்லாம் அதிகமாக நிலங்கள் வாங்குவதில்லை. மேலும் மேலும் அவர்கள் நிலங்கள் வாங்குவதை நிறுத்தி விட்டார்கள். ஆகையால் இந்த சட்டம் இப்போது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்த சட்டத்தை வைத்துக்கொண்டு நாங்கள் உச்ச வரம்பு திட்டத்தைகொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுவதை உண்மையில் ஒப்புக்கொள்ளமுடியாது. ஆகவே உடனடியாக இதற்கு வேண்டிய சட்டங்களை உடனடியாகவே இந்த செஷனிலேயே கொண்டுவந்து பெருமையடைந்து கொள்ளும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இந்த விளைவு திட்ட காலத்தில் 12·79 லட்சம் டன் அதிகமாக வேண்டுமென்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்காகச் சொல்லப் பட்டுள்ள முறைகள் போதுமானதாக இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேல் நாடுகளிலெல்லாம் கூட்டுறவு முறையினால் விவசாயத்தில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறோம். இதையெல்லாம் இங்கு கொண்டுவந்தால்தான் அதிக விளைச்சலைப் பெற முடியும். இங்குமங்கும் நல்ல அபிவிருத்தியடைந்த விதைகளையும், உர வகைகளையும் கொடுப்பதால் மட்டும் அதிக நன்மை பெற முடியாது. கூட்டுறவு முறையில் விவசாயத்தைக் கொண்டுவருவதற்கு எந்தவிதமான அறிகுறியும் காணப்படவில்லை. அதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். 10-10 a.m.

அடுத்தபடியாக நில வெளியேற்றத்தைப்பற்றிச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டுமென்று ஆசைப் படும்போது சிவகங்கை, ராமநாதபுரம் முதலிய இடங்களில்—நான் இதைச் சொல்லும்போது நிதி மந்திரி அவர்கள் கோபப் படுவார்கள். நான் இதை இங்கு முன்பே பல முறை கூறியிருக்கிறேன்.—பலர் வெளி யேற்றப்படுகிறார்கள். இதை நல்ல முறையில், ஜனங்கள் பிரசினையாக இருக்கிற காரணத்தினால், பரிசீலனை செய்து சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டும். விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இருபது ஆயிரம் பேர், 30 ஆயிரம் ஏக்கரிலிருந்து வெளியே போயிருக்கிறார்கள். இந்த நிலம் நன்றாக விளையக்கூடிய நிலம், அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். விளைச்சலை அதிகப்படுத்தவேண்டுமென்ற காரணத்தால், இதை நல்ல முறையில் ஒரு கமிட்டி போட்டு, அல்லது ஒரு உயர்தர அதிகாரியை நியமித்து, அல்லது அந்தப் பகுதியை அறிந்தவர்களைக்கொண்டு முக்கூட்டு கமிட்டி ஏற்படுத்தி இதைப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையிலே ஒரு முக்கியமான அம்சம் விடப்பட்டிருக்கிறது. இந்த பிளாக் அபிவிருத்தித் திட்டங்களினால் கிராம லெவலில் அபிவிருத்தி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதுவே அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். இந்த வருஷத்தில் எத்தனை பிளாக்குகள் கொண்டுவரப்படுமென்று சொல்லப்படவில்லை. அதைப் பற்றிய அறிகுறியே தென்படவில்லை. சென்ற வருஷம் 23 பிளாக்குகள் கொண்டுவரப்போகிறோம் என்று சொல்லியிருந்தார்கள். இந்த வருஷம் ஒன்றும் குறிப்பிடப்படாததால் எந்தவிதமான பிளாக்கும் இந்த வருஷம் இல்லை என்று கொள்வதா என்று தெரியவில்லை. இதைப்பற்றித் திட்ட வட்டமாகத் தெரிவிக்கவேண்டும். பிளாக் அபிவிருத்தித் திட்டத்தைத் பொறுத்துத்தான் இருக்கிறது கிராமங்களில் அபிவிருத்தி என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த 1½ வருஷ காலமாக பிளாக் அபிவிருத்தித் திட்டம் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களில் எந்த விதமான வேலையும் நடக்காமல் இருக்கிறது. ஒவ்வொரு பிளாக்கிலும் 6,000, 7,000 ரூபாய் சிப்பந்திகளுக்குச் சம்பளம் மட்டும் கொடுக்கப்பட்டு எந்தவிதமான அபிவிருத்தி வேலையும் இல்லாமல் இருக்கிறது. இதையெல்லாம் நல்ல முறையில் சரியானபடி திருத்தி, பிளாக் அபிவிருத்தித் திட்டங்களை பல பிரதேசங்களில்

[Sri K. Ramachandran] [11th February 1958

ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக பரமக்குடி, முதுகளத்தூர், அருப்புக் கோட்டைப் பிரதேசங்களை இந்த பிளாக் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். இதைப்பற்றி மத்திய மந்திரி தத்தார் அவர்களும் சொல்லியிருக்கிறார். மிகவும் பின் தங்கிய பிரதேசமாக இருப்பதால்தான்—மந்திரி கக்கன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்—இந்தமாதிரி சண்டையும் கலகமும் ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார். இந்தப் பிரதேசத்தை ஸ்பெஷல் புரோகிராமின் கீழ் கொண்டுவந்து அபிவிருத்தி செய்யவேண்டு மென்று சொன்னார்கள். கலகம் நிகழ்ந்த அந்தப் பகுதிகளை மட்டும் இந்த வருஷத்திலே, அதாவது பரமக்குடி, முதுகுளத்தூர், அருப்புக் கோட்டை முதலிய இடங்களை, பிளாக் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிஸ்ட் கலெக்ஷன்பற்றி கொள்கை என்ற முறையில் சொல்ல வேண்டியிருக்கிறது. வரி வசூலைப்பற்றி ஏற்கெனவேயுள்ள, வெள்ளைக்காரர்கள் காலத்துப் பழைய சட்டம் இப்போதும் இருக்கிறது. குழந்தைகளைப் போல் வளர்த்து வருகிற பயிர்களை அப்படியே போய் ஜப்தி செய்துவிடுகிறார்கள். நம்முடைய விவசாயிகளுடைய நிலைமை நமக்குத் தெரியும். அறுவடை செய்துதான் வரி கட்டவேண்டும். அதைத் தவிர வேறு வழி கிடையாது அவர்களுக்கு. பயிர் செய்வதைத் தடுக்கப் பழைய சட்டம் இருக்கிறது. உண்மையிலேயே அவர்களை நிர்ப்பந்தித்தால் அவர்கள் தங்களிடம் இருப்பவைகளை அடகு வைத்தோ அல்லது தானியங் களைக் குறைந்த விலைக்கு விற்றோதான் கொடுக்கவேண்டும். அறுவடை செய்த பிறகு இரண்டு மாதத்திற்குள் அவர்கள் வரிப் பணத்தைக் கட்டா விட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். அம்மாதிரி சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இந்த சந்தர்ப்பத்தில் சபாநாயகர் சபையில் வந்தமர்ந்தார்.)

ஹாண்ட் லூம்ஸைப் பொறுத்த வரையில் 1957-ம் வருஷப் புள்ளி விவரப்படி மில்களில் 540 லட்சம் கெஜமும், ஹாண்ட் லூம்ஸ் 175 லட்சம் கஜமும் நம் நாட்டில் உற்பத்தி ஆகின்றதாகத் தெரிகிறது. அதில் 40 லட்சம் கஜம் சென்னையில் மட்டும் ஹாண்ட் லூம்ஸில் உற்பத்தி செய்யப் படுகிறது. மொத்தத் துணியில் 4-ல் ஒரு பங்கு ஹாண்ட் லூம்ஸில் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி ஹாண்ட் லூம்ஸில் உற்பத்தி செய்யப் படும் துணியில் நம் சென்னை மாகாணத்தில் மாத்திரம் 4-ல் ஒரு பங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால் இந்த ஹாண்ட் லூம்மை பொறுத்த வரையில் தனிக் கவனம் இருக்கவேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது. மந்திரி அவர்கள் பல கூட்டங்களில் இதைப்பற்றிப் பேசியிருக்கிறார். வருஷா வருஷம் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசுகிறோம். ஆனால் நடை முறையில் என்ன செய்கிறார்கள். இதைப்பற்றி பிறகு சிந்திப்பதில்லை. இப்போது 900 சங்கங்கள் கோவாபரேடிவ் பீல்டில் வந்திருக்கின்றன. 180,000 நெசவுத் தறிகள் கூட்டுறவு முறையில் வேலை செய்து வருகின்றன. அவர்கள் நல்ல லாபம் அடைந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் விஸ்தரிக்கப் படவேண்டும். சென்னை அரசாங்கம் இந்தத் திட்டங்களில் மேற்கொண்டு கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது மத்திய சர்க்கார் இந்த சர்க்காரைக் கலந்து ஆலோசிக்காமலேயே கொடுத்துவந்த ரிபேட்டைக் குறைத்து விட்டார்கள். அதிகப்படி கைத்தறி இருக்கக்கூடிய சென்னையைக் கலந்து ஆலோசித்துச் செய்திருக்கலாம். அல்லது சிறிது தாமதித்துச் செய்திருக்கலாம். இதையெல்லாம் பார்த்து நம் பிரதேசத்தில் இருக்கும் கைத்தறியாளர்களுக்குக் கவலைக்கிடமாக இருக்கிறது. கைத்தரித் தொழிலை நிரந்தரத் தொழிலாக்கி அவர்கள் நல் வாழ்வு பெற ஒரு கமிட்டி போட்டு இதைப்பற்றிப் பரிசீலிக்க இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாகக் கொள்கை அளவிலே, நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுவதை உடனடியாகக் கொண்டுவரவேண்டும். அத்துடன் வேறு மற்ற இன்கம்களுக்கும் வரம்பு கட்டவேண்டும். இதைச் சற்று ஆலோசித்து பார்க்க வேண்டும். உதாரணமாகச் சென்னை நகரிலே எத்தினையோ வீடுகளை வைத்துக்கொண்டு பலர் இருக்கிறார்கள். பெரிய பெரிய நகரங்களில் தேவைக்கு மிக அதிகமான வீடுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதிலிருந்து அதிகப்படியான பணம் பெறுகிறார்கள். இதையெல்லாம் பார்த்துக் கூடிய வரையில் ஒருவர் எத்தனை வீடுகள் வைத்துக்கொள்ளலாம் என்ற முறையில் ஒரு சட்டம் கொண்டுவந்தால் அது நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும், நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்டுதல் போன்ற திட்டங்கள் அதுவும் நல்ல முறையில் கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த மாதிரியான அடிப்படையில் இருக்கும் கவர்னருடைய உரையை ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri M. K. MARIAPPAN : கனம் சபாநாயகர் அவர்களே, நமது கவர்னர் பெருமானுடைய உரையை நான் ஆதரித்துப் பேச முன் வந்துள்ளேன். கவர்னருடைய உரையில் நாட்டு மக்களுடைய கடந்த கால நன்மைகளைப்பற்றியும் இனி எதிர்கால நன்மைகளைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதோடு நாட்டின் முக்கியமான பிரச்னைகளான கல்வி, நாட்டினுடைய ஐக்கியம், மொழி, விவசாயம், பெண்கள் மகப்பேறு, இன்னும் மற்ற எல்லா வகைகளிலும் அவர் கவனம் செலுத்தி நாட்டு மக்களுடைய நல் வாழ்வைக் குறித்து அதில் குறிப்பிட்டிருக்கிறார். அதை நாம் வரவேற்கிறோம். இருப்பினும், இந்த மொழிப் பிரச்னைபற்றிக் குறிப்பிட்டிருப்பதில் நான் சிறிது சொல்ல ஆசைப்படுகிறேன். மொழியைப்பற்றி நம் நாட்டில் சில வருஷங்களாக நம்முடைய தொன்று தொட்டு, பழம் பெரும் மொழியான தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்கும் ஆசையை நிறைவேற்றும் பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது. அதை மறுக்கவும், அதைத் திரித்துக் கூறவும் பல கட்சிக்காரர்களும், பல தலைவர்களும் முன் வந்திருக்கிறார்கள். இந்த வகையிலே தற்போது நம்முடைய நாட்டில் ஹிந்திப் பிரச்னையில் நாமெல்லோரும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறோம். 1937-ம் வருஷத்தில் கனம் ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்தில் இந்தியை கட்டாயமாக கொண்டு வந்தார்கள். அந்த நேரத்தில் இந்திக்கு எதிராக இருந்து பல தலைவர்களும் சிறை சென்றார்கள். அதே தலைவர் இன்றைக்கு இந்தியை வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்றால் அதில் ஒரு கருத்து இருக்கும் என்று யாரும் நினைக்கக்கூடிய அளவில் நாம் இருக்கிறோம். அதை வைத்துக்கொண்டுதான் மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும் பழம் பெரும் தேசிய பக்தர், ஒரு அரசியல் ஞானி இந்தியைப்பற்றி இப்படி சொல்லுகிறார்கள் என்று கூறுகிறார்கள். ஏனென்றால் அவர் ஒரு பழுத்த ராஜதந்திரி. ஆனால் அவர்களுடைய கட்சிக்கு வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அதே நேரத்தில் 1942-ம் வருஷத்தில் பெரியாரும் ராஜாஜி அவர்களும் திருவண்ணாமலையில் சந்தித்த பொழுது, அவர்களுடைய கழகம் எந்த நிலையை அடைந்தது என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே போன்று, இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தாருடன் ராஜாஜியின் சந்திப்பு எப்படி இருக்கும் என்பதை அவர்கள் நினைத்துப்பார்க்கவேண்டிய அளவில் இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக, பக்கத்து வீட்டுக்காரர் ஒரு மாடி வீடு கட்டி வாழ்கிறார். பல வருஷங்களாகக் கட்டப்பட்ட மாடி வீடு அது. பக்கத்தில் இருப்பவர் தானும் அவருக்கு சரி சமமாக அரியாசனத்தில் இருக்கவேண்டுமென்று உடனடியாக ஒரு மண்சுவரை ஏற்றிக்கொண்டே போகும் நேரத்தில், சுவர் ஏறுமே என்று நினைத்து நல்ல பளுவான கல்லை மண் சுவர்மேல் தூக்கி வைத்துவிட்டால் சீக்கிரம் தான் மாடி வீடு கட்டிவிடமுடியும் என்று நினைப்பதுபோல், ராஜாஜி போன்ற கருங்கல்லான வைரம் பாய்ந்த தலைவரின் யோசனையை அதன் மேல் வைத்துவிட்டால், அந்த மண் சுவரானது என்ன ஆகும் என்பதை கவனிக்கவேண்டும். அவர்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என்ற நோக்கம் அல்ல. அவர்கள் கட்சி வளம் பெறக்கூடாது என்ற நோக்கமல்ல. வள்ளுவர் பெருமகனார் சொல்லியபடி 10-20 a.m

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்பது போன்று தாங்களே தானே குழி தோண்டி புதைத்துக் கொள்ளாமல், இந்த நாட்டு மக்களுக்கு வெறுப்பு இல்லாத முறையில்

நடந்துகொண்டுவந்தால், அவர்கள் எண்ணத்தையும் கருத்தையும் பல வருஷங்களாகத் தெரிந்துகொண்ட மக்கள் தீர்ப்பு கொடுப்பார்கள். அதைவிட்டு நாட்டிலே குழப்பத்தை உண்டுபண்ணி மக்களிடையே வெறுப்பு உண்டாக்கிக்கொண்டுபோனால், அவர்களுடைய நிலைமை என்ன ஆகும் என்பதை யோசிக்கவேண்டும்.

கவர்னர் அவர்களது உரையில் சகல துறைகளிலும் நாட்டின் நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி இருக்கிறார். ஹரிஜனங்களைப்பற்றி அதில் ஒன்றும் கூறவில்லை என்று நேற்று பேசிய சில நண்பர்கள் கூறினார்கள். நிலப் பிரச்னை என்று அவர் சொல்லியிருப்பதிலிருந்து கஞ்சி வரதப்பா என்றால் கஞ்சி எங்கு இருக் கிறது என்று காத்துக்கொண்டிருக்கும் 100-க்கு 97 சத விகிதம் நிலமில்லாத தாழ்த்தப்பட்ட மக்கள் நிலப் பிரச்னையைத் தீர்ப்பதால் தங்களுக்கு நன்மை ஏற்படும் என்று பூரண திருப்தி அடைகிறார்கள். நானும் அடைகிறேன். என்னுடைய கிருஷ்ணகிரி அரூர் போன்ற தாலு காக்களில் ஹரிஜனங்களுக்கோ, மற்ற விவசாயிகளுக்கோ நிலங்கள் அடமானம் செய்யப்பட்டு வருகிறது. அந்த நிலங்கள் ஹரிஜனங்களுக்கு பெரும்பாலும் கிடைக்கவில்லை. ஏனென்றால் 20 ரூபாய் கந்தாயம் கிட்டக் கூடிய ஒரு விவசாயிக்கு மேலும் 5 ஏகர் நிலம் கொடுக்கலாம் என்ற நம்முடைய சர்க்கார் விதியின் பேரில் அவர்கள் ஏமாற்றம் அடைகிறார்கள். நிலத்தை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சிலருக்கும் "பாரெஸ்டு ரீஜன்" என்று 3 சங்கிலி, 2 சங்கிலி தள்ளப்பட்டுவிடுகிறது. அதனால் அவர்களுக்கும் அறவே நிலம் கிடைக்காமல் போகிறது. நாம் அதை ஆதரிக்கிறோம். காடு வளர்ந்தால்தான் நாடு வளரும் என்பது ஆன்றோர் மொழி. அதே நேரத்தில் காட்டை பாதுகாக்கும் கடமை அரசாங்கத்தி னுடையது. அது மக்களுடைய கடமையும் ஆகும். என்னுடைய தொகுதியில் சேர்வராயன் மலை இருக்கிறது. அந்த மலையில் சுமார் 1,000 வருஷங்களுக்கு முற்பட்ட மரங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் அங்கே ஒரு நாள் என் தோழர்களுடன் மான் வேட்டைக்குச் சென்றிருந்தேன். மானை தேடிக்கொண்டு போகும்போழுது மர வேட்டைகளைப் பார்த்தோம். அந்தக் காட்டில் மரங்களை சூரையாடி இருக்கிறார்கள். அதைப் பார்த்து என்னுடன்கூட வந்தவர்கள் "அங்கு இருக்கும் காட்டு இலாகா அதிகாரிகள் கவனக் குறைவாக இருக்கி றார்களே, சட்ட சபை உறுப்பினராகிய நீங்களாவது கவனிக்கக்கூடாதா" என்று கேட்டார்கள். அதற்காக நான் ஜில்லா காட்டு அதிகாரியிடம் நேரில் போய், "எனக்கு இம்மாதிரி புகார் சொன்னார்கள். நானும் நேரில் பார்த்தேன், இதை கவனியுங்கள்" என்று எழுதிக் கொடுத்தேன். அப்படி எழுதிக்கொடுத்த மறு நாளே, எங்கள் ஊரிலே இருக்கும் காட்டு "ரேன்ஜர்" ரெங்கநாதன், "கார்டு," அர்ஜுனன் ஆகியோர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்த ஹரிஜனங்களைப் பார்த்து "உங்கள் எம்.எல்.ஏ. காட்டில் மரம் வெட்டப்படுவதாக ஜில்லா அதிகாரியிடம் கூறியிருக்கிறார், நீங்கள் இனிமேல் சுள்ளி எடுத்துக்கொண்டு வரக்கூடாது. காடுகளி லிருந்தும் எடுத்துக்கொண்டு வரக்கூடாது, மற்ற இடங்களிலிருந்தும் எடுத்துக்கொண்டு வரக்கூடாது" என்று சொல்லி அவர்கள் எடுத்துக் கொண்டுவந்த சுள்ளிகளை பிடுங்கி எறிந்துவிட்டார்கள். அதோடுகூட, அக்கிரமமான மொழிகளைப் பேசி என்னைப்பற்றியும் அவமரியாதை யாகப் பேசினார்களாம். இதுபற்றி காட்டு இலாகா அமைச்சர் அவர்கள் முதல் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளுக்கும் ரிபோர்டு அனுப்பப் பட்டிருக்கிறது. மூன்று மாத காலம் ஆகியும் ஒன்றும் இன்ஸ்பெக்ஷனோ அல்லது வேறு பரிசீலனையோ நடைபெறவில்லை. காட்டை வளர்க்க வேண்டுமென்று ஒரு புறம் மக்களும் விரும்புகிறார்கள். அரசாங்கமும் விரும்புகிறது. ஆனால் அதே நேரத்தில் காடுகளை பாதுகாக்கவேண்டு மென்பதை விடுத்து வேலியே பயிர் மேய்வது போல இந்த அதிகாரிகளின் போக்கைப்பற்றி நாம் சிந்திக்கும்பொழுது, என்ன என்று கூறுவது என்பது புலனாகவில்லை.

கவர்னர் பெருமானுடைய உரையில் ஹரிஜனங்களைப்பற்றி குறிப்பிடா விட்டாலும், நிலப் பிரச்னைபற்றி குறிப்பிடப்பட்டிருப்பதால், நாங்கள் அனைவரும் சந்தோஷப்படுகிறோம். எதிர்காலத்தை நல்ல முறை

11th February 1958] [Sri M. K. Mariappan]

யிலே சிருஷ்டிக்கக்கூடிய அளவிலே கவர்னர் அவர்கள் உரையாற்றி யிருப்பதை நான் வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளு கிறேன். வணக்கம்.

SRIMATHI A. S. PONNAMMAL : மதிப்பிற்குறிய கனம் சபாநாயகர் அவர்களே, நமது கவர்னர் பெருமான் அவர்களது உரையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். எடுத்த எடுப்பிலேயே, அவர் பாரதியார் குறிப்பிட்டதுபோல், அவர் ஏட்டில் எழுதிச் சென்றதுபோல் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்ற அடிப்படையில், தேசிய ஒற்றுமை உணர்வைப் போற்றிப் பேணி வளர்ப்பதின் அவசியம் தன் உள்ளத்தில் நன்கு பதிந்துள்ளது என்பதை மிகவும் விரிவாக எடுத்துக் கூறியிருப்பது நாம் அனைவரும் வரவேற்கத் தகுந்ததுதான். கனம் அங்கத்தினர் அவர்கள் "எங்களுக்கு தனித் தமிழ் நாடு வேண்டும், தனி திராவிட நாடு வேண்டும், அதற்காகத்தான் நாங்கள் தமிழர் என்ற முறையில் போராடிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் நாட்டை பிரித்தே ஆவோம்" என்று கூறினார்கள்.

நான் நேற்று நினைத்தேன். பள்ளிக்கூடங்களில் முதலாவது, இரண் டாவது க்ளாசில் வாத்தியார்கள் சிறு பிள்ளைகளுக்கு ஒரு கதை சொல்லு வார்கள். "ஒரே ஒரு ஊரில் நான்கு எருதுகள் இருந்தன" என்று கதையை ஆரம்பித்து கடைசியில் முடிவையும் சொல்லுவார்கள். அந்த நான்கு எருதுகளின் கதையையும் முடிவும் சொல்லுவார்கள். நாம் இந்தக் கதையை பிள்ளைகளாக இருந்தபோது படித்தது எனக்கு இப் பொழுது ஞாபகம் வருகிறது. இன்றைய தினம் கனம் அங்கத்தினர் பேசியபோது அந்தக் கதை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இன்றைக்கு, தமிழ்நாடு வேண்டும் என்று சொன்னவர்கள், தமிழ் நாட்டுடன் கேரளத் தையும், கன்னடத்தையும், ஆந்திர நாட்டையும் கேட்க ஆரம்பித் திருக்கிறார்கள். இந்த நான்கு நாடுகளும் சேர்ந்துதான் தமிழ் நாடு என்று சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள். இதை நினைக்கும்போது தான் எனக்கு பிள்ளைப் பிராயத்தில் படித்த கதையின் ஞாபகம் வருகிறது. கடைசியில் ஒற்றுமை இல்லாமல் இருந்ததால் அந்த நான்கு எருதுகளின் கதி என்னவாயிற்றோ அந்த கதிதான் நம்முடைய நாட்டிற் கும் இப்பொழுது வரவேண்டுமென்று நோக்கோடு கூறுகிறார். பிரிவினை வேண்டும் என்று சொன்னால் இன்னும் என்ன கதியாகுமோ என்பதுதான் தெரியவில்லை. நாம் ஒற்றுமை இல்லாமல் நம் நாடு தனியாக பிரிந்தால் தென்னாடு நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு சின்ன பின்னமாகி இருக்கிறது. இன்னும் பிரிவினை செய்யவேண்டும் என்று சொன்னால் சிரழியும் என்பதில் சந்தேகமில்லை. இது எந்த நிலைமை க்குக் கொண்டுபோகுமோ என்பதுதான் தெரியவில்லை, ஆகவே நாம் ஒற்றுமையாக இருந்தால் எவ்வளவோ காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். நம்மிடம் ஒற்றுமை இல்லையானால் நாம் ஒரு காரியத் தையும் சாதித்துக்கொள்ள முடியாது. ஒற்றுமையாக இருந்தால் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்துகொள்ளலாம். நிறைய காரியங்களையும் நிறைவேற்றிக்கொள்ளலாம். இல்லாவிட்டால் ஒரு காரியத்தையும் நாம் எதிர் பார்க்கவே முடியாது. 10–30 a.m.

நமது நாட்டில் நாம் எவ்வளவோ காரியங்களைச் செய்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவைகளை எல்லாம் நிறைவேற்றிக்கொள் வதற்கு நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டியதவசியமாக இருக்கிறது. நாம் ஏதாகினும் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால், ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்ட வேண்டுமானால் அதற்கு சுமார் இருபதாயிரம் ரூபாய் வேண்டும் என்று எஸ்டிமேட் போட்டால் அதற்கு பாதிப் பணம் நமது சென்னை சர்க்கார் கொடுக்கிறது. பாதிப் பணம் மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. பல பல விதமான வசதிகளைப் பெற்று நாம் பல காரியங் களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்காக நாம் ஒற்றுமையாக இருந்தால் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்துகொள்ளலாம். அதோடு நமது நாட்டிற்கு வெளி நாடுகளில் நல்ல செல்வாக்கு இருக்கிறது. நமது செல்வாக்கு அங்கு உச்ச நிலையில் இருந்தது. ஆனால் தற்போது

[Srimathi A. S. Ponnammal] [11th February 1958

இங்கு நடைபெறுகின்ற சிறு சிறு குழப்பங்களால் நமது மதிப்பு வெளி நாடுகளில் குறைந்துகொண்டு வருவதாகச் தெரிகிறது. நம்மை அவர்கள் கேவலமாக நினைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அந்த அளவுக்கு இந் நாட்டிலுள்ள நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாவற்றையும் மறந்துவிட்டு அங்கத் தினர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டிற்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நமது பாரதப் புதல்வர்கள் இதற்கு செவி சாய்ப்பார்கள் என்றும் நினைக்கிறேன். எல்லோரும் ஒன்று சேர்ந்து நல்ல முறையில் இயங்கினால் நாடு முன்னேற்றமடைவதற்கு வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நேற்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள், நமது நாட்டின் பிரதமரும் ஒரு மனிதர்தானே, அவருக்கு ஏன் கருப்புக்கொடி காட்டக் கூடாது என்று கேட்டார். அவர் தெரிந்துகொண்டது அவ்வளவுதான் என்று தோன்றுகிறது. நமது பிரதமரும் மனிதர்தான் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் மனிதருக்குள் ஒரு மாணிக்கம் என்று வைத்துக் கொள்ளவேண்டும். அவரை நாம் நம்முடைய தலைவராக தேர்ந்தெடுத் திருக்கிறோம். நாம் எல்லோரும் அவருடைய குழந்தைகள். ஒரு சிறு கலகம் நடந்ததால் நமது நாட்டு தலைவருக்கு அதிருப்தி விளைவிக்கும் முறையில் எல்லோரும் சேர்ந்து நடந்துகொண்டிருக்கிறார்கள். அவர் நமது நாட்டின் தலைவர் அல்லவா ? குழந்தைகள் தப்பு செய்தால் அதைக் கண்டிக்க தாய் தகப்பனுக்கு உரிமை இல்லையா ? குழந்தைகள் தப்புப் பண்ணுவது சகஜம்தானே. சிறிய பிள்ளைகள் ஒரு தப்புச் செய்தால் அதைப் பொருட்படுத்தக்கூடாது. அதை தலைவர் கண்டிக்கக் கூடாது என்று அர்த்தமா? அதனால் அவருக்கு கருப்புக்கொடிக் காட்ட வேண்டும் என்று சொல்வது மிகவும் வருந்தத்தக்கதுதான். பிள்ளைகள் தப்பு செய்தால் அதைக் கண்டிப்பது தாய் தகப்பனுடைய பொறுப்பு இல்லையா ?

அடுத்து ஆட்சி மொழி. ஆட்சி மொழியைப்பற்றி இப்பொழுது சில பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கிறது. கடந்த இருபது வருஷங்களாக ஹிந்திப் பிரச்னை இருக்கிறது. கனம் மதிப்பிற்குறிய ராஜாஜி அவர்கள்கூட கட்டாயம் எல்லோரும் ஹிந்தி படிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்தவர், புத்தகத்தில் எழுதி வைத்தவர் இப்பொழுது என்ன காரணத் தினாலோ ஹிந்தி யைக்கொண்டு வருவதற்கு ஆட்சேபிக்கிறார். தனிப்பட்ட முறையில் ஒருக்கால் சொல்லிக்கொண்டு வருகிறாரோ என்னமோ ? தமிழ் வளருவதற்கு என்று அதைக்கொண்டு வரக்கூடாது என்று சொல்லு கிறாரோ என்னமோ ? அப்படி இருந்தால் அதை வரவேற்கவேண்டியது தான். தமிழ் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் அப்படிச் சொல்லிவந்தால் அது வேறு விஷயம். இருந்தபோதிலும் 100-க்கு 98 பேர்கள் ஹிந்தி வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு வந்தவர்கள் இப்பொழுது ஹிந்தி கற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார்கள். ஹிந்தி வேண்டாம் என்று சொல்லி வந்த கிராமப்பகுதிகளில்கூட இப்பொழுது ஹிந்தி கற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இந்த நிலைமை கிராமப் பகுதிகளில் ஹிந்தியைப் அவர்களாகவே கற்றுக்கொள்ளக்கூடிய அளவில் வந்தும் அங்கு அதைக் கற்றுக்கொள்ள வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவில் இப்பொழுது பிரசாரம் நடந்து வருகிறது. இதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பள்ளியில் படிக்கக்கூடிய மாணவ மாணவிகள் ஹிந்தியை வெகு சுலபமாகக் கற்றுக்கொள்ளுகிறார்கள். படித்துக்கொண்டு வருவதில் எந்தவிதமான தொந்தரவுகளும் ஏற்படவில்லை. ஆகவே ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுகொண்டு எல்லோரும் சேர்ந்து இதை ஆதரிக்கவேண்டும் என்றும் சட்டசபை அங்கத்தினர் எல்லோரும் சர்வ கட்சி தலைவர்கள் எல்லோரும் இதை ஆதரிக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

11th February 1958] [Srimathi A. S. Ponnammal]

அடுத்து நிலச்சீர்திருத்தம். நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருவதை என்னைப்போன்ற கிராமப்பகுதியிலிருந்து வரக்கூடியவர்களும் ஹரிஜன மக்களும் வரவேற்கிறார்கள். இப்பொழுது சட்ட சபையில் மூன்று விதமான சட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை ஆதரிக்க வேண்டிய நிலையில் இருந்தாலும் அந்த நில உடைமையை உச்சநிலைக்கு வரம்பு கட்ட வேண்டும் என்றும் அதற்கு என்று ஒரு இடைக்காலச் சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்றும் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் குறிப்பாக என் தொகுதியாகிய வத்தலகுண்டு பிர்காவில் விேனாபா அவர்களின் தலைமையில் கிராமதான ஊழியர்கள் எவ்வளவோ பேர்கள் யாத்திரை செய்தார்கள். நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை அவர்கள் தானமாக வாங்குகிறார்கள். அதை ஹரிஜன மக்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட சட்டத்தை உடனடியாகக் கொண்டு வந்தால் எவ்வளவோ கிராம ஹரிஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கும். அதனால் அவர்கள் நல்ல பலனை அடைவார்கள் என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன். அதனால் கிராமப்பகுதியிலுள்ள விவசாய மக்களும் விவசாய ஹரிஜனங்களும் நல்ல பலன் அடைவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து முதல் ஐந்தாண்டு திட்டத்தையும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தையும் நல்ல முறையில் நடத்துவதற்கு பல விதமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். அதற்கு என்று கிராமப் பகுதிகளில் பணம் வசூலித்தும் வருகிறார்கள். அதற்காக சிறு சேமிப்புத்திட்டம் என்று வகுத்து அதன் மூலம் அங்கே பணம் வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். இந்த திட்டங்களை நல்ல முறையில் அமுல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் அப்படி பணம் வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லா தலைவர்களும், எதிர் கட்சி தலைவர்களும் சர்வ கட்சி தலைவர்களும் அதில் பங்கெடுத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு உதவி செய்து திட்டத்தை நல்ல முறையில் அமுல் செய்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் சில எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இதை தங்களுடைய கட்சிக்கு பயன்படுத்திக்கொண்டு அதன் மூலம் அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரம் செய்து வருவதாகத் தெரிய வருகிறது. அதாவது இப்படி சிறு சேமிப்பு மூலமாக அரசாங்கத்திற்கு பணம் கொடுத்தால் அந்தப் பணத்தை திரும்பிப் பெறுவதற்கு கஷ்டமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு வருவதாக தெரிய வருகிறது. இதைக் கேட்டு வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இந்த விதத்தில் பிரசாரம் செய்யாமல் சர்வ கட்சி தலைவர்களும் ஒன்று சேர்ந்து முழு மூச்சுடன் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி உதவி செய்தால் தான் போட்ட திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். நிர்மாண வேலைகளையும் நிறை வேற்ற முடியும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாற்றுக்கட்சி அங்கத்தினர்களும் இங்கு எப்படி பேசினாலும் வெளியில் இதற்கு எதிராக பிரசாரம் செய்து வருகிறார்கள். அரசாங்கம் கொள்ளை அடிப்பதற்காக இப்படியெல்லாம் பணத்தை வசூலிக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு வருவதாக தெரியவருகிறது. அதனால் அதற்கு பணம் கொடுத்து உதவக்கூடாது என்றும் சொல்வதாக தெரிய வருகிறது. இதைக் கேட்க ரொம்பவும் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு உதவி செய்தால் போடப்பட்ட திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறும் என்பதில் சந்தேகம் இல்லை.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்பற்றி பேச வேண்டியதாக இருக்கிறது. வீடுகட்டும் திட்டத்தில் ஒரு தாலூகாவிற்கு ஒரு பிர்காவிற்கு நாற்பது வீடுகள் கட்டிக்கொடுப்பதாக திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அந்த எண்ணிக்கை மிகவும் குறைவானது என்று தோன்றுகிறது. வீடு கட்டும் திட்டத்தை அமுல் நடத்தும்போது மாற்றுக் கட்சிக்காரர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் பணத்தை எல்லாம் அரசாங்கமே போட்டு உத்யோகஸ்தர்கள் வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று சொல்லி ஹரிஜனங்களை வீடுகட்டிக்கொள்வதற்கு இஷ்டமில்லாத

[Srimathi A. S. Ponnammal] [11th February 1958

நிலைமையை உண்டாக்கிவிடுகிறார்கள். ஏழை விவசாயி மக்களும் ஹரிஜனங்களும் இதை நம்பி அவர்கள் தங்களுடைய பங்கைக்கொடுக்காமல் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளாமலிருந்து விடுகிறார்கள். 40 வீடுகளும் போதாமல் இருக்கின்றது. அதனால் ஒவ்வொரு பிர்காவிற்கும் ஒரு "ரூரல் ஹவுசிங் சொசைட்டி" என்று ஏற்படுத்தி அதன் மூலம் எங்கேயெல்லாம் கூறை அல்லது குச்சு வீடுகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஹரிஜனங்கள் பங்கெடுத்துக்கொண்டால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்தை அவர்கள் இருபது வருஷங்களில் கொடுக்கும்படியான ஏற்பாட்டைச்செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தால் வீடு கட்டும் திட்டம் வெகு சிக்கிரத்தில் நல்ல முறையில் அமுல் செய்யப்பட்டு விடும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்பொழுது எவ்வளவோ ஹரிஜனங்களும் ஏழை விவசாயிகளும் வீடுகள் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த விதத்தில் ஆதரவு கொடுத்தால் அவர்கள் வீடுகள் கட்டிக்கொண்டு நல்ல முறையில் வாழ முடியும். அப்படி அவர்கள் தவணைக் கணக்கில் பணத்தைக் கொடுக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்தால் அவர்கள் மாதம் இரண்டு அல்லது மூன்று ரூபாய்தான் கொடுக்க வேண்டியதாக ஏற்படும். அது அவர்களுக்கு சௌகர்யமாக இருக்கும். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்குச் சட்டம். இதைத் திருத்தி அமைப்பதற்கு சட்டம் கொண்டுவரப்போவதாகச் சொல்லப்படுகிறது. மது விலக்குச் சட்டத்தின் மூலம் தீவிரமான நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப் படாமல் இருப்பதால் இன்று அந்தச் சட்டம் நல்ல முறையில் அமுல் நடத்தப்படுவதாக இல்லை. அதனால் பல கிராமங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சி வருகிறார்கள். அதனால்தான் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாக இருக்கிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதை ஒழிப்பது அவசியமாக இருக்கிறது. எங்கள் பகுதியில் அதிகப்படியாக கள்ளச் சாராயம் காய்ச்சிக்கொண்டு வந்தார்கள். அதைப்பற்றி கலெக்டரிடம் சொன்னேன். அவர் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் காரணமாக இப்பொழுது அங்கு மது விலக்குச் சட்டத்தின்கீழ் குற்றங்கள் குறைந்து வருகின்றன. அங்கே இருக்கக்கூடிய சப் இன்ஸ்பெக்டருக்கு கலெக்டர் உத்தரவு போட்டதன் காரணமாக அவர் தீவிர நடவடிக்கை எடுத்ததால் குற்றங்கள் குறைந்து போய்விட்டன. இன்னும் குறைந்து வருகின்றன. கொஞ்சம் தீவிரமாக சட்டத்தை அமுல் நடத்தினால் இப்பொழுது நடைபெறக்கூடிய குற்றங்கள் நின்றுபோய்விடும். அதன் மூலம் இந்த ஏழை விவசாய மக்களுக்கும் ஹரிஜன மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். ஆகவே மதுவிலக்குத் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரப் போவதைக் கண்டு அதை நான் வரவேற்கிறேன். அதன் மூலம் ஹரிஜன மக்களுக்கு பெரிதும் பாதுகாப்பு ஏற்படும் என்பதை நான் சொல்லிக் கொள்ளுகிறேன்.

10-40 a.m. தொழில் செய்யும் பெண்கள், மகப்பேறு காலத்தில் தாராளமாக மேலும் சில நலன்கள் பெறும் வண்ணம், சென்னை மகப்பேறு நலச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா கோண்டுவரப்போவதாக கவர்னர் பேருரையில் அறிவித்திருப்பதைப்பற்றி, பெண் என்ற முறையில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

குறிப்பாக, நமது நாட்டில் அநேக பெண்கள் திக்கற்றவர்களாகவும், படித்துவிட்டு வேலை கிடைக்காமல் இழி தொழிலில் ஈடுபடவேண்டிய நிலைமையிலும் நாட்டில் நடமாடுகிறார்கள். அம்மாதிரி பெண்களுக்கு ஜில்லா வாரியாக ஒரு பெண் தொழில் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டும். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைப் பெண்கள், மற்றும் வாழ வழி தெரியாத பெண்கள், பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகியிருக்கும் பெண்களுக்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பெண்கள் தொழில் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி அங்கு அவர்களுக்கு ஏதாவது தொழில் கற்றுக்கொடுத்து, அதில் பயிற்சி பெற்ற பெண்களை ஒவ்வொரு கிராமத்

11th February 1958] [Srimathi A. S. Ponnammal]

திற்கும் அனுப்பி வைத்து, அங்கே அவர்கள் ஆக்க வேலையில் ஈடு படும்படியாக அரசாங்கம் ஏதாவது ஒரு நல்ல ஏற்பாடு செய்தால், அவர்களுக்கு உண்மையிலேயே ஏதாவது வழிவகை தேடியவர்களாவார்கள் என்று சொல்லிக்கொண்டு, இப்பொழுது பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னு டைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

Sri M. P. SARATHY : கனம் சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் உரைமீது நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது மிகப் பெரிய பிரச்னையாக உள்ளது ஹிந்தி விஷயம். 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டுமென்று கௌஹாதி காங்கிரசில் நமது மதிப்பிற்குறிய அமைச் சர்கள் எல்லோரும் போராடி வெற்றி கண்டுவிட்டோம் என்று கூறிக் கொண்டு வருவதை நாம் பத்திரிகையில் பார்த்தோம். ஆனால், அப்படியே அவர்கள் வெற்றி கண்டு வந்துவிட்டார்கள் என்று வைத்துக்கொண்டாலும், இப்பொழுது நடமாட்டத்திலே ஹிந்தி நுழைந்திருப்பதை நாம் பார்க் கிறோம்.

முக்கியமாக இந்த அசெம்பளி மன்றத்தை விட்டு வெளியில் சென்றால் பஸ்ஸில் ஏறி ஹோட்டலுக்குச் செல்வதற்குள் பஸ்ஸிலே ஏறினவுடனே, "எடுங்கள் 13 நயே பைசே" என்கிறான் கண்டக்டர். 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும் என்று சொல்லக்கூடிய அமைச்சர் அவர்கள், இப்பொழுதே ஹிந்தியை நுழைய விட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கப் போனால், ஏதோ பித்தலாட்டப் பேச்சாகத்தான் இருக்கிறதே தவிர, உண்மையிலேயே அவர்கள் ஹிந்தியை நுழைக்காமல் இல்லை. ஹிந்தியை நுழைய விடாமல், ஆங்கிலம் நீடித்திருக்கவேண்டும் என்று அவர்கள் உண்மையிலேயே நினைக்கிறார்களா என்றால், இல்லை என்றுதான் தோன்று கிறது. இந்த நயா பைசா விவகாரத்தில் மாத்திரம் அல்ல. இப்பொழுது சர்க்காரால் வெளியிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு பிரசுரத்திலும்.

Sri A. VEDARATHNAM PILLAI : "பித்தலாட்டம்" என்பது பார்லி மென்டரி லாங்வேஜா என்று தெரியவேண்டும்.

Mr. SPEAKER : பித்தலாட்டம் **means difficulty**. அதிலே ஒன்றும் தப்பு இல்லை.

Sri M. P. SARATHY : மற்ற சர்க்கார் கெஜட்டுகளிலே ஏதோ அவர்கள் ஒரு தேதியை மாற்றிப் போட்டிருக்கிறார்கள்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : **Fraud** என்று சொல்வது **unparliamentary language** இல்லையென்றால், "பித்தலாட்டம்" என்பதும் **unparliamentary language** இல்லை என்று தங்களுக்குத் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

Sri M. P. SARATHY : சர்க்கார் காலண்டரிலேயே **Saga Era** என்று ஒரு வருஷத்தைப் போட்டிருக்கிறார்கள். ஏதோ ஒன்றை, மாதம் என்று போட்டிருக்கிறார்கள். ஹிந்தி தேசிய மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்கிற கனதனவான்களுக்கு எல்லாம், யாராவது ஒருவருக்க காவது இந்த வருஷ, மாதத்தின் பெயர்களின் அர்த்தம் என்ன என்று புரிந்திருக்குமா என்று நான் இந்தச் சட்டசபையில் கேட்க விரும்புகிறேன்.

1965-க்குப் பிறகும் ஆங்கிலம் இருக்கலாம் என்று கூறிக்கொண்டாலும், அதை அவர்களே ஒத்துக்கொண்டதாக வைத்துக்கொண்டாலும், இப்பொழுது போட்டிருக்கும் வருஷத்தினுடைய பெயர்கள் ஒருவருக் காவது தெரியுமா? அல்லது மாதத்தினுடைய பெயர்கள் ஒருவருக்காவது தெரியுமா? கிழமை ஒருவருக்காவது தெரியுமா என்று ஹிந்தியை ஆதரிக்கக்கூடிய ஒவ்வொரு பெரியவரையும் நான் கேட்க விரும்புகிறேன். ஆகையால், ஹிந்தி, இப்போதே, இதற்கு முந்தியே இங்கு நுழைந்து, தமிழை எவ்வளவு கெடுக்க வேண்டுமோ, தமிழை எவ்வளவு போக்க வேண்டுமோ அவ்வளவு போக்கிக்கொண்டிருக்கிறது என்பது நமக்கு இதன் மூலமாக நன்கு தெரிகிறது.

[Sri M. P. Sarathy] [11th February 1958

முக்கியமாக, போஸ்ட் ஆபிசிலே கொடுக்கப்படும் மணி ஆர்டர் பாரங்களைப் பார்த்தாலே தெரிந்துவிடுகிறது. அதிலே ஹிந்தியில் எழுதப்பட்டிருப்பதால், மணி ஆர்டர் அனுப்பியவருக்கே பணம் திரும்பி வந்துவிடுகிறது. காரணம், அனுப்புகிறவர் விலாசத்தை எங்கே எழுத வேண்டும், பெறுபவர்களுடைய விலாசத்தை எங்கே எழுத வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல் இருப்பதுதான். எந்த இடத்தில் எதை எழுதவேண்டும் என்று தெரியாத அளவுக்கு ஹிந்தி இந்த நாட்டில் நுழைந்து விட்டிருக்கிறது. அப்படிச் செய்துவிட்டு 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது ?

இப்பொழுது நாட்டில் அதிகப் பிரச்னையாய் உள்ள ஒரு விஷயம் ஜாதி முறை ஒழிப்பு என்ற பிரச்னை. அதைப்பற்றி ஏதாவது குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால், முக்கியமாக ஒன்றுமே குறிப்பிடவில்லை. ஏன் குறிப்பிடவில்லை என்று எனக்குத் தோன்றவில்லை. முக்கியமாக, இதே சென்னையில் முரளி கபே முன்பு ஜாதி உயர்வைக் குறிக்கும் போர்டை எடுக்கவேண்டும் என்பதற்காக ஆயிரம் பேர்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆனால், அதுகுறித்து கவர்னர் உரையில் ஏதாவது இருக்கிறதா என்றால் ஒன்றுமே இல்லை.

அன்றைக்கு திராவிட கழகத் தலைவர் பெரியார் அவர்கள் தஞ்சையில் கூட்டிய மகாநாட்டில், சுமார் லட்சம் பேர்களுக்குமேல் கூடியிருந்த மகாநாட்டில், ஒரு தீர்மானத்தைப் போட்டு, " இந்தச் சர்க்கார் ஜாதி முறையை ஒழிக்க சட்டம் கொண்டுவந்தால் ஆயிரக் கணக்கான பேர்களை நாங்கள் மறியல் செய்யச் சொல்லாமல் இருப்போம் ; அத்தனை பேர்களையும் சிறைக்குச் செல்லாமல் இருக்கச் செய்யவேண்டுமானால், ஜாதி முறையை ஒழிக்க ஏதாவது ஒரு சட்டம் செய்வார்களா ? " என்று அரசாங்கத்திற்கு அந்த மகாநாடு மூலமாகக் கேட்டபோது, அதற்குப் பதிலாக என்ன செய்தார்கள் என்றால், இதே சட்டசபையில் தேசிய பாதுகாப்புச் சட்டம் என்று ஒரு சட்டத்தை இயற்றினார்கள். அந்தச் சட்டத்தை ஏற்படுத்தி, தப்பு செய்தால் 2 வருஷம், மூன்று வருஷம் சிறை என்று முடிவு செய்தார்கள். ஆனால், இதைப் பெரியார் அவர்கள் பொருட்படுத்தாமல் இந்த ஜாதி முறையைப் புகுத்தக்கூடிய அரசியல் நிர்ணய சட்டத்தைக் கொளுத்தினார். இதன்மூலம் 3 ஆயிரம் பேர்கள் சிறையில் வாடுகிறார்கள், என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் செய்த தப்பு என்னவென்றால், இந்திய அரசியல் சட்டத்திலுள்ள ஏதோ சில வரிகளை சொந்த அச்சாபீசிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துவந்து அதில் எழுதி, அதைக் கொளுத்தினார்கள் என்பதற்காக மதிப்புள்ள பல தோழர்கள் எல்லாம் ஒரு வருஷம், 18 மாதம், 2 வருஷம் என்று மூவாயிரம் பேர்கள் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அவர்களை அடைத்துவைத்துவிட்டும், ஜாதி முறையைப் போக்குவதற்காக ஒரு சட்டம் இயற்றாமல் இருப்பதோடு, அதைப்பற்றி இப்பொழுது கவர்னர் உரையில் ஒரு பேச்சும் இல்லையென்றால், இது முக்கியமாக வருந்தத்தக்க விஷயம்தான்.

அதுவும் போகட்டும், இதற்காக கவர்னர் உரையில் ஒரு வரி இல்லையென்றாலும் கூட, இதற்காக டில்லியிலிருந்து வந்த நமது பிரதமர், " இம்மாதிரி செய்பவர்கள் எல்லோரும் பைத்தியக்காரர்கள் என்றும், இந்த நாட்டை விட்டே அவர்களைத் துரத்தவேண்டும் என்றும் அவர் பேசிவிட்டுச் செல்கிறார்கள். அதுவும் எங்கே வந்து பேசினார் ? திராவிடக் கழகத்தைப் பொறுத்தமட்டிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டிலும், எப்படி வெள்ளைக்காரர்களை இந்தத் தமிழ் நாட்டுக்கு அன்னியராகக் கருதிவந்தோமோ, அதேமாதிரியே தான் வட நாட்டாரையும் தமிழ்நாட்டுக்கு அன்னியர்கள் என்று கருதக் கூடியவர்கள். அந்த வகையில் அன்னியன் என்று சொல்லக்கூடிய நேரு அவர்கள் இங்கு வந்து இந்த நாட்டின் மதிப்பிற்குரிய ஒரு பெரிய தலைவரை, லட்சக்கணக்கான மக்கள் பின்பற்றக்கூடிய ஒரு தலைவரை இந்த நாட்டைவிட்டே துரத்த வேண்டுமென்று, ஜாதியை ஒழிக்கக் கையால் ஆகாத சர்க்காரை வைத்துக் கொண்டு, அவர் சொல்வதாயிருந்தால், இதற்காக நாம் வெட்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோமே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

11th February 1958] [Sri M. P. Sarathy]

அவர் தமிழ்நாட்டுக்கு வரும்போதெல்லாம் தமிழ்நாட்டுப் பெரியார் அவர்களையும் மற்றப் பெரியவர்களையும் அவர்கள் தாக்கிப் பேசுகிறார்கள் என்பதற்காக நாங்கள் நாகர்கோயிலில் ஒரு மகாநாட்டைக் கூட்டினோம். "நேரு அவர்கள் எப்பொழுது வந்தாலும் தமிழ் நாட்டுத் தலைவர்களை ஏசிவிட்டே போகிறார், அவர் செய்வது நியாயம் அல்ல என்பதை அவருக்குக் காட்டவேண்டும் என்பதற்காக ஜனவரி மாதம் 6-ந்தேதி கருப்பு கொடி அவருக்குக் காட்டவேண்டுமென்று நாகர்கோயில் மகாநாட்டில் முடிவு செய்து கட்டளையிட்டார்கள். ஆனால், அந்த மகாநாட்டின் பயனாக இங்கு ஜனவரி 3-ந்தேதியே அண்ணா அவர்களையும் மற்ற சுமார் 19 எல்.எல்.ஏ.க்களையும் இரண்டு எம். பி.க்களையும், மற்றும் பல திராவிடமுன்னேற்றக் கழக முன்னணி வீரர்களையும், தலைவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். "ஏதோ சொல்கிறார்கள். நேரு பெரிய தலைவர் ஆச்சே, அவரை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பேசலாமா ?" என்று நமது மதிப்பிற்குரிய தாய்மார் ஒருவர் சொன்னார்கள். எப்படி நேருவைத் தந்தையாக பலர் கருதுவதாகச் சொல்கிறார்களோ, அதேமாதிரியே நமது நாட்டிலுள்ள, முக்கியமாக, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கும், எங்களையெல்லாம் குழந்தைகளாக பாவித்துக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டுப் பெரியார் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்காத நேருவுக்கு நாங்கள் என்ன மதிப்புக் கொடுப்பது என்றுதான் நான் கேட்கிறேன். ஆகையால் 10-50 a.m. அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்று முடிவுசெய்த பிற்பாடு, சர்க்கார் போட்டிருந்த தடை உத்தரவை அண்ணா அவர்கள் தாம் மீறுவதாக அறிக்கைவிட்டிருந்தார்கள். நாங்கள் என்ன செய்தோம். மெட்ராசுக்கு வந்து இறங்கிய உடனே நான்காம் தேதியே எங்களைப் பிடித்து எதற்காக உள்ளே போடவேண்டும் ? கொடி காட்டுவது தப்பு என்றால் அந்தக் காரியத்தை நாங்கள் விட்டிருப்போம். கொடி காட்டுவதற்குச் சட்டபூர்வமாக இடம் கொடுத்துவிட்டோம் என்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கைவிட்டிருந்தார்கள். அப்படி இருக்கும்போது நான்காம் தேதியே நாங்கள் என்ன செய்தோம் ? எதற்காக எங்களைப் பிடித்து அடைத்து வைத்தார்கள் என்று கேட்க விரும்புகிறோம். நேரு அவர்களுக்கு யாரும் கருப்புக்கொடி காட்டும்படியாக விடக்கூடாது என்கிற காரணத்தினால் போலீஸ்காரர்களும், அமைச்சர் அவர்களும் ஒரு முடிவு செய்து எங்கள் எல்லோரையும் பிடித்து உள்ளே அடைத்தார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் நினைத்த நினைப்புத் தப்பாகிவிட்டது. ஆயிரக்கணக்கான கருப்புக் கொடிகளை அன்றைக்கு எங்கள் கட்சிக்காரர்கள் மாத்திரம் அல்ல, பொது ஜனங்களும் கூட நேருவுக்குக் காட்டி தங்கள் ஆத்திரத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் திராவிடக் கழகத் தலைவர்களை உள்ளே அடைத்துவிட்டால் சரியாகப் போய்விடும் என்கிற இவர்கள் நினைப்பு தப்பு என்பதையும், திராவிடக் கழகத்திற்கு மக்களுடைய ஆதரவும், ஒத்துழைப்பும் நாளுக்குநாள் பெருகி வருகிறது என்பதையும் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும். திட்டமிட்டு திராவிட முன்னேற்ற கழகம் செயல்பட்டது என்கிறார்களே தவிர திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டிருந்தால் நேரு அவர்கள் டெல்லிக்கே சென்றிருக்கமாட்டார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சட்டபூர்வமாக, அமைதியான முறையில் பிரதமருக்கு எதிர்ப்பைத் தெரிவிக்க கருப்புக்கொடி காட்டவேண்டும் என்று தீர்மானித்தவர்களை சட்டவரம்பை மீறி பலவிதமான அடக்குமுறைகளினால் துன்புறுத்தி, அதனால் அசம்பாவிதமான செயல்கள் நடைபெறும்படியாக பொறுப்பற்ற முறையில் சர்க்கார் நடந்துகொண்டது. இதைப்பற்றி பகிரங்க விசாரணை நடைபெறவேண்டும் என்பதாக திரு. கோவிந்தசாமி அவர்கள் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

Sri K. PONNIAN : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் உரையின் மீது சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் உரையில் மொழிப்பிரச்னைப் பற்றியும் எல்லைப் பிரச்னைப் பற்றியும் அண்டை நாட்டு ஐக்கியத்தைப்பற்றியும், நிலப்பிரச்னை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பற்றிய பிரச்னை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர் பிரச்னைபற்றியும், ஹரிஜனப் பிரச்னைபற்றியும் எவ்வித வார்த்தையும் இல்லாதது கண்டு நான் வருந்துகிறேன்.

[Sri K. Ponnaian] [11th February 1958

நான் வாழும் பிரதேசம் மலைப் பிரதேசம். அந்த மலைப்பிரதேசம் நாலாயிரம், ஐயாயிரம் அடிக்குமேல் உள்ளது. அங்கு தேயிலைத் தொழில் சிறந்த தொழிலாக இருக்கிறது. மிகப் பெரிய தொழில்களில் ஒன்றான தேயிலைத் தொழிலில் இரண்டு லட்சத்துப் பதினையாயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தொண்ணூற்றையாயிரம் குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய சலுகைகளை முதலாளிமார்கள் கொடுக்கவில்லை. 1951-ல் பிளான்டேஷன் ஆக்ட் வந்திருந்தும், 1955-ல் அதற்கான விதிகளை ஏற்படுத்தியிருந்தும் தொழிலாளர்களுக்கு மிகவும் அடிப்படையாகக் கொடுக்க வேண்டிய சலுகைகளைக் கூட பிளான்டேஷன் ஆக்டிலிருந்து எக்ஸம்ஷன் வாங்கிக்கொண்டு முதலாளிகள் கொடுக்க மறுக்கிறார்கள். உதாரணமாக சிறுநீர் கழிக்கும் இடம், காண்டின், கல்வி முதலியவற்றில் இருக்கக்கூடிய சாதாரண உரிமைகளைக்கூட வழங்குவது இல்லை என்றால் இது சுதந்திர நாட்டில் சொல்லவும் வெட்கக் கேடாக இருக்கிறது. கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பிளான்டேஷன் ஆக்டை அமுலுக்குக் கொண்டுவந்து, தொழிலாளர்களுக்கு சிவில் ரைட்டாவது கொடுக்கவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். பெண் தொழிலாளர்களுக்குப் பிரசவ வசதி விஷயத்தில் சில சலுகை கொடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அதை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்திக் கொடுக்கவேண்டும். உதாரணமாக பிரசவ காலத்தில் முன்பு பதினைந்து நாள் சம்பளத்தோடு லீவும், பின் ஒரு பதினைந்து நாள் லீவும் அவசியம் கொடுக்கப்படவேண்டும். அடுத்தபடியாக தொழிலாளர்களுக்கு தேசிய நாட்களில் இன்னும் முக்கியமான பண்டிகை நாட்களில் எல்லாம் சம்பளத்துடன் லீவு கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் செய்திருப்பதைப் பற்றி சந்தோஷப்படுகிறேன். தொழில் பிராந்தியங்களில் எல்லாவற்றுக்கும் இதை விஸ்தரிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். மிகவும் பெரிய தொழிலாக, அன்னியநாட்டுச் செலாவணியையே வாங்கித்தரும் தொழிலாக இருப்பது தேயிலைத் தொழில். தேயிலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு அதிக வசதியைச் செய்து கொடுத்தால்தான் தேயிலை உற்பத்தியை அதிகப்படுத்துவார்கள்.

இந்தக் காங்கிரஸ் ஆட்சியில் தொழிலாளர்களுக்கு அதிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. பல தொழில்களுக்குச் செய்திருப்பது போலவே தேயிலைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சம்பளத்தில் ஒரு பகுதியை அட்வான்ஸ் ஆகக் கொடுத்துத் தவணையில் வாங்கிக் கொள்ளலாம் என்றால் பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்ட் இடம் கொடுப்பதில்லை. இதையும் அவசியம் கவனிக்க வேண்டும்.

பரம்பிக்குளம் திட்டம் என்னுடைய பிராந்தியத்தில்தான் உருவாகிறது. நான் அந்தப் பிரதேசத்தின் வாசி. சுமார் எண்பது எண்பத்தெட்டு மைல் மழை பெய்யக்கூடிய பகுதி நிலங்களில் இருந்து தண்ணீர் வீணாக அரபிக்கடலில் போய் விழுந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய பாவத்தோடு கேரள சர்க்காருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு இந்தத் திட்டத்தை உருவாக்கினால் கேரள ராஜ்யத்திற்கு வேண்டிய தண்ணீரையும் சப்ளை செய்யலாம். இங்கும் நான்கைந்து தாலுக்காக்கள் செழிப்பு அடையும். இந்தப் பரம்பிக்குளம் திட்டம் உருவானால் கோவை ஜில்லா நிச்சயம் வளம் பெறும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஆக்கமுறையில் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறு சேமிப்புத் திட்டத்தில் மிகவும் உற்சாகமாக எல்லோரும் இருந்த போதிலும் ஒரு சில அரசியல் கட்சிகள் இதற்கு எதிராகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். மேற்படி கட்சிகளின் தலைவர்களை நான் சந்தித்து சுவரை வைத்துக் கொண்டு தான் சித்திரம் எழுதவேண்டும், நம் நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் தான் இந்தத் திட்டம் வெற்றிபெறும் என்பதைச் சொன்னேன். குறிப்பாக தி. மு. க. கட்சித் தலைவர்கள் இந்தச் சிறு சேமிப்புத் திட்டத்தை ஆதரித்து அறிக்கைவிடவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

11th February 1958] [Sri K. Ponnian]

ஹரிஜன மக்கள் நூற்றுக்கு 90 பேர் வாழும் எங்கள் பிரதேசத்தில் இன்னொரு முக்கிய பிரச்னை ஆதிவாசிகளைப் பொறுத்தது. ஆதிவாசிகள் நம் நாடு சுதந்திரம் அடைந்து பத்து வருஷம் ஆகியும் இன்னமும் மிருகங்களைப் போலவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களுக்குச் சில சலுகை அளிக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் ஓடிவிடுகிறார்கள். அவர்களை எப்படியாவது வெளியில் இழுத்துவந்து கல்வி அளிக்கவேண்டும். கல்வி கொடுத்து பொருளாதார வகையில் நம்மைப் போலவே அவர்களும் ஆவதற்கு விவசாய பூமிகளைக்கொடுத்து ஆதிவாசிகளின் முன்னேற்றத்தில் சர்க்கார் அக்கறை காட்டவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பூராவும் ஹரிஜனங்களாக இருக்கிறார்கள். ஒரு எஸ்டேட்டை மூன்று நான்கு டிவிஷனாக பிரித்து வைத்திருக்கிறார்கள். அங்கே சுமார் 45 பிள்ளைகள் செல்லக்கூடிய ஒரு பள்ளிக்கு ஒரு வாத்தியாரை அமைத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு எஸ்டேட்டில் 300, 400 படிக்கவேண்டிய பிள்ளைகள் இருக்கிறார்கள். சொந்த இடங்களில் சிலர் பள்ளிக்கூடம் வைப்பதற்கு அனுமதிக்க மறுக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டுகள் பள்ளிகளை நடத்தலாம் என்றால், அதற்கு சர்க்காரின் மான்யம் தேவைபடுகிறது. இப்படியாக பல பிரச்னைகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் தீர்வு காணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த கவர்னர் உரையின் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். 11-00 a.m.

SRI A. RAJA GOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, வணக்கம். இப்பொழுது கவர்னர் உரையை வரவேற்று நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்கார் இந்த ராஜ்யத்தில் இருக்கக்கூடிய தூர்ந்துபோன குளங்களை எல்லாம் ஆழப்படுத்தி மக்களுக்கு பயன்படும்படியாக செய்வதற்கு முன்வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். எங்களுடைய ராசிபுர தாலுக்காவானது மிகவும் வரண்ட பிரதேசமாக இருக்கிறது. அங்குள்ள ஏரியில் பலர் விவசாயம் செய்கிறார்கள். ஆதலால் மழைபெய்து தண்ணீர் வந்தாலும்கூட அந்த ஏரி நிரம்பாமல் இருப்பதற்கு வழி செய்துவருகிறார்கள். இதனால் மற்ற பாகங்களில் உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் போய்விடுகிறது. இந்த நிலைமையில் ஏரிகளிலே உள்ள விவசாயிகளை அப்புறப்படுத்தினால்தான் ஏரியில் தண்ணீர் நிரம்பும். அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ராசிபுரம் தாலுக்காவில குடி தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. நாம் கல்லில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் போடப்பட்டபோதிலும் அதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்படாமல் விட்டு விட்டார்கள். ஆகவே இதை அரசாங்கம் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது சேர்த்து குடிதண்ணீர் பஞ்சத்தை போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக அரசாங்கம் மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும்கூட இரவு நேரத்திலேதான் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்து வருகிறார்கள். ஆதலால் அது விவசாயிகளுக்கு பயன்படாமல் போய்விடுகிறது. விவசாயிகளுக்கு பகல் நேரத்திலே மின்சாரத்தைக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நம் நாட்டிலே ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தாரால் அவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் ரிபேட் ஆனது ஒரு லட்சம் நெசவாளர்களுக்குத்தான் பயன்பட்டு வருகிறது. ஆகவே அரசாங்கம் ஐந்து லட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கும் பயன்பெறுமாறு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri A. Raja Gounder] [11th February 1958

இப்பொழுது பஸ் ரூட் கொடுப்பதில் பழைய பஸ்காரர்களுக்குத்தான் பர்மிட் கொடுத்துவருகிறார்கள். அதனால் மற்ற தகுதியும் வாய்ப்பும் வாய்ந்தவர்கள் பஸ் டிரான்ஸ்போர்டை நடத்தக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு பஸ் ரூட் பர்மிட் கொடுப்பதில்லை. ஆகவே அரசாங்கம் அம்மாதிரி வசதி உள்ளவர்கள் பஸ் போக்குவரத்தை நடத்துவதற்கு வாய்ப்பு அளிக்க அரசாங்கம் அவர்களுக்கு ரூட் பர்மிட் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது கவர்னரின் உரையின் பேரில் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI A. R. MARIMUTHU : கனம் சபைத்தலைவர் அவர்களே, இன்றையதினம் கவர்னர் உரையின் பேரில் கொண்டுவந்துள்ள திருத்த பிரேரேபணையைப் பற்றி பேச முன்வந்துள்ளேன். நம் நாட்டிலே பிரிவினை மனப்பான்மை தலைதூக்கி நிற்கிறது. இந்த நாளிலே நமது சர்க்கார் பல காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. இன்றைக்கு நாட்டிலே மக்களால் கொடுக்கப்படுகின்ற வரிப்பணம் இந்த மாகாணத்திற்கே செலவிடப்படாமல் வெளிமாகாணங்களுக்குப் போய் சேருகிறது என்று பலரால் பேசப்பட்டு வருகிறது. சர்க்கார் இதில் கவனம் செலுத்தி இந்த மாகாணத்தில் நம் மக்களால் மத்திய சர்க்காருக்கு செலுத்தப்படுகின்ற வரிப்பணம் எவ்வளவு என்றும் அந்த வரி வசூலில் இந்த சமயத்தில் எந்தெந்த காரியத்திற்காக எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது என்ற புள்ளி விவரத்தையும் சர்க்கார் தயாரித்து வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற கட்சிகளைவிட அரசாங்க கட்சிக்குத்தான் அதிகமான பொறுப்பு இருக்கிறது. மேலும் மற்ற கட்சிகளுக்கு இருக்கும் வசதிகளைவிட அதிகமான வசதிகள் அதற்குத்தான் இருக்கின்றன. ஆகவே அவர்கள் இந்த புள்ளி விவரங்களை தயாரிக்க முடியும். இதை தயாரித்து வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கவர்னர் உரையில் இந்த நாட்டிலே விளைச்சல் அதிகமாக இருப்பதால் இந்த நாட்டில் உள்ள நியாய விலை கடைகளை எடுத்து விடலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் தஞ்சை ஜில்லாவில் விளைச்சல் மிகக் கம்மியாக இருக்கிறது. அங்கு இப்பொழுது இருக்கக்கூடிய உணவு நெருக்கடி காரணமாக விலை அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் அங்கு விளைச்சல் மிகக் குறைந்து, விளைந்த நெல்லும் சாவியாகி இருக்கிறது. ஆகவே விளைச்சல் குறைந்திருக்கும் இந்த நேரத்தில் நியாயவிலை கடைகளை அடைப்பது சரியல்ல. நகரங்களில் வசிக்கும் தொழிலாளர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே நியாய விலை கடைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நம் நாட்டில் விவசாயிகள் முன்னேற்றம் அடையாமல் கடன்பட்டு வாழ்கிறார்கள். அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்து அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கெல்லாம் ஒரு தீர்வு காணுவதற்கு நிலச்சீர்த்திருத்த சட்டம் உடனடியாக கொண்டுவரவேண்டும். சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு விவசாய நிபுணர் நிலச்சீர்த்திருத்த சட்டத்தை எல்லாம் சிறிது சிறிதாக கொண்டு வராமல் ஒரே நேரத்தில்கொண்டு வரவேண்டும். இதில் காலதாமதம் இருக்கக்கூடாது. இதில் அரசாங்கம் திட்டவட்டமான கொள்கையை அனுசரிக்கவேண்டும். அப்பொழுதுதான் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். அப்பொழுதுதான் உற்பத்தி பெருக்கமும் அதிகமாகும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே சர்க்கார் இந்த நிலச் சீர்த்திருத்த சட்டத்தை உடனடியாக கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கவர்னர் உரையில் அதிகமாக நிலம் வாங்குவதை தடுத்துவிடவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்வதில் எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஸ்ரீ லாஸர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பாக அதிகமாக நிலம் வைத்திருப்பவர்கள் தங்கள் நிலத்தை பராதீனம் செய்யாமல், மாற்றாமல் இருப்பதற்கு முதலில் தடை செய்யவேண்டும். இந்த முறையில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11th February 1958] [Sri A. R. Marimuthu]

இந்த நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் பெரும்பாலும் ஹரிஜன மக்கள். அவர்கள் குடியிருக்க வீடுவசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் வீடுகட்டிக்கொள்ள மனைக்கட்டுகளும், கடன் வசதியும் செய்துகொடுக்க அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சிறு நிலச்சொந்தக்காரர்களுக்கு பணம் தேவைபடுகிறபடியால் அவர்கள் லேவா தேவிகாரர்களிடம் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அதிகமான வட்டி வாங்கக்கூடாது என்ற தடை இருப்பதனால், அந்த லேவாதேவிகாரர்களும் அவர்களுக்கு பணம் கொடுப்பதில்லை. குறிப்பாக, பட்டுக்கோட்டை, ஒறத்த நாடு, அரந்தாங்கி போன்ற தாலுக்காக்களில் ஜமீந்தாரி, இனாம்தாரி ஒழிப் 11-10 a.m.
புக்கு உட்படுத்தப்பட்ட கிராமங்களிலுள்ள அவல நிலையிலுள்ள விவசாயி களிடம் வரி பாக்கிகள் இருக்கின்றன. சென்ற ஆண்டு பூரா வரி பாக்கி யையும் வசூலிக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவுபோட்டனர்.அதன் விளைவாக, விவசாயச் செலவிற்காக வைத்துக்கொண்டிருந்த பணத்தை யெல்லாம் விவசாயிகள் வரிக்குக் கட்டிவிட்டனர். இதன் காரணமாகவும், விவசாயப்பொருள் உற்பத்தி நாம் எதிர்பார்த்த அளவு ஏற்படாமல் கம்மியாகியிருக்கிறது என்று கொள்ளவேண்டும். மேலும், தேங்கியிருக்கும் வரி பாக்கிகளுக்கு வட்டி வசூலிக்க வேண்டுமென்று சர்க்கார் உத்திரவு போட்டிருப்பதாக அறிகிறோம். தேங்கியிருக்கும் தங்கள் வரி பாக்கிகளைக் கட்டமுடியாத நிலையில் விவசாயிகள் இருக்கும்போது அவர்களிடம் அவை களுக்கு வட்டி வசூலித்தால், அது விவசாய உற்பத்தியை பாதிக்கும். தாங்கள் போட்ட உத்திரவுப்படி சர்க்கார் வரியையும் வட்டியையும் வசூ லித்துவிடலாம். ஆனால் அப்படி வசூலிப்பதன் விளைவாக விவசாயி களுடைய பொருளாதார நிலைமை குன்றி விவசாய அபிவிருத்தி பாதிக் கப்படும் என்பதை நாம் கவனிக்கவேண்டும். ஆகவே, அந்த மாதிரி வட்டி வசூலிப்பதற்கு உத்திரவு போட்டிருந்தால் அதை ரத்துசெய்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆரம்ப ஆசிரியர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. கிராமப் புறங்களில் ஆரம்ப ஆசிரியர்கள் வீட்டு வசதியில்லாமல் கஷ்டப் படுகிறார்கள். கிராமப்புறங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கிடையாது என்று தெரிகிறது. கிராமப்புறங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்க வேண்டும். அந்த அந்தப் பஞ்சாயத்து நிதியிலிருந்து பணத்தைச் செலவு செய்து கிராமப் புறங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கலாம். இந்த யோசனையைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சமூகத்தில் அதிகப்படியான ஆவியைப்போக்கி உழைப்பவர்கள் ஆசிரியர்கள்தான். அவர்கள் இறந்தபிறகு அவர்களுடைய குடும்பங் களுக்கு எந்த நிதி உதவியும் கிடைப்பதில்லை. அவர்கள் தாங்களாக இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்வதற்கு வேண்டிய பொருளாதார வசதியற் றவர்கள். அவர்களுக்கு சர்க்கார் இலவசமாக இன்ஷ்யூரன்ஸ் வசதி செய்துகொடுக்க வேண்டியது அவசியம். ஆசிரியர்கள்தான் தேசத்தின் சந்ததிகளை நல்ல முறையில் உருவாக்குகிறார்கள். தேசத்தின் வருங்கால சந்ததிகளை நல்ல முறையில் உருவாக்க வேண்டுமானால்,ஆசிரியர்களுக்கு அவசியமான எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும்.

கிராமங்களில் மின்சார பம்பு செட்டு வைத்துக்கொண்டிருப்பவர்கள் டெபாசிட் தொகை கட்டியிருக்கிறார்கள். இப்போது " அவர்கள் அடிஷனல் டெபாசிட் " கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுவதாகத் தெரிகிறது. " மினிமம் சார்ஜ் " ஐயே கட்டமுடியாமல் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டி ருக்கும்போது அவர்களிடம் அடிஷனல் டெபாஸிட் கேட்பது முறையல்ல. அப்படிப்பட்ட உத்தரவு இருந்தால் அதையும் ரத்துசெய்துவிட வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI A. A. RASHEED: Mr. Speaker, Sir, I rise to support the motion of thanks to the Governor for his Address to the Legislature. We are indeed fortunate in having a citizen of Assam as Governor of our State, for, Assam also has a backward economy similar to our State. I am sure, Sir, that we will have in him a proper intermediary between our State and the Central Government, in voicing forth our grievances more emphatically.

[Sri A. A. Rasheed] [11th February 1958

Sir, the Governor has, in his Address, referred to the official language controversy. It has become a fashion to raise controversies in one platform and to reply to the same from another platform. Instead of talking to each other, we are talking at each other, as a result of which animosity and heat are produced. I humbly suggest that a Round Table Conference of all those politicians who are opposed to our State policy in the matter should be convened and they should be convinced that the attitude that we have taken is in the best interests of our State. Thereby, we will not only solve the language problem, but peace in the State will not be disturbed. It is indeed regrettable that a State which was once very famous for its peace and tolerance has now become a disturbed State. I think the political parties must share the blame for it, because they have not done anything to maintain that reputation of old. Sir, fissiparous tendencies are raising their ugly heads all over the State. To-day, we are living in the Atomic and Sputnik age where it is difficult even for a powerful and independent State to live in isolation. In other parts of the world, sovereign States have joined together to form confederations and federations, whereas in our State, political parties have joined together to agitate for a separate Tamil Nad which, I am afraid, may not survive in view of the modern technique and scientific progress.

Sir, I cannot understand why North Arcot district has been treated to as a neglected and forgotten district. Irrigation facilities in North Arcot district are so few that irrigation facilities should be improved immediately. Besides that, there are very few industries in the district; except the tanning industry, I am afraid, there is no industry of any big nature. I would request the Government to start at once some big industries in North Arcot district, so that unemployment problem there might be solved.

Sir, as I have already referred to, the tanning industry is one of the main industries which earn foreign currency, not only for our State, but for the whole of India. But in giving loans to that industry, only stepmotherly treatment is meted out to the tanners. I am sorry to say that loans have not been liberally granted to the tanners. Now the tanning industry is passing through a crisis and unless the Government go to their help, I am afraid, they will be in difficulties soon.

Sir, I read in the newspapers that the starting of the fertiliser factory in Neiveli might be shelved for the time being for want of foreign exchange. Chemical fertilisers are so badly needed by our peasants that this factory must be started at all costs, whether we get foreign exchange or not. Let us tell the Central Government without mincing words that this factory should be started within this Five-Year period.

As indicated in the Governor's Address, various Bills are proposed to be brought before this Assembly. The proposed Bill to regularize the conditions of the beedi workers is long overdue and I welcome the Government bringing that Bill. Sir, there is some lacunae in the Wakfs Act passed by the Central Government in

11th February 1958] [Sri A. A. Rasheed]

1954. Endowments made by non-Muslims have not been brought under the purview of the Act. I therefore request the Government to arrange to rectify the defects, since there are a large number of endowments made in our State by non-Muslims.

Sir, on the whole, I welcome the Governor's Address and also support the motion of thanks to the Governor. Thank you, Sir.

SRI K. S. SUBRAMANIA GOUNDER : கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையைப் பாராட்டி நன்றிதெரிவிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.. கவர்னர் அவர்கள் தமது உரையில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைப்பற்றி விளக்க மாகக் கூறியுள்ளார்கள். ராஜ்யத்தில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் பற்றிப் பேசுவது கவர்னர் உரை ஆகாது. அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதையும், அந்தக் கொள்கையைப் பின்பற்றி அரசாங்கம் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவிப்பதுதான் கவர்னர் உரை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இப்போது நம் முன்புள்ள பிரச்னை மொழிப் பிரச்னை. அது சம்பந்தமாக அரசாங்கத்தின் நிலை என்ன என்பதைப்பற்றி கவர்னர் அவர்கள் தெளிவாகப் பேசியுள்ளார்கள். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழிதான் அரசாங்க மொழி என்று நாம் முடிவுகட்டிவிட்டோம். மேலும், பொங்கல் தினத்தன்று 1922 அலுவல கங்களில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டதென்றும் கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

என் எதனால் தாமதமாகிறது என்பதைப் பற்றி அரசாங்கம் பலயிடங்களி லும் பல சந்தர்ப்பங்களிலும் தாமதத்திற்குள்ள காரணம் என்ன என்பதைப் பற்றி விளக்கியுள்ளார்கள். குறிப்பாக, தமிழ் டைப்ரைட்டர்கள் பெரிய அளவில் இல்லை என்பதை தெரிவித்துள்ளார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துள்ளார்கள். ஆனால் நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக எடுத்து வருகிறது என்பதை நம் எல்லோருக்கும் தெரியும். பொதுவாக ஆட்சிமொழி சம்பந்தப்பட்டவரையில் அதிலும் குறிப்பாக இந்தி மொழி சம்பந்தப்பட்டவரையில் என்ன செய்வது என்பதை பொறுத்தவரையில் நம் அரசாங்கத்தின் கருத்தாக மட்டும் இல்லாமல் நமது ராஜ்யத்தில் உள்ள சகல கட்சித் தலைவர்களையும் வைத்து எல் லோருடைய அபிப்பிராயத்தையும் ஒன்று சேர்த்து ஒரு முடிவான அபிப் பிராயத்தை நமது அரசாங்கம் தெரிவித்திருக்கிறார்கள் என்றால் அதை விட அதிகமாக என்ன செய்ய முடியும் என்று நான் கேட்கிறேன். ஏதோ கட்சி பிரசாரத்திற்காக மொழியை ஒரு தூண்டுகோலாக வைத்து கட்சியை வளர்ப்பது என்ற கொள்கை நியாயமற்றது என்று தெரிவித்துக்கொள் கிறேன். ஏனென்றால், மொழியில் பற்று இல்லாதவர்கள் யாருமே இல்லை. இப்பொழுது செய்யக் கூடிய பிரசாரத்திலே இனி எல்லாம் இந்தியாக போய்விடப் போகிறது. தமிழ் என்பதே இல்லாமல் போய்விடும் என்று பொது மக்கள் நினைக்கக்கூடிய அளவிற்கு பிரசாரம் செய்து வருவது நம் நாட்டிற்கு நல்லதல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த கட்சித் தலைவர்கள் மகாநாட்டில் சட்டசபை அங்கத்தினர்கள் வந் தார்களா அல்லது சட்டசபையில் அங்கத்தினர்களாக இல்லாதவர்களும் வந்தார்களா என்பதல்ல பிரச்னை. எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் தெரிவித்திருக்கிறதே தவிர, சட்டசபையின் அபிப்பிராயமாக இல்லாமல் எல்லாக் கட்சிகளுடைய அபிப்பிராயமாக இருக்க வேண்டுமென்ற முறை யில்தான் அதைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை நாம் எல்லோரும் வரவேற்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 11-20 a.m.

இப்பொழுது ஜோனல் கௌன்ஸில் என்று ஒன்றை வைத்து நான்கு ராஜ்யங்களுக்குப் பொதுவாக ஒரு சபை ஏற்படுத்தி அதன் மூலமாக ராஜ்யத்திற்கு ராஜ்யம் இருக்கக்கூடிய சிக்கல்களையும், ஒரு ராஜ்யத்திற்கு

[Sri K. S. Subramania Gounder] [11th February 1958

மற்ற ராஜ்யத்திஞல் ஏற்படும் பலன்களைப் பற்றியும் விவாதிக்கப்பட்டு அதஞல் நல்ல முடிவுகளும் ஏற்படப் போகிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருக்கிருர்கள். குறிப்பாக பரம்பிக்குளம் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் இதஞல் நல்ல முறையில் உருவாக வசதியிருக்கிறது என்பதையும் தெரிவித்து இருக்கிருர்கள். நிலச்சீர் திருத்தமும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. திட்டத்தை பூரண மாக ஆராய்வதில் சற்று தாமதம் ஏற்படுவதால், அதற்குள்ள ஒரு சட்டம் ஏற்படுத்தி ஓரளவிற்கு மேல் நிலம் வாங்கக் கூடாது என்பதை குறித்து அரசாங்கம் ஒரு சட்டம் ஏற்படுத்தப் போவதாகத்தெரிவித்துள்ளார்கள். இது மிகவும் அவசியமே. அதை எல்லோரும் வரவேற்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்த நிலச்சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் இவ்வளவு ஏக்கர்கள் நிலந்தான் வைத்திருக்கலாம் என்பதை விட நிலத் தின் மூலம் வரும் வருமானத்தைப் பொறுத்து நில வரம்பு வைப்பது தான் நல்ல முறையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். ஏனெனில், பத்து ஏக்கர் நிலம் ஒருவன் வைத்திருந்தால் அதஞல் வரும் வருமானம் எல்லா இடத்திலும் சமமாக இருக்காது. பத்து ஏக்கர் வைத்திருக்கக்கூடிய எல்லோருக்கும் ஒரேமாதிரி வருமானம் வரும் என்று சொல்ல முடியாது. ஆகவே, நிலத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் இடத்திற்கு இடம் மாறுவதால், உச்ச வரம்பு நிர்ணயிப்பது வருமானத்தின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் பருவ நிலே எவ்வாறு இருக் கிறது என்பதைப் பற்றியும் கவர்னரது உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பற்றுக்குறையைப் போக்குவதற்காக காவேரி நதி பாயக் கூடிய சில இடங்களில் மூன்ருவது போகத்திற்கு கொடுப்பதாக கூறப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவிலும், காவேரி பாயக் கூடிய இடங்களில் மூன்ருவது போகத்திற்கு காவேரி தண்ணீர் கொடுப்பதற்கு வேண்டியதை அரசாங்கம் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதே சமயத்தில் பொதுவாக நமது ராஜ்யத்தில் பருவ நிலே நன்கு இருந்தாலும், சேலம் ஜில்லாவில் திருச் செங்கோடு, ஓமலூர், சேலம் போன்ற இடங்களில் இந்த வருஷம் மழை இல் லாததால் கிணறுகளில் கூட குடிக்க தண்ணீர் இல்லாத நிலே இருக்கிறது என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே அங்கு குடி தண்ணீருக்காக, அங்குள்ள கிணறுகளே ஆழப்படுத்தவும், சில அரசாங்க வேலேகள் செய்யவும், அதா வது "பாமின் ரிலிப் வொர்க்ஸ்" செய்யவும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். அந்த இடங்களில் எல்லாம் கிஸ்து வஜா செய்யவும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிறு சேமிப்புத் திட்டம் பற்றியும் கவர்னர் அவர்களது உரையில் குறிப்பிட் டிருக்கிருர்கள். இந்தத் தடவையும் அரசாங்கம் மக்களிடம் இருந்து கஷ்டப்படுத்தி பணம் வசூலித்தார்கள் என்று குற்றம் சொன்ஞர்கள். அப்படிச் சொல்வது உண்மையல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையில் ஒவ்வொரு இலாகாவும் தனித்தனியாகப் போய் வசூலித்து வந்தார்கள், ஆனுல் இந்தத் தடவை அப்படியில்லாமல் எல்லா இலாகாக்களும் ஒன்ருகச் சேர்ந்து போய் எந்த அளவிற்கு அவர் களால் கொடுக்க முடியுமோ அதையே கேட்டார்களே தவிர வற்புறுத்தி ஞர்கள் என்று சொல்லமுடியாது. கேட்டது தவறு என்று வைத்துக்கொண்டால்தான் இதஞல் தவறு என்று சொல்ல முடியுமே தவிர வற்புறுத்திஞர்கள் என்று இந்தத் தடவை சொல்ல முடியாது. பொதுமக்களும் அதற்கு பூரண ஆதரவு கொடுத்தார்கள் என்றும் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள், நமது அரசாங்கத்திற்கு சிறு சேமிப்புத்திட்டம் மூலம் முடிந்த அளவு கொடுத்தால்தான் அரசாங்கத் திற்கும் தங்கள் ஊரில் அல்லது தொகுதியில் இல்லாவிட்டால் தங்கள் தாலுகாவில் ஏதாவது நன்மை கிடைக்கும் என்பதை மக்கள் நன்கு உணர்ந்துதான் அதற்கான முறையிலே அரசாங்கத்திற்கு பூரண உதவி அளித்தார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடி யாக, நெசவாளர்களைப் பொறுத்தவரையில் இப்பொழுது 9 நயா பைசாவிலிருந்து ஆறு நயா பைசாவாக குறைத்தது பொதுவாக நெச வாளர் சமுதாயத்திற்கு ஒரு பெரும் குறையை அல்லது கஷ்டத்தை ஏற்

11th February 1958] [Sri K. S. Subramania Gounder]

படுத்தியிருக்கிறது, என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். நமது ராஜ்ய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதற்கு, நெசவாளர்களுக்கு பூரண ஆதரவு கொடுத்தாலும் மத்திய அரசாங்கம் நல்ல முறையில் நிலைமையைப் புரிந்து கொள்ளாதது வருந்தத் தக்க விஷயமாகும். இந்த 9 நயா பைசாவை 6 நயா பைசாவாக ரிபேடைக் குறைத்தது, எல்லா நெசவாளர் சங்கங்களிலும் துணி தேங்கி பண முடை மிக அதிகமாகி இருப்பது ஒருபுறமிருக்க கைத்தறித் தொழிலாளர்களுக்கு கூலி கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால், துணி தேங்கியிருக்கின்ற காரணத்தினால் நெசவாள சங்கங்களும், தனிப்பட்ட மாஸ்டர் வீவர்களும் நெசவாளர்களுக்கு வேலை கொடுப்பதை நிறுத்தி விடுகிறார்கள். ஆக, ரிபேட் குறைந்த காரணத்தினால் நெசவாளர் சங்கங்கள் நஷ்டத்தில் வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்து இந்த விபரங்களை எல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு பூர்ணமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் இவ்வரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது கடன் சட்ட மசோதா கொண்டுவந்ததன் காரணமாக கிராமங்களில் பணம் கிடைப்பது மிகவும் அரிதாகிவிட்டது. அரசாங்கம் அச்சட்டம் கொண்டுவந்ததன் காரணமாக அநேகர் லேவாதேவியை நிறுத்தி விட்டார்கள். இப்பொழுது, கிராமாந்திரங்களில் பணம் வேண்டுமென்றால் கூட்டுறவு சங்கங்கள் தவிர வேறு இடத்தில் பணம் வாங்கக் கூடிய மார்க்கமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆக, கூட்டுறவு சங்கங்களில் போதிய அளவு மூன்று வருடக் கடனும், ஐந்து வருடக் கடனும் போதிய அளவு இல்லாத நிலையிருப்பதால் அரசாங்கம் இதைக் கவனித்து உடனடியாக அரசாங்கத்தில் இருந்தாவது வேண்டிய அளவு பணம் கூட்டுறவு இயக்கத்திற்கு கொடுத்து இந்த நிலைமையைச் சமாளிக்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இதை உடனடியாகச் செய்யாவிட்டால் குறிப்பாக விவசாயிகள் பணத்திற்காக மிகவும் கஷ்டப்படுவார்கள்.

மின்சார விஸ்தரிப்பை பொறுத்தவரையில் பொதுவாக நம்முடைய நாடு முன்னணியில் இருந்து கொண்டு வருகிறது. இந்த விதத்தில் முன் 11-30
னேறி வரும் சமயத்தில் சில கஷ்டங்களும் இருக்கிறது என்பதை சொல்ல a.m.
விரும்புகிறேன். இப்போது இரண்டு வருஷ காலமாக மழை இல்லாது இருப்பதால் கிணறு வெட்ட வேண்டி இருக்கிறது. ஆனால் கிணறுகள் அடி வெட்டுவதற்கு பகலில் மின்சாரம் தேவைப்படுகிறது. இதற்கு இவர்களுக்கு பகலில் மின்சாரம் கொடுப்பதில்லை என்று எலக்ட்ரிஸிட்டி போர்டு திட்டம் வகுத்து இருப்பதானது அது மக்களுக்கு நலன் தருவதாக இல்லை என்பதை மின்சார போர்டார் உணர வேண்டும். இப்போது இருப்பதை மாற்றி பகலில் மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, விவசாயிகள் ஆலை அடித்து வெல்லம் காய்ச்சுவதற்றாக இருந்தால் கிரஷர் வைத்து பகலில் செய்ய முடியுமே தவிர இரவில் செய்யமுடியாது. ஆகையால் ஆலை அடித்து வெல்லம் காய்ச்சுவதாக பகலில் மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் சப்ளையை பொறுத்தவரையில் இடப்பாடி பஞ்சாயத்து ஏரியாவுக்கு காவேரியிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். இதற்காக வேண்டிய திட்டங்களை பரிசீலனை செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆதலால் இதை சீக்கிரம் ஆரம்பிக்க உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த கனம் சபா நாயகர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கின்றேன்.

SRI A. V. P. ASAITHAMBI : On a point of information, Sir, கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது ஆட்சி மொழிபற்றி நடந்த மகாநாடு சட்டசபை சர்வ கட்சி கொண்டது அல்ல என்றும் அது எல்லா கட்சித் தலைவர்களும் கொண்டது என்று சொன்னது சரியானது தானா என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[11th February 1958

MR. SPEAKER : மந்திரி அவர்கள் இதைப் பற்றிப் பின்னல் கூறுவார்கள்.

SRI S. RAMASWAMI THEVAR : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய குழப்பம், இங்கு இருந்து கொண்டிருக்கக்கூடிய அமைதியின்மை இவைகளைப்பற்றி குறிப்பிடாமல் இருந்ததுபற்றி வருந்த வேண்டியிருக்கிறது. மக்களுடைய உடைமையையும் உயிரையும் பாதுகாப்பதைப்பற்றி குறிப்பிடாமல் இருப்பது வருத்ததை கொடுக்கிறது. மற்றும் சிறு சேமிப்பு திட்டத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேமிப்புத்திட்டம் தேவைதான். மக்கள் சேமிக்க வேண்டியதுதான். நாட்டில் பல கஷ்டங்கள் ஏற்படும் பொழுது பண வருவாயை உண்டாக்குவது அவசியம் தான். ஆனுல் மக்களை பலாத்காரம் செய்து பணம் வசூலிப்பது ஆகாது என்பதைதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். யுத்த காலத்தில் பல விதமான கஷ்டங்களுக்கிடையிலும் வெள்ளையர்களால் யுத்த நிதி வசூலிக்கப்பட்டது. அதே மாதிரிதான் இன்றும் கொடுமையாக நாட்டில் பண வசூல் நடைபெறுகிறது என்பதை சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக மக்கள் ரிஜிஸ்டர் ஆபீஸுக்கு சென்ருல் சேமிப்பு திட்டத்திற்கு பணம் கொடுத்தால்தான் பதிவு செய்யக்கூடிய முறையில் இருந்துகொண்டிருக்கிறது. நாம் இதை பெருமையாக சொல்லுவதில் பயனில்லை. நாட்டில் போய் பார்க்கவேண்டியிருக்கிறது. இந்த சிறு சேமிப்பு திட்டத்தைப்பற்றி கிராமப்புற மக்களிற் யாருக்குத்தெரியும் ? யாருக்காவது எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறதா ? இதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. எங்கு போனுலும் அதை கொடு இதை கொடு என்று மக்களை பலாத்காரம் செய்தால் பயனில்லை. மக்களிடத்தில் திட்டத்தைப்பற்றி விளக்கி எடுத்துரைத்து மக்களுடைய உண்மையான மனதோடு பணம் வாங்குவது தான் உண்மையான நிதியாகும். அதன்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக அரந்தாங்கி தாலுகாவில் பட்டுக்கோட்டை தாலுகாவைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்த தாலுகாவிலுள்ள மக்கள் இரண்டு தடவை ஏற்பட்ட புயலால் கஷ்டப்பட்டார்கள். 1952-ம் ஆண்டிலும், 1955-ம் ஆண்டிலும் புயலால் பாதிக்கப்பட்டு அவர்களுடைய உடமைகளை இழந்து ஆயிரக்கணக்கான ரூபாய் நஷ்டமடைந்து இருக்கிருர்கள். அப்படிப்பட்ட மக்களிடத்தில் இன்றைக்கு வரிக்கொடுமை அதிகமாக இருந்து கொண்டுவருகிறது. இன்னும் இந்த இரண்டு தாலூகாக்களும் அதிகமான இனும் கிராமங்களைக் கொண்டன. இந்த கிராமங்கள் எல்லாம் சர்க்கார் வசமாகி இப்போது வரி வசூலில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இனும் ஒழிந்ததால் அங்குள்ள மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனுல் அந்த மகிழ்ச்சி இன்று அங்குள்ள மக்களிடத்தில் இல்லை. இனும்தார் கொடுமையிலிருந்து நாம் விடுபட்டோம், என்றிருந்த மக்கள் இன்று துன்பத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிருர்கள் என தெரியப்படுத்திக் கொள்கிறேன். இனும் ஒழிந்த பிற்பாடு சர்க்கார் கண்மூடித்தனமாக அந்த நாட்டினுடைய வளமையை பாராது அந்த பகுதி, அந்த பிரதேசம் மானுவாரியா அல்லது நீர்பாசனம் உடையதுதானு என்று பாராமல் ஜில்லாவில் இருக்கும் உயர்ந்த வரியை இங்கும் விதித்திருக்கிருர்கள். இது ஆட்சேபிக்கப்பட்டது. அந்த தாலுகாவில் எந்த கிராமம் அதிக வரி செலுத்துகிறதோ அந்த வரியை கேட்டார்கள். அதுவும் ஆட்சேபிக்கப்பட்டது. ஆனுல் சர்க்கார் இணங்கவில்லை. இதைப்பற்றி அங்குள்ள மக்கள் உயர் நீதி மன்றத்தில் ரிட் பெட்டிஷன் கொடுத்தார்கள். உயர் நீதி மன்றத்தில் சொன்னது எவ்விதமென்றுல் பக்கத்தில் சர்க்கார் கிராமம் என்ன வரி செலுத்துகிறதோ அந்த வரிக்கு சமமான வரியை இந்த கிராமங்களுக்கு போடுவது நல்ல முறை. அதுதான் நியாயமான முறை என்று தீர்ப்புக் கூறியிருந்தும் கூட சர்க்கார் செவி சாய்க்காமல் தாங்கள் சொல்லுவதுதான் சரி என்று நினைத்து அதிகமான வரியை போட்டார்கள். 1361-ம் பசலிக்கு உயர்ந்த வரியைக் கொடு என்று சொல்லுகிருர்கள். அக்கம்பக்கத்தில் இருக்கின்ற இடங்களில் எக்கர் ஒன்றுக்கு நான்கு ரூபாய் மூன்று ரூபாய் என்றிருக்கிறது. ஆனுல் சர்க்காரால் வசப்படுத்தப்பட்ட கிராமங்களுக்கு எக்கர் ஒன்றுக்கு 21 ரூபாய் என்றுல் அது எவ்வளவு அநியாயம் என்பதை பாருங்கள். இனும்தார்களிடமிருந்து

11th February 1958] [Sri S. Ramaswami Thevar]

விடுபட்ட மக்களுக்கு எவ்வளவு கொடுமை இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினார்கள். இதுபற்றி பல தடவை மந்திரிகளுக்கும் அரசாங்கத்தாருக் கும் மகஜர்கள் மூலமாகவும் தாக்கீது மூலமாகவும் எடுத்துச்சொல்லப் பட்டது. அவையெல்லாம் செவிடன் காதில் ஊதின சங்குபோல்தான் இருக்கிறது. கவனிப்போம், கவனிக்கிறோம், உடனடியாகவே இதற்கு வேண் டிய நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னவர்கள் இதுவரை இதைப் பற்றி கவனிக்கவேயில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள் கிறேன். எல்லா மாதங்களிலும் அதாவது வருஷத்தில் 365 நாட்களிலும் வரி வசூலா ? இதற்கு ஒரு காலவரையறை இல்லையா ? இவ்விதம் எங்கே பார்க்க முடியும் ? மக்களிடம் தான்யங்கள் இருக்கின்ற சமயங் களில் வசூல் செய்தால் நல்லது. அப்படியும் செய்வது கிடையாது. மக்கள் கஷ்டப்படுகின்ற கார்த்திகை, ஐப்பசி போன்ற மாதங்களில் வந்து தான்யங்களையும் மாடுகளையும் ஜப்தி செய்கிறார்கள். இது என்ன முறை என்று கேட்க ஆசைப்படுகிறேன். இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். முதலாவது சர்க்கார் வசப்படுத்துவதற்கு இரண்டு வருடம் தாமதமானது. அதன் பின்னால் கணக்கெடுப்பில் தாமதம் ஏற்பட்டது. அதன்பின புயல் ஏற்பட்டதினால் இரண்டு ஆண்டுகள் தாமதமானது. இவ்விதமாக ஆறு வருடமாக வசூல் சர்க்கார் செய்யவில்லை. இவ்விதமாக வசூல் பண்ணாமல் விட்டுவிட்டு திடீரென்று ஒரே வருஷத்தில் மக்களை போய் கேட்டால் மக்கள் என்ன செய்வார்கள். இவ்விதமாக மக்களிடம் ஒரேயடியாக கொடுங்கள் கொடுங்கள் என்று கேட்பது நியாயம் அல்ல என்று சொல்ல விரும்பு கிறேன். ஒரு சர்க்கார் நடப்பதற்கு மக்களிடம் வரி வசூல் செய்வது அவசியம் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இப்போது கொடுக்க வேண்டியதை தவணை தவணையாக கொடுக்கிறோம் என்று சொல்லு கிறார்கள் மக்கள். ஒரேயடியாக கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் விடாப்பிடியாக மக்களிடம் வரி வசூல் செய்வதை நான் கண்டிக்கிறேன்.

அடுத்தபடியாக ஒரு நல்ல திட்டம், ஒரு நல்ல தொழிற்சாலை எங்கு நடக்கவேண்டுமென்றால், வரண்ட பிரதேசத்தில், அல்லது மிகவும் பிற்போக்கான பிரதேசத்தில் நடக்கவேண்டும். என்னென்னவோ திட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கடலில் மழை பெய்வதுபோல், இந்தத் திட்டங்களெல்லாம் வளமுள்ள பிரதேசத்தில் ஏற்படுத்தப்படுகிறது. எங்கள் பகுதி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதி மிகவும் பிற்போக்கான கல்வியற்ற, எதுவும் இல்லாத பகுதி. இந்தத் திட்டங்களை அம்மாதிரியான பகுதிகளில் ஆரம்பிக்கவேண்டும். பிற்போக்கு பிராந்தியமல்லாத நல்ல இடங்களில் ஆரம்பிப்பதால் பயனில்லை என்று இந்த சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 11-40 a.m.

இன்னும், இந்தப் புயல் காலத்திலும், மற்ற காலங்களிலும் சர்க்கார் கடன்களை வழங்கியிருக்கிறார்கள். கடன்களைத் திருப்பித்தர வழியில்லாத வர்களாக அந்த மக்கள் இருப்பதால், வாங்கியிருக்கிற கடனை தவணை தவணையாக வாங்கிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாகச் சொல்லும்போது, கடன் வாங்குவதில் 100-க்கு 40 பாகம்தான் மக்களிடம் செல்லும். மற்றைய 60 பாகம் வீணாகப்போய் விடுகிறது. இது இன்னும் சீராக்கப்படவில்லை. அது இன்னும் நாளது வரை நடந்து வருகிறது. இந்த வசதிகள் கொடுப்பதில் ஒரு கண்டிப்பு கிடையாது. முக்கியமான வேண்டிய நேரத்தில் விதைகள், உரம் முதலிய வைகள் விவசாயிகளுக்கு வந்து சேருவதில்லை. பருவம் போன பிறகு உரம் கொடுக்கிறார்கள். ஆகையால் உரத்தைப் பயன்படுத்தாமல் விற்று விடுகிறார்கள். அப்படி விற்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகையால் உரம் முதலிய வசதிகளை காலா காலத்தில் வேளாண்மை செய்யும் முன்பு கிடைக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சாரத்தைப்பற்றிப் பேசும்போது, நமது மாகாணத்தில் மின்சாரம் அதிகம் உற்பத்தியாகிறது, அதிகப்படியான கிராமங்களில் பயன்படுகிறது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். எங்கள் பகுதியாகிய அரந்தாங்கியைப் பொறுத்தவரையில் மின்சாரத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியாது. அது அரந்தாங்கி என்ற சிறு நகரத்தில் மாத்திரம் வெளிச்சத்திற்காகப் பயன்படுகிறதே தவிர வேறு தொழிலுக்கு

[Sri S. Ramaswami Thevar] [11th February 1958

உபயோகப்படுவதில்லை. அரந்தாங்கி வடப்பகுதி மக்கள் புஞ்சை விவசாயிகள். புஞ்சை வேளாண்மைக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கிறது. மின்சாரம் உபயோகப்படுத்தப்படவில்லை. அங்கு மின்சாரம் வினியோகிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று மின்சார அமைச்சர் அவர்களை நான் மன்றுடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் கிராம அதிகாரிகளைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியிருக்கிறது. அங்கு என்ன நடக்கிறது என்பதற்கு கணக்கு வழக்கில்லை. ஒரு விவசாயிக்கு எவ்வளவு நிலம் என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை. செட்டில்மெண்ட் ஆகியிருக்கிறது. அதோடு சொந்தமாக விவசாயம் செய்யக்கூடிய பகுதி இருக்கும். கூட்டுபட்டாக்கள் பல இருக்கும். கூட்டுப் பட்டா நிலம் என்று சொல்லுவார்கள். அது சொந்த நிலமாக இருக்கும். இம்மாதிரி பித்தலாட்டங்கள் இருக்கும். பித்தலாட்டம் என்கிற வார்த்தை பார்லிமெண்டரி வார்த்தை இல்லையென்று சபா நாயகர் ஆட்சேபிக்கலாம், மாறுபாடுகள் இருக்கலாம்.

Mr. SPEAKER : பித்தலாட்டம் என்பதற்குச் சரியான அர்த்தம் தெரியாமல் அந்த வார்த்தையை உபயோகிக்கலாம் என்று முன்பு சொன்னேன். ஆனால், நண்பர்கள் பித்தலாட்டம் என்பதற்கு "பிராட்" என்று அர்த்தம் என்று சொன்னார்கள். அது பார்லிமெண்டரி இல்லை என்று சொல்லுகிறேன்.

Sri S. RAMASWAMI THEVAR : மன்னிக்கவும். உண்மையான கணக்கு வழக்கு காட்டப்படுவதில்லை. விவசாயிகள் ஏதாவது கணக்கப் பிள்ளையைப் போய்க் கேட்டால், அவர் எனக்குத் தெரியாது, கிராம முன்சீபைக் கேட்கவேண்டுமென்பார்கள். அவரிடத்திலே போய்க் கேட்டால், அவர் மற்ற அதிகாரிகளைக் காட்டுவார்கள். இந்த முறையில் இருக்கிறது. விவசாயிகளுக்கு நிலத்திற்கு எவ்வளவு வரி தரவேண்டுமென்று கண்டிப்பாகத் தெரியாது. இதே சமயத்தில் ரசீதுபற்றி சென்ற கூட்டத்தில் சொன்னபடி டிரிப்ளிகேட்டில் வைத்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதிரி நல்ல முறையில் ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு நன்மைகளும், உதவியும் செய்யவேண்டும். ஏனென்றால், அவர்களால் நாடு வாழ்கிறது. அவர்களால் நாம் வாழுகிறோம். அவர்கள் நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள் என்பதை கவனத்தில் வைத்து அவர்களுக்கு நன்மைகளைச் செய்யவேண்டுமென்று மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri M. C. MUTHUKUMARASWAMY** : கனம் மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய பேருரையை ஆதரித்து இரண்டொரு விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுடைய பேருரையிலே எடுத்த உடனே தான் யார், எதற்காக வந்திருக்கிறார் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். இதை ஏன் சொன்னேன் என்று கேட்டால், இங்கு தமிழ் நாட்டில் இருக்கிறவர்கள் எல்லோரும் நக்கீரர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள், ஆதலால் அதைச் சொல்லிவிட வேண்டுமென்று கருதுகிறார். அப்படிச் சொன்னாலும், "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று சொன்னது போல அவர்கள் சொல்வதைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன். அவர் இங்கு வந்து கவர்னர் பதவியில் அமர்ந்து மாதக் கணக்கில் ஆகவில்லை. வருஷக் கணக்கில் ஆகவில்லை. சிறிது நாட்கள் தாம் இங்கு இருந்தாலும் இங்கு இருந்த நிலைமையை அறிந்து நடந்தவைகள் என்னென்ன, நடக்க வேண்டியவைகள் என்னென்ன என்பதைக் காட்டியிருக்கிறார். அவர் யார், எங்கிருந்து வந்தார், என்ன செயல் புரிந்தவர் என்பதை முதல் பாராவிலேயே சொல்லுகிறார். அஸ்ஸாம் மாகாணம் இந்தியத் தலைநகரத்திற்கு வெகு தூரத்தில் இருக்கிறது, பொருளாதாரத்தில் பிற்பட்ட ஒரு மாகாணத்தின் பிரதமராக இருந்து அந்தப் பிற்பட்ட மாகாணத்தை நல்ல முறையில் ஆட்சி செய்வதற்காக என்னென்ன பெரிய காரியங்கள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து திறமை பெற்றிருக்கிறார். நம் தமிழ் நாடு செழிப்பாக இருக்கும் காரணத்தினால், அவர் தனக்கு இருக்கும் அனுபவத்தை வைத்துக் கொண்டு நல்ல முறையில் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு முன் வந்திருக்கிறார். இதையெல்லாம்

11th February 1958] [Sri M. C. Muthukumaraswamy]

மறந்துவிட்டார்கள் எதிர் கட்சிக்காரர்கள். அவர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்—அதாவது இந்த நக்கீரர் வம்சத்தைச் சேர்ந்தவர்கள்—குற்றம் சொல்ல வேண்டும் என்ற ஒரே பாதையில் போகிறார்களே தவிர வேறு கருத்தே கிடையாது. அவர்களுடைய நோக்கமெல்லாம் நாடு பிரிய வேண்டும். தமிழ் நாடு தனியாக இருக்கவேண்டும் என்பதே. இங்கு ஒன்று குறிப்பாகச் சொல்லுகிறேன். எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. சுமார் 10 வருஷ காலத்திற்கு மேல் தமிழ் நாட்டின் எல்லையை பற்றிய நிலைமை என்னவாக இருந்தது என்பதை அவர்கள் பின்பு கூறுவார்கள் என்று நம்புகிறேன். இங்கு வேங்கடம் முதல் குமரி வரை தமிழ்நாடு என்று சொன்னார்கள். அவர்கள் தங்கள் கூற்றுக்குப் பல ஆதாரங்களைக் காட்டினார்கள். தமிழ் நாடு என்பதற்கு மேற்கோள்கள் பல காவியங்களில் இருக்கிறதென்று எடுத்துச் சொன்னார்கள். இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே சொல்லி வந்த பகுதியிலிருந்து ஆந்திரம் பிரிந்தது. கேரளம் பிரிந்தது. இவர்கள் பேசிக்கொண்டிருந்ததை அந்த மக்களெல்லாம் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். இவர்கள் சொல்வது நியாயமாக இருந்திருந்தால் அவர்கள் பிரிந்திருக்க முடியுமா என்பதை நன்கு பரிசீலிக்கவேண்டுமென்று அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். பிரிய வேண்டும், பிரிய வேண்டுமென்றால், இப்போது இருப்பது என்ன ? அவர்கள் சொல்லும் விதமானது, 4-வது, 5-வது வகுப்பில் யானையைப் பற்றி ஒரு கதை உண்டு. ஒருவன் காலை தொட்டுப் பார்த்து விட்டு யானை தூண் மாதிரி இருக்கிறது என்று சொன்னானாம். குருடர்களில் ஒருவன் காதைப்பிடித்துப் பார்த்துவிட்டு யானை முறம்போல் இருக்கிறது என்று சொன்னானாம். இன்னொருவன் வாலைப் பிடித்து விட்டு யானை உலக்கை போல் இருக்கிறது என்று சொன்னானாம். ஒரு பெரியவர் நீங்கள் சொன்னது எல்லாம் ஒன்றாகச் சேர்ந்ததுதான் யானை என்று சொன்னாராம். அதைப்போல, மற்ற ராஜ்யங்கள் பிரிந்தும் கூட, மீதி உள்ளதை தமிழ் நாடு, திராவிட நாடு என்றால் என்ன ? இடையிலே ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். நாட்டை 11-50 a.m.
பிரித்துக்கொள்வது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. எத்தனை பேர்களை வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளுங்கள். இன்று இருப்பது தமிழ் நாடு தானே ? ஒரு சந்தர்ப்பத்திலே பெரியார் அவர்களை சிலர் ஒன்று கேட்டதாகவும் அவர் அதற்குப் பதில் சொல்லியதாகவும் அறிகிறேன். " ராமன் படத்தை உடைக்கிறீர்களே ? உங்கள் பெயர் ராமன் என்று வைக்கப்பட்டிருக்கிறதே ? அதை ஏன் ஒப்புக்கொள்ளுகிறீர்கள் ?" என்று கேட்ட நேரத்திலே, " என் பெயர் ராமனாய் இருந்தால் என்ன, கழுதையாய் இருந்தால் என்ன ? அதுபற்றி கவலை கிடையாது " என்று பதில் அளித்தார்களாம். சிலர் புரியாமல் கேட்கலாம். அதற்கு " நான் என்ன தமிழில் தானே பேசுகிறேன். தெலுங்கிலா பேசுகிறேன் " என்று பரிகாசமாக சொல்லுவது உண்டு. தமிழ் நாடு என்பது எது ! சரி போகட்டும் தமிழ் நாட்டையே பிரித்துக்கொள்ளுங்கள். தமிழ் நாடு உங்கள் கையில் வந்தபிறகு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் ? பெருங்குடி மக்களாகிய ஆதி திராவிட மக்களுக்கு நீங்கள் என்ன நியாயம் செய்யப் போகிறீர்கள் ? என்ன திட்டமிட்டிருக்கிறீர்கள் ? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ? " ஐந்தில் ஒரு பாகத்தினராக நாங்கள் இருக்கிறோம். தமிழ் நாடு பிரிக்கப்பட்ட பிறகு எங்களுக்கு ஏற்படும் நன்மையானது என்னவென்றால், எங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் ' ஆதி ' என்ற வார்த்தையை ' கட் ' பண்ணி எடுத்துவிடுகிறோம் " என்கிறார்கள். அதனால் உங்களுக்கு ஏற்படும் " சண்டாளன், நீசன்" என்ற கேவலமான பெயரை ஒழித்து விடலாம் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் நாங்கள் என்ன சொல்லுகிறோம் என்று கேட்டால்.................

Sri A. GOVINDASAMY : கனம் அங்கத்தினர் அவர்கள் சபைத் தலைவரை நோக்கிப் பேசுகிறார்களா, அல்லது திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களை நோக்கிப் பேசுகிறார்களா என்ற ஒரு பிரச்னையை கிளப்ப விரும்புகிறேன்.

Mr. SPEAKER : அங்கத்தினர்கள் சபாநாயகரை நோக்கித்தான் பேசவேண்டும்.

[11th February 1958

* SRI M. C. MUTHUKUMARASWAMY : "ஆதியில் பிறந்த குடி மக்கள் தான் இந்த நாட்டுச் சொந்தக்காரர்கள். நாங்கள் தான் உரிமை உள்ளவர்கள். வேண்டுமானால் நீங்கள் தான் உங்களை ஆதி திராவிடர்கள் என்று மாற்றிக் கொண்டு எங்களோடு மெஜாரிடியாக வந்து சேருங்கள்" என்று நாங்கள் சொன்னால், முடியாது என்று சொல்லுகிறார்கள். "ஆதி" என்ற வார்த்தை கேவலமாக இருக்கிறதா? அல்லது பயமாக இருக்கிறதா? அப்படி "ஆதி" என்ற வார்த்தையை வெட்டி விட்டால் எங்கள் நிலைமை என்ன ஆகிறது? சீர்திருத்தம் வருகிறது, வருகிறது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் நினைக்கிறோம் "எங்கள் சமுதாயம் தேசம் பூராவும் பரவி இருக்கிறது. எனது சமுதாயத்தினருக்கு ஒரு விழிப்பு ஏற்படவேண்டும். அது எப்படியிருந்தாலும் எல்லோருக்கும் ஒரே முறையிலே ஏற்படவேண்டும். தீமை ஏற்பட்டாலும் அதுபற்றி கவலையில்லை". தமிழ் நாடு பிரிந்த பிறகு எங்களுக்கு நன்மை ஏற்படுகிறது என்று சொன்னால், அண்டையில் இருக்கிற ஆந்திர மாகாணத் தோழர்களைப்பற்றி நாங்கள் சிந்திக்காமல் இருக்க முடியாது. அதனால் தான் நாடு பிரிவினையானால் எங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சுகிறோம். நாடு பூராவும் பரவி இருக்கும் எங்கள் சமுதாயம் ஒன்று பட்டு இணைந்து வாழ வேண்டும் என்று கருதுகிறோம். ஆதலால் நாங்கள் பிரிந்து போகக்கூடாது, ஒன்றாக இருக்கவேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். இதை விட்டு விட்டு நாட்டை பிரிப்பது என்றால் அது என்ன நியாயம்? அதை ஒப்புக்கொள்வது என்றால் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதுமாத்திரமல்ல. கவர்னர் பெருமான் தனது உரையில் (அ) என்ற பிரிவில் 12-வது பாராவில் மதுவிலக்கை தீவிரமாக அமுல் நடத்துவதற்கு ஒரு திருத்த மசோதா கொண்டுவரப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார். மதுவிலக்கு சம்பந்தமாக இன்னும் பல சாதனைகளைச் செய்யமுடியும், செய்ய வேண்டும், செய்துகொண்டிருக்கிறோம், செய்துகொண்டுவருவோம் என்ற நம்பிக்கையை தெரிவித்து இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த நாட்டு ஆதி திராவிட மக்களுக்கு மது எந்த விதமான பாதகத்தை உண்டாக்கி வந்தது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். மது விலக்கு சட்டம் வந்தபிறகு அவர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது? "உங்களை சொர்க்கலோகத்திற்கு கொண்டு வைத்துவிடுவோம்" என்று சொல்கிறீர்களே? என்னுடைய அனுபவத்தின்மீது கேட்கிறேன். மது இருக்கிற காலத்தில் எங்களுடைய நிலைமை எப்படி இருந்தது. அது மாறி மதுவிலக்கு சட்டம் வந்தபிறகு இப்போது எப்படி இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எங்கள் சமுதாயம் அடித்தளத்தில் கிடக்கிறது. எங்கள் மீது உங்களுக்கு பற்றுதல் இருந்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? சர்க்கார் மதுவிலக்கு சட்டம் போன்ற சட்டங்கள் செய்திருக்கிறார்களே, அவைகளுக்கு பக்க பலமாக இருந்து, அந்த சட்டங்களை அமுலாக்குவதற்கு உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்கிறோம் என்று சவால் விட்டு விடுத்திருக்க வேண்டும். ஆனால் எந்தக் கூட்டத்திலாவது திராவிடப் பெருமகனார் "அரசாங்கம் இம் மாதிரி சட்டம் செய்திருக்கிறது. அதனால் பல நன்மைகள் இருக்கின்றன. 10 வருஷங்களுக்கு முன் நீங்கள் எப்படி இருந்தீர்கள், இப்பொழுது எப்படி இருக்கிறீர்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்று மதுவிலக்கு சட்டத்தைப் பற்றி பேசியிருக்கிறாரா? கிடையவே கிடையாது. அதை விடுத்து "இந்த மாகாணத்தில் இவ்வளவு குற்றங்கள் புரியப் பட்டிருக்கின்றன, இதை சர்க்கார் கவனிக்கவில்லை, அதை விட்டுவிட்டார்கள்" என்றெல்லாம் பேச்சுக்கள் நடக்கிறதே தவிர, இம்மாதிரி மக்களின் நலனை பாதுகாக்கும் விஷயங்களை பற்றி பேசியதே கிடையாது. வாஸ்தவத்திலே உங்களுக்கு எங்கள் பேரில் அனுதாபம் இருக்குமேயானால் "நாங்களும் உங்களோடு சேர்ந்து தோளோடு தோளாக நின்று ஒத்துழைக்கிறோம்" என்று சொல்லவேண்டும். அப்படிச் சொன்னால் உங்கள் கட்சி நல்ல கட்சி என்ற ஒரு நம்பிக்கை எங்களுக்கு ஏற்படும். ஆனால் நீங்கள் இம் மாதிரி நன்மை பயக்கும் காரியங்களைப் பற்றி பேசுவதே கிடையாது.

அடுத்தபடியாக, கோவில் நிர்வாகத்தைப் பற்றி சொல்லுகிறேன். திராவிடத் தோழர்கள் முன் கூட்டியே கோவிலில் இருப்பது கல், அதில்

11th February 1958] [Sri M. C. Muthukumaraswamy]

நம்பிக்கையே இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஏன் அப்படி சொல்லுகிறார்கள் என்று உள்ளபடியே எனக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. ராமாயணத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள், பாரதத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள். ராவணன் எப்படி சீதையை தூக்கிக்கொண்டு வந்தான் என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். அதையெல்லாம் தடுப்பதற்கு இல்லை. இன்றும் திருவாரூர் கோவிலில் வழக்கமாக யானை ஏறும் பெரும் பறையர் ஆதி திராவிடர் வெண்பட்டு உடுத்தி தேங்காய் உடைத்த பிறகு தான் தேர் கிளம்பும். இதற்கு ஆதாரம் இருக்கிறது இந்தக் கோவில் எங்களைச் சேர்ந்தது. அந்தக் கோவிலை எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அதற்காக நீங்கள் ஏன் ஒரு புரட்சி பண்ணக்கூடாது? இதேமாதிரி தஞ்சாவூர் கோவிலும் எங்களுக்குச் சொந்தமானது என்று செப்பு பட்டயம் சொல்லுகிறது. இவைகளெல்லாம் அறிந்துகொண்டுதான் இவர்கள் கோவில் சொத்தை அபகரித்துக்கொண்டு விட்டால் நம்முடைய நிலைமை என்ன ஆகும் என்று பயந்து, அங்கு கல் இருக்கிறது என்று முன் கூட்டியே சொல்லி ஏமாற்றிவிட்டார்கள். எங்களுக்குச் சொந்தமான கோவிலைக் கொடுக்கச் சொல்லி நீங்கள் ஏன் புரட்சி செய்யக்கூடாது? ஆனால் நீங்கள் அம்மாதிரி செய்யவேமாட்டீர்கள். அது நடக்கவே நடக்காது. நல்ல காரியங்களை என்ன முறையில் செய்யலாம் என்பதை விட்டுவிட்டு, நாடு பிரிய வேண்டும், தமிழ் நாடு என்று பெயரிடவேண்டுமென்றே சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம் இருக்கிறது?

கவர்னர் பெருமான் ஹரிஜனங்களைப்பற்றி தன் உரையில் குறிப்பிட வில்லை என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். சொல்லவில்லை தான். நான் என்ன நினைக்கிறேன் என்றால், நில சீர்த்திருத்தம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் 100-க்கு 95 பாகத்தினராக இருக்கும் ஆதிதிராவிட பெருமக்களும் விவசாயிகளும்தான். நில சீர்த்திருத்தம் ஏற்பட்டால் அவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பு கிடைக்கும் என்ற ஒரு கருத்தைக் கொண்டுதான் அவர் ஹரிஜனங்களைப்பற்றி தனியாக சொல்லாமல் விட்டுவிட்டார் என்று கருதுகிறேன்.

1952-ம் வருஷத்தில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. 1956-ம் வருஷத்தில் விவசாயிகளை பாதுகாப்பதற்காக ஒரு சட்டம் வந்தது. அவைகள் எந்த முறையில் அமுல் நடத்தப்படுகிறது, அவைகள் எவ்வளவு விவசாயிகளுக்கு பலன் அளித்திருக்கின்றன, அதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்பதை நன்றாக ஆராய்ந்து, அதன் பிறகு நில சீர்திருத்தம் கொண்டுவந்தால் அது நல்ல பலன் அளிக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1952-ம் வருஷத்தில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்ததும், தஞ்சையில் இருக்கும் அத்தனை பண்ணையாட்களும் நீக்கிவிட்டார்கள். வேண்டுமானால், சர்க்கார் இதுபற்றி புள்ளிவிவரம் எடுத்துப் பார்க்கட்டும். அதே மாதிரி நியாயவாரச் சட்டம் வந்தபிறகு எவ்வளவு விவசாயிகள் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள் என்பதற்கும் ஒரு புள்ளி விவரம் எடுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். இந்தப் புள்ளி விவரங்களை ஆராய்ந்து மிராசுதார்கள் விவசாயிகளை ஏமாற்றி மறைமுகமாக இந்த சட்டங்களை கவிழ்க்கச் செய்யும் முயற்சிக்கு ஒரு அணை கட்டிவிட்டால், நிச்சயம் இம்மாதிரி ஏமாற்றங்கள் ஏற்படாமல் தடுக்கப்படும் என்பதை இந்தச் சபையின் முன்னிலையில் சொல்லிக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு என்னுடைய வணக்கத்தைக் கூறி, என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI R. SUBRAMANIAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானார் நிகழ்த்திய பேருரையின் மீது கனம் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். கவர்னர் பெருமான் அவர்கள் தங்களுடைய உரையில் பல முக்கியமான விஷயங்களைப்பற்றி சொல்லி இருக்கிறார். அவற்றில் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பதும் ஒன்று. அதற்கு அடிப்படையாக முதன் முதலாக நாம் எடுத்துக்கொள்ளப்போகும் உச்ச வரம்பு என்னவென்றால் அதிகப் படியான நிலம் வாங்கக்கூடாது என்று நாம் ஒரு சட்டம் கொண்டு 12-00 noon.

[Sri R. Subramaniam] [11th February 1958

வரவேண்டும் என்று அதில் சொல்லி இருக்கிறார். நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக நாம் இதுவரையிலும் படிப்படியாக பல சட்டங்களைக் கொண்டு வந்து பாஸ் செய்து அமுல் நடத்திக்கொண்டு வருகிறோம். முதலாவதாக கொண்டு வந்தது விவசாய பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், வாரச் சட்டம், அதன் பிறகு இப்போது கொண்டுவரப்போகிற உச்ச வரம்புச் சட்டம். ஆனால் விவசாயச் சட்டத்திற்கும் மற்ற சட்டங்களுக்கும் ஒரு பெரிய வித்யாசம் மாறுதல் இருக்கிறது. மற்ற சட்டங்களை அமுல் நடத்தும் போது அந்தச் சட்டங்களில் விதிகளை மீறினால் அதற்கு அரசாங்கமே தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். ஆனால் இந்த விவசாயச் சட்டங்களை எடுத்துக்கொண்டால் அதில் உள்ள விதிகளை மீறினால் விவசாயிகளே அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவர்களே நடவடிக்கை எடுத்துக்கொண்டு ஜெயிக்க வேண்டியதாக இருக்கிறது. நாம் இரண்டு தரப்பிலுள்ளவர்களையும் பார்த்தால் ஒருவருக்கு பணம் இருக்கிறது. அவர் பணக்காரராக இருக்கிறார். இன்னொரு தரப்பைப் பார்த்தால் அவர் ஏழையாக இருக்கிறார். ஏழையாக இருக்கக் கூடியவர் பணக்காரரை எதிர்த்து ஜெயிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார். அதனால் ஏழையாக இருக்கக்கூடியவர் தன்னுடைய விவகாரத்தை எடுத்து அமுலாக்க முடியவில்லை. அதனால் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் ஏழை விவசாயிகள் பணக்கார மிராசு தார்களை எதிர்த்து போராட முடியாமல் தங்களுடைய நிலங்களை விட்டு விடவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஏற்கனவே பயிர் செய்து கொண்டு வந்த நிலத்தையும் விட்டு விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் முன்பிருந்தவர்களில் தற்போது 100 க்கு 25 பேர் பண்ணையாட்களாக இருக்கிறார்கள். விவசாயிகளில் 50 சதவிகிதத்தினர் நிலத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களால் பணக்கார மிராசுதார்களை எதிர்த்து போராட முடியாமல் தங்களிடத்திலுள்ள நிலங்களை விட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். ஆனால் மிராசுதார்கள் தங்களிடத்தில் பணம் இருப்பதால் அவர்கள் ஹைக்கோர்ட் வரையில் போய் தங்களுடைய விவகாரத்தை ஜெயித்துக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆனால் ஏழை விவசாயிகளால் அப்படிப் போய் தங்களுடைய விவகாரத்தை ஜெயித்துக் கொள்ள முடிவதில்லை. அதனால் தங்களிடத்திலுள்ள நிலங்களை விட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். குடியானவர்களுக்கு போதுமான பண வசதி இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு என்று ஏற்படுத்திய சட்டத்தின் பலனை அனுபவிக்க முடியாமல் போய் விடுகிறது. நாம் சட்டங்களை பாஸ் செய்து விட்டால் மட்டும் போதாது. அது எந்த வகையில் அமுல் நடத்தப்படுகிறது, எந்த விதத்தில் அதனால் விவசாய மக்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டங்கள் எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்பதைப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அபிப்பிராயம் கொடுக்கிறார்கள். நேற்று முன் தினத்தில்கூட ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் இந்த சட்டங்கள் எல்லாம் நல்ல முறையில்தான் அமுல் நடத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார். குத்தகைச் சீட்டுக்கள் மூன்று எழுதப்பட்டு ஒன்று மிராசுதாரிடத்தும் மற்றொன்று விவசாயிகள் இடத்தும் மற்றொன்று சர்க்காருக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது என்று சொன்னார். ஆனால் கிராமப் பகுதிகளில் போய் பார்த்தால் அவைகள் எந்த அளவில் பயன் அளித்து வருகின்றன என்பது நன்றாகத் தெரியவரும். அதனால் கனம் மந்திரி அவர்கள் சொன்னதற்கும் அங்கு நடைபெறுவதற்கு சம்பந்தம் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சட்டங்கள் வந்த பிறகு எவ்வளவோ குடியானவர் வர்கள் நிலங்களை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் நல்ல முறையில் வேலை செய்யவில்லை. ஆகவே நாம் இயற்றும் சட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் அமுலுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய முதலாவது கோரிக்கை.

அடுத்தபடியாக நிலச் சீர்திருத்தத்திற்கு கடைசி கட்டமாக இப்பொழுது உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்பது ஒன்று. அப்படி உச்ச வரம்பு கட்ட

11th February 1958] [Sri R. Subramaniam]

வேண்டும் என்று நாம் சொல்வதற்கு முன்னதாக அதற்கு இப்பொழுதே நாம் அதிகப்படியான நிலம் வாங்கக்கூடாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று கவர்னர் அவர்களுடைய பேருரையில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் இது அவசியம்தானா என்பதைப் பார்க்க வேண்டும். ஏற்கனவே நாம் நிலச்சீர்திருத்தம் கொண்டு வரப் போகிறோம் என்பதைத் தெரிந்துகொண்டு பெரிய பெரிய மிராசுதார்கள் தங்களுடைய நிலங்களை விற்க ஆரம்பித்து விட்டார்கள். அப்படி விற்றுக் கொண்டு வருகிற சமயத்தில் வாங்கக் கூடாது என்று சொல்வது சரியா? இப்பொழுதுள்ள நிலங்களை விற்றுக்கொண்டு வரும்போது அதை வாங்கக் கூடாது என்று ஒரு சட்டம் பாஸ் செய்ய வேண்டியது அவசியமா? என்பதை நன்றாக யோசித்துச் செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்ளு கிறேன். நிலச்சீர்திருத்தம் வரப்போகிறது என்று ஏற்கெனவே பெரிய மிராசுதார்கள் தங்களுடைய நிலங்களையெல்லாம் விற்று வருவதோடு நகரங்களில் மனைக்கட்டுகளை வாங்கிக்கொண்டு வீடுகளைக் கட்டிக்கொண்டு சம்பாதித்து வருகிறார்கள். அப்படி வீடுகள் கட்ட முடியாத இடங்களில் தொழில்துறையில் தங்களுடைய பணத்தைப் போடுகிறார்கள். தொழில் வருவாயில் உச்ச வரம்பு கட்டாமல் இருப்பதை பயன் படுத்திக்கொண்டு அவர்கள் அப்படி தங்களுடைய நிலம் விற்ற பணத்தை பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே ஏற்கெனவே நாம் இயற்றும் சட்டங்களை மீறுவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வரும்போது இன்னும் இப்படி வாங்குவதில் உச்சவரம்பு கட்டுவது என்று வந்தால் அதையும் மீறுவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முற் படுவார்கள். அந்தச் சட்டமும் பிரயோசனப்படாத வகையில் வேலை செய்வார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே சட்டம் இயற்ற வேண்டுமானால் அது பயன் அளிக்கக் கூடிய வகையில் இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொன்றையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மிராசுதாரர்க ளுடைய மனதில் மற்றொரு குறை இருந்து வருகிறது. நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுகிறார்கள் என்றும் தொழில் அதிபர்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாயில் உச்ச வரம்பு கட்ட சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்ற ஒரு அதிருப்தி அவர்களிடம் இருந்து வருகிறது. அதுவேதான் இதுவரையிலும் விவசாயச் சட்டங்கள் கொண்டு வந்தும் அது நல்ல முறையில் பயன்படாமல் இருப்பதற்குக் காரணம். ஆகவே கூடுமானவரையிலும் தொழில் வகையிலும் எந்த எந்த வகையில் உச்ச வரம்பு கட்டவேண்டும் என்று அதைச் செய்தால்தான் ஓரளவு இம்மாதிரியான சட்டம் கொண்டு வந்தால் அது பயனளிக்கும். இல்லாவிட்டால் நாம் கொண்டு வரும் சட்டங்களை எல்லாம் முறியடிக்க மிராசுதார்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முற்படுவார்கள். அதற்கு வேண்டிய முயற்சிகளை யும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆகவே நிலம் வாங்குவதில் உச்ச வரம்பு கட்டுவது என்றால் சாதா ரணமாக மாகாணத்திலுள்ள நிலங்களின் தரத்தை நாம் முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அதி லும் ஒரு பிர்க்காவை எடுத்துக்கொண்டால் ஒரு மூலையிலுள்ள நிலத் திற்கும் மற்றொரு மூலையிலுள்ள நிலத்திற்கும் வித்தியாசம் இருக்கும். ஆகவே நில வரம்பு கட்டும்போது அந்த அந்த நிலங்களின் தரத்தை கண்டு அதற்குத் தக்கபடி வரம்பு கட்டவேண்டும். அதற்கு ஒரு கமிட் டியை அமைத்து அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு அதன்படி நிலத்தின் தரத்தைக் கண்டுபிடித்து வரம்பு கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது யோசித்து முடிவு செய்யவேண்டிய விஷயம். சாதாரணமாக ஒரு இடத்தில் பத்து ஏக்கர் என்று வரம்பு கட்டினால் அதன் வருவாய் ஒரு விதமாகவும் ஐம்பது ஏக்கர் என்று வரம்பு கட்டினால் அங்குள்ள வருவாய் ஒருவிதமாகவும் இருக்கும். ஆகவே அதை பரிசீலனை செய்துதான் வரம்பு கட்டவேண் டும். ஐம்பது ஏக்கர் நிலம் வரம்பு கட்டக்கூடிய இடத்தில் வரக்கூடிய வருவாயைவிட பத்து ஏக்கர் வரம்பு கட்டுகிற இடத்தில் அதிகப்படியான வருவாய் வருவதற்கு வசதியுள்ள இடங்கள் தஞ்சை ஜில்லாவில் அதிக மாக இருக்கின்றன. ஆகவே அதை யோசித்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri R. Subramaniam] [11th February 1958

அடுத்தபடியாக உணவு பிரச்னை. இப்பொழுது நல்ல அறுவடையை எதிர்ப்பார்ப்பதால் விலைவாசி குறையும் என்று எதிர்ப்பார்க்கிறோம் என்று கவர்னர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் தஞ்சை ஜில்லாவை பொறுத்த வரையில் அங்கே சம்பா அறுவடை முடிந்துவிட்டது. சம்பா அறுவடையாகி அதிகப்படியான நெல் வரக்கூடிய காலத்தில் உள்ள விலை என்ன குருவை அறுவடையான காலத்தில் விலை என்ன இவைகளைக் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாக இருக்கிறது. குருவை அறுவடையான காலங்களில் விலையைப் பார்த்தால் ஒன்றரை மணங்கு கொண்ட மூட்டை ஒன்று பதினைந்து ரூபாய்க்கு விற்கப் பட்டிருக்கிறது. ஆனால் தற்போது அதிகமான நெல் வரக்கூடிய காலத்தில் மூட்டை ஒன்று ரூபாய் பதினேழு வரையில் இருக்கிறது. திருச்சி ஜில்லாவிற்குச் சென்றால் அங்கே மூட்டை ஒன்று பதினெட்டு அல்லது பத்தொன்பது ரூபாய் என்று விற்கப்படுகிறது. இன்னும் அதற்குப் பிறகு சேலத்திற்குச் சென்றால் இன்னும் அதிகப்படியான விலைக்கு விற்கப்படுகிறது. ஆகவே அதிகமாக தூரப் போகப் போக இன்னும் அதிகமாக விற்கப்படுகிறது. ஆகவே வியாபாரிகள் தஞ்சை ஜில்லாவிலிருந்து நெல்லை வாங்கிக்கொண்டு போய் மற்ற ஜில்லாக்களில் அதிகப்படியாக விற்க முற்படுவதால் தஞ்சையில் அதிகமாக விற்கப்படுகிறது. மற்ற ஜில்லாக்களில் அதிகமாக வாங்கிக்கொண்டு போகிறபடியால் இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் தஞ்சையிலேயே நெல் தட்டு ஏற்படும். அரிசித் தட்டும் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால், முதன் முதலாக இந்த நியாய விலைக் கடைகளை தஞ்சாவூர் ஜில்லாவில் திறக்கவேண்டும். ஏதோ தஞ்சை ஜில்லாவில் நெல் அதிகமாக உற்பத்தியாகிக்கொண்டிருக்கும்போது, ஏன் அங்கே அதிக நியாய விலைக் கடைகள் திறக்க வற்புறுத்தவேண்டும் என்று எண்ணாமல், தஞ்சாவூர் ஜில்லாவிலும் நியாய விலைக் கடைகளை இந்தச் சர்க்கார் அதிகமாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

12-10 p.m. அடுத்தபடியாக, மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை. மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு நம்முடைய அதிகாரிகள் எவ்வளவோ பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதில் ஏதாவது ஒரு கேஸைப் போடும்போது போலீஸ்காரர்களும் மற்றவர்களும் எவ்வளவோ நேரத்தைச் செலவிடுகிறார்கள். மணிக்கணக்காக அவர்கள் டயரி எழுதவேண்டியிருக்கிறது. இம்மாதிரியான கஷ்டங்களெல்லாம் எடுத்துக்கொண்டு அவர்கள் யாராவது சில நபரைப் பிடித்து அவர்கள் மீது கேஸ் போட்டால், அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனை 5 அல்லது 10 ரூபாய் அபராதத் தொகை என்று இருப்பதால், மறுபடியும் மறுபடியும் அவர்கள் குற்றம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். எனவே, இம்மாதிரி குற்றங்களுக்கு ஜெயில் தண்டனை என்று இருந்தால்தான் ஓரளவு அவர்கள் மேலும் குற்றம் செய்யாமல் இருப்பார்களே தவிர, ஏதோ அபராதம் விதித்துவிட்டால் போதாது. அபராதம் விதித்தால், அதை அவர்கள் கிடைக்கக்கூடிய பணத்திலிருந்து வெகு எளிதாகக் கட்டிவிட்டுத் தப்பித்து விடுகிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சி அதை விற்பனை செய்வது மூலமாகக் கிடைக்கும் அதிகமான பணத்திலிருந்து பத்து, இருபத்தைந்து என்று ரூபாயை அபராதமாகக் கட்டிவிடுவதனால் அவர்களுக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை. எனவே, கள், சாராயம் குடிப்பவர்கள் ஒரு தடவைக்கு மேல் அல்லது இரண்டு தடவைக்கு மேல் குடித்தால், அவர்களுக்கு ஜெயில் என்றும், அந்தப் பொருளை விற்பவர்களுக்கு முதல் தடவையே ஜெயில் என்றும் ஏதாவது தண்டனை கொடுக்கக்கூடிய விதி இருந்தால் தான் குற்றம் செய்பவர்கள் பயப்படுவார்களே தவிர, வேறு எதற்கும் அஞ்சமாட்டார்கள். இதைப்பற்றி ஜில்லா மதுவிலக்குக் கமிட்டிகளெல்லாம் ஆங்காங்கே பரிசீலனை செய்து சிபார்சுகளை அனுப்பியிருக்கின்றன. அதைப் பார்த்து ஆவன செய்யவேண்டும்.

மதுவிலக்குச் சட்டத்தின்படி சாதாரணமாக ஹெட் கான்ஸ்டபிள் ஒரு வீட்டுக்குச் சென்று, அங்கே மது இருந்தாலும், அதைப் பிடிக்க அதிகாரம் இல்லை. இம்மாதிரி கள்ளச் சாராயம் சாதாரணமாக வீட்டிலே காய்ச்சுவது இல்லை. தஞ்சாவூர் போன்ற இடங்களில் படுகைகளில் ஆயிரக்கணக்கான இடங்களில் அங்கே போய் இருந்து காய்ச்சுகிறார்கள்.

11th February 1958] [Sri R. Subramaniam]

கையும் களவுமாக இருந்து பிடித்தால்தான் குற்றம். கொஞ்ச தூரத்தில் நின்றாலும்கூட குற்றம் ஆகாது, இப்போதுள்ள சட்டப்படி. ஆகையால், இதையும் ஓரளவுக்குக் குறைத்து, ஒருவன் குற்றவாளி என்று தெரிந்தால், பக்கத்தில் ஒரு பர்லாங்கு, அரை பர்லாங்கு தூரத்தில் இதற்கான காரணத்திற்காக நின்றுகொண்டு இருந்தாலும்கூட வெளியாகக்கூடிய தன்மை ஏற்படவேண்டும். இல்லையென்றால் நாம் என்னதான் செய்தாலுங்கூட மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெறாது என்று மிகத் தாழ்மையுடன் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்து மத அற நிலையப் பாதுகாப்புச் சட்டம். இதிலும் திருத்தங்கள் செய்யப்போவதாகச் சொன்னார்கள். ஹிந்து மதக் கோயில்களில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு எவ்விதமான பலனும் இப்பொழுது இல்லாமலிருக்கிறது. சாதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள் எக்ஸிக்யூடிவ் ஆபீசர் ஒருவர் எத்தனையோ வருஷங்கள் ஸர்விஸ் போட்டிருக்கலாம். ஆனால், சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் அவர்களுக்குக் கிடையாது. இந்தப் பலன் அவர்களுக்கு கிடையாது. கிராக்கிப் படியோ அல்லது பென்ஷனோ, அல்லது என்.ஜி.ஓ.-க்களுக்கு கிடைக்கும் மற்ற வசதிகளோ அவர்களுக்கு இல்லை. அவர்களைச் சர்க்கார் ஊழியராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களை ஏதோ புறம்பாகவே வைத்துக் கொண்டு சர்க்கார் ஊழியர்களுக்கு நாம் என்ன சௌகரியம் கொடுக்கிறோமோ அவைகளை அவர்களுக்கு இன்னும் செய்துகொடுக்காமல் இருக்கிறோம். ஆகவே, இனி கொண்டுவரப்போகும் சட்டத்தில் இதையும் சேர்த்து, அவர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்குள்ள எல்லாப் பலன்களும் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எல்லோரும் முதலில் பேசியதை நான் கடைசியில் பேச ஆசைப்படுகிறேன்.

DEPUTY SPEAKER : Hon. Member has got one minute more.

SRI R. SUBRAMANIAM : அதாவது மொழிப் பிரச்னை. ஹிந்தி மொழியைப்பற்றி பலர் பலவிதமாக கருத்துக்கள் தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆனால், ஹிந்தியை எதிர்ப்பவர்கள் எல்லோரும் ஓரளவுக்கு நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். சென்னை அரசாங்கத்தைவிட நாம் பலமாக எதிர்க்கிறோமா என்று. அப்படிப் பார்த்தால் சென்னை அரசாங்கம் கொடுத்துள்ள கருத்துக்கள்—ஹிந்தியை எதிர்ப்பது என்ற பிரச்னையை விட்டு விட்டு நம்முடைய தமிழை மற்ற எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லக்கூடிய ஒரு வசதியை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் மொழிக் கமிஷனிடத்தில் சொன்னபோது, தென் பிராந்திய மொழிகளில் ஒன்றை வட நாட்டில் உள்ளவர்கள் படிக்கவேண்டுமென்று அவர்கள் முதன் முதலாகக் கூறினார்கள். இதை வேறு யாரும் சொல்லவில்லை. ஆனால், மற்றவர்கள் எதிர்க்கும்போது, அவர்களுடைய நோக்கம் எல்லாம் திராவிடநாடு அடையவேண்டும். திராவிட நாட்டை அடைவதற்கு மொழிப் பிரச்னையை ஒரு பரிகாரமாக வைத்துக்கொள்ளவேண்டும். அவ்வளவுதான். இல்லையென்றால் அவர்கள் எவ்வப்போது தமக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அவ்வப்போதெல்லாம் திராவிட நாடு பிரிவினையைப்பற்றி ஏதாவது ஜனங்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தவேண்டும், அரசாங்கத்தின் பேரில் அதிருப்தி ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் மிகவும் அதிகப்படுத்தி காட்டி வருகிறார்கள்.

(Mr. Speaker in Chair.)

சிலர் சொன்னார்கள், "நாங்கள் என்ன குற்றம் செய்தோம் என்று. மாலையில் கூட்டம் நடப்பதாக இருந்தது. மூன்று மணிக்கே 'அரெஸ்ட்' செய்துவிட்டார்கள்" என்று. ஏன் காலையில் அரஸ்ட் செய்யவில்லை ? என்று கேட்கிறார்கள். இந்தியன் பினல் கோட் தெரிந்தவர்களுக்குத் தெரியும். அதன்படி, ஏதாவது குற்றம் செய்யவேண்டும், அல்லது குற்றம் செய்ய முயற்சிக்கவேண்டும். அந்தச் சமயத்தில்தான் குற்றமாகுமே தவிர, இவர்கள் ஏதோ நாங்கள் வீட்டில் இருக்கும்போதே ஏன் எங்களைப் பிடிக்கவில்லை, அதை ஏன் செய்யவில்லை என்று கேட்டால், அப்பொழுது குற்றம் ஆகாது. தான் செய்தது குற்றம் என்று அவர்கள்

[Sri R. Subramaniam] [11th February 1958

உணரவேண்டும். அதற்காகத்தான் அரசாங்கம் அவ்வாறு அவர்களைக் கைது செய்ததே தவிர, வேண்டுமென்றே அவர்களுடைய இயக்கத்தை நசுக்கவேண்டும் என்ற காரணத்திற்காகக் கைது செய்யவில்லை. அவர்கள் நடந்துகொண்ட விதத்தைப்பற்றி அங்கத்தினர்கள் எல்லோரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். மிக வருந்தத் தக்க செய்கையாகும் அது. அவர்கள் தமிழ்ப் பண்பைக் காட்டவேண்டிய இடத்தில், தமிழர்கள் விருந்தினரை உபசரிக்கும் முறை என்ன என்பதை மறந்துவிட்டுச் செய்திருக்கிறார்கள். தமிழ்ப் பண்பைப்பற்றி பேசக்கூடிய அவர்கள், அன்று அந்த பண்பைக் காட்டவேண்டிய நேரத்தில், அதை அவர்கள் மறந்து செய்திருக்கிறார்கள் என்று தான் நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* DR. SRIMATHI SATHIAVANIMUTHU : மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று கவர்னர் பெருமானின் உரையை குறித்து அவரவர் கருத்தைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த உரையைப் பாராட்டி எதிர்க் கட்சியைச் சார்ந்த எங்களைப் போன்றவர்கள் அதிலே சில குறைபாடுகளைக் கண்டு அவைகளை எடுத்து இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

சற்று முன்னால் அங்கே, ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசிய போது, கவர்னர் தாம் யார் என்பதையும், எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதையும் அவரது உரையில் குறிப்பிட்டிருக்கிறார் என்றும் அவரைப் பாராட்டிப் பேசினார். நானும் அதேபோல மேன்மை தங்கிய கவர்னர் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். காரணம் —கவர்னர் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர் என்ற முறையில் அவரது வாசகம் நமக்குத் தெளிவாகக்காட்டுகிறது. அதனைப் புரியாத முறையிலேதான் உறுப்பினர் அவர்கள் பேசியிருப்பதாக நான் காண்கிறேன்.

குறிப்பாக, கவர்னரது பேருரையில், தலைமை இடத்திற்கு மிகத் தொலைவில் இருப்பதாலும், பிற்பட்ட பொருளாதார நிலையினால் ஏற்படும் பல சிக்கல்களை அம் மாநிலத்தின் முதல் அமைச்சர் என்ற முறையில்தான் அடிக்கடி தலைமைப்பீடத்தை எதிர்நோக்க வேண்டி இருந்தது என்றும் கவர்னர் அவர்கள் திட்டவட்டமாக உண்மையை ஒத்துக் கொண்டிருக்கிறார். தலைமைப் பீடமாகிய டில்லியிலிருந்து தமது மாநிலமான அஸ்ஸாம் வெகு தூரத்தில் இருந்த காரணத்தாலும், அந்த மாநிலம் பொருளாதாரத்துறையில் மிகவும் பிற்போக்காய் இருந்த காரணத்தாலும், அவர் பல சிக்கல்களுக்கு
12-20 p.m. ஆளானார் என்றும், அந்த சிக்கல்களை எதிர்நோக்கித் தீர்க்க வேண்டி இருந்தது என்றும் ஒத்துக்கொண்டிருப்பதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அவரது உரையை புரிந்துகொள்ளாமல் சுட்டிப் பேசுகின்ற உறுப்பினர்கள், தமிழ் ஆட்சி மொழியாக வந்து விட்டதைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொள்கிற ஒருவர் கூறிய கூற்று உண்மைக்குப் புறம்பானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டார்கள். தாம் அஸ்ஸாம் இராஜ்ஜியத்தின் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் சென்னையைப் போன்றே அஸ்ஸாம் இந்திய அரசாங்கத்தின் தலைநகரத்திற்கு வெகு தொலைவில் இருந்த காரணத்தினால் பல சிக்கல்கள் உண்டாயிற்று என்றும் அவற்றைத் தாம் அடிக்கடி எதிர்நோக்க வேண்டியதாக இருந்தது என்கிற உண்மையையும் கவர்னர் பெருமான் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குக் கீழே இருக்கிற உண்மையையும் பாருங்கள்.

DR. SRIMATHI SATHIVANIMUTHU : கவர்னர் உண்மையை ஒத்துக்கொண்டுவிட்ட பிறகு ஒரு உண்மை நன்றாகத் தெரிகிறது. அஸ்ஸாமைப் போல நமது நாடும் இந்திய அரசாங்கத்தின் தலைமைப் பீடத்திலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால் இங்கும் பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும் என்பதை அவரே ஒத்துக்கொண்டிருப்பதால் அவரைப் பாராட்டுகி

11th February 1958] [Dr. Srimathi Sathiavanimuthu]

அவர்கள் ஒத்துக்கொண்டதுபோலவே நமது அமைச்சர்களும் ஒத்துக் கொண்டிருப்பார்களேயானால் நான் இவர்களைப் பாராட்டமுடியும். ஒரு கால் இவர்கள் டெல்லியின் ஏஜெண்டுகளாக இருக்கிற காரணத்தினால் உண்மையை மூடி மறைத்துக் திறம்பட நடிக்கிறார்களோ என்று சந்தேகப்படுகிறேன். உண்மையை உள்ளபடியே ஒத்துக் கொள்கிற கவர்னர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார். அவருக்கு நல்ல முறையில் நாம் இங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்த வேண்டும். அதைவிட்டு தேசீய ஒற்றுமை உணர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்க யாரோ முயல்வது போல எடுத்துப்பேசுவது தவறான செயலாகும். ஒற்றுமை உணர்வு நமக்கு இல்லைபோலும், ஒற்றுமை இல்லையாயின் தாழ்வுதான் என்பதாகவும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாரதி பாடல்களை எடுத்துச் சொல்கிறார்கள். அதே பாரதியார் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுதென் காதினிலே" என்பதாக தமிழ்நாடு பற்றி சொன்னதை ஏனோ மறைத்துவிடுகிறார்கள். தேவையானபோது தேவையான அடிகளை பாரதியாரில் இருந்து எடுத்துக் கொள்வதும், தங்களுக்கு தேவையற்றபோது பாரதியை நீக்குவதாக அவர்கள் செயல் தோன்றுகிறது. ஆட்சியில் நெருக்கடி ஏற்படுவதை மத்திய சர்க்கார் புறக்கணிப்பதும், மாநிலங்களைப் புறக்கணிப்பதும் நாளுக்குநாள் அதிகமாகிறது. ஆனாலும் அத்தனையையும் நாம் ஏற்றுக்கொண்டு ஒற்றுமையாகத்தான் இருக்கவேண்டுமென்ற தன்மையுடன் அஸ்ஸாம் முதல் அமைச்சராக இருந்தவர் இன்றைக்கு நமது கவர்னராக வந்திருக்கிறார். அதனால் இங்கும் டெல்லி அரசாங்கத்தினிடத்தில் அதிருப்தியும், தனியாக தமிழகம் வாழவேண்டுமென்ற உணர்ச்சியும் நம்மிடத்தில் வளர்ந்து வருவதைக் கண்டு நமக்கு அவர் ஒற்றுமை உபதேசம் புரியலாம். அவர் மீது குறைகூறுவதற்கில்லை. டெல்லியிலிருந்து அஸ்ஸாம் வெகுதூரத்தில் இருக்கிறது என்ற ஒரு காரணத்தினால் அஸ்ஸாம் பகுதியில் பிரிவினை மனப்பான்மை வளர்ந்துவிட்டது என்று தெரிகிறது. மற்றபடி டெல்லியில் இருப்பாருக்கும், அஸ்ஸாமில் இருப்பாருக்கும், மொழியிலோ பண்பாட்டிலோ வேற்றுமை இல்லை. ஆனால் சென்னை டெல்லியிலிருந்து வெகுதூரத்தில் இருக்கிறது என்பது மட்டுமல்ல. மொழி, கலாசாரம், பண்பாடு ஆகிய எல்லாவற்றிலிருந்தும் இது வடநாட்டாரைவிட்டு வேறுபட்டிருக்கிறது. ஆகவே ஒற்றுமையைப் பற்றிமட்டும் பேசிக்கொண்டே போகலாமே தவிர என்றைக்கும் ஒற்றுமை ஏற்பட முடியாது என்பதை நாங்கள் திடமாக நம்புகிறோம். அஸ்ஸாம் நாட்டினருக்கும், டெல்லி வட்டாரத்தாருக்கும் இருக்கிற வேற்றுமை ஆங்கிலேயருக்கும் அமெரிக்கருக்கும் இருக்கிற வேற்றுமைப் போலாகும். ஆனால் நமக்கும் வடநாட்டாருக்கும் இருக்கிற வேற்றுமை அமெரிக்காவில் அமெரிக்கருக்கும், நீக்ரோக்களுக்கும் இடையே இருப்பதுபோலத்தான் இருக்கிறது. இந்தப் பெரும் வேற்றுமையில் ஒற்றுமை என்றைக்குமே ஏற்படாது.

தேசீய உணர்வு, தேசீய ஒற்றுமை என்று சொல்லும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான் இதற்கு ஊறு செய்து வருகிறார்கள். மக்களிடத்தில் தேசீய ஒற்றுமையைக் குலைப்பதற்குத் தவறான வகையில் பிரசாரம் செய்து வருகிறார்கள். பொதுவாக இந்த மாநில மக்களுக்கு அந்த எண்ணம் இல்லை என்பதாக விவாதத்தைத் துவக்கி வைத்த மதிப்புக்குறிய காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். நான் அவர்களுக்குத் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

தேசீய ஐக்கியத்தை உடைத்துக் கொண்டு தமிழகம் தனித்து இயங்க வேண்டும் என்கிற உணர்வு மக்களுக்கு இல்லை, எங்களைப்போன்ற ஒரு சிலர் மக்களைத் தவறான வழியில் இழுத்துக்கொண்டு போகிறார்கள் என்ற எண்ணம் இருக்குமானால் கடந்த நிகழ்ச்சியைத் திருப்பிப் பார்க்கவேண்டும்.

ஜனவரி மாதம் 3–ந்தேதி சென்னைக் கடற்கரையில் நடைபெற இருந்த கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேச இருந்தார்கள். பேச உரிமை அவருக்கு மறுக்கப்பட்டது. அதன்பின் நடந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து 4–தேதி, 5–ந்தேதி, 6–ந்தேதி அன்று நடந்தவைகள் நமக்குத் தெரியும். மதிப்புக் குறிய நேரு அவர்கள் 6–ந்தேதி சென்னை வருகிறார்கள் என்று தெரிந்து அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தீர்மானித்துவிட்டார்களே, அதை எப்படியாவது திரை மூடி வைக்க வேண்டுமென்று நினைத்து, கழகத் தோழர்கள் அத்தனை பேரையும் சர்க்கார் சிறையில் அடைத்துவிட்டார்கள். ஆனாலும் லட்சோபலட்சம் மக்களுடைய

[Dr. Srimathi Sathiavanimuthu] [11th February 1958

ஒத்துழைப்பும் உணர்ச்சியும் பொங்கி எழுந்த காரணத்தில் அன்றைக்கு பலயிடங்களிலும் நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள் இது எழுந்து வரும் தமிழகத்தின் தேசீய உணர்வு அல்லவா? ஆனாலும் சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு மக்களிடத்தில் செல்வாக்கு கிடையாது என்பதாக. இது உண்மை நிலைமையைப் புரிந்து கொள்ளாத தவறு, அல்லது புரிந்துகொண்டு மறைக்கப் பார்க்கும் செயல் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. "நாங்கள் இந்தக் காரியத்தைத் திட்டமிட்டுச் செய்திருந்தால் நேரு அவர்கள் டெல்லிக்குப் போயிருக்க முடியாது". என்று இந்தப் பக்கத்திலிருந்து தோழர் எம். பி. சாரதி பேசிய போது ஏதோ கொலைகாரன் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் போது கொலையுண்டவன் தரப்பில் வாதாடும் வக்கீல்கள் உண்மை வரும்போது அவன் அதை ஒப்புக்கொள்வதைப் போல அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் ஆனந்தப்பட்டுக் கொண்டதைப் பார்த்தேன். உண்மையிலேயே நேருஜி அவர்கள் டெல்லிக்குத் திரும்பிப் போகக் கூடாது என்கிற எண்ணம் எங்களுக்குக் கிடையாது. நேரு அவர்கள் உயிரோடு திரும்பிப் போகவேண்டும். இந்தப் பக்கமே வராமல் அவரும் போய்விடவேண்டும், டெல்லி சர்க்காரும் அதன் ஆதிக்கமும் இங்கிருந்து போய்விடவேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. தேசீய உணர்வு எங்களுக்கு இல்லை என்பதாக நினைப்பது தப்பு. தேசீய உணர்வுமீது நம்பிக்கை இருப்பதுபோலப் பேசிக்கொள்ளும் ஆட்சியாளருக்கு அந்த நினைப்பு இருந்தால் எப்படி நடந்து கொண்டிருக்கவேண்டும்? கடற்கரையில் 3-ந்தேதி அண்ணா அவர்கள் பேசவிருந்ததை அனுமதித்திருக்கவேண்டும். காரணம் அவர் அன்றையதினம் எதைப் பற்றி பேசவிருந்தார்? நேரு அவர்கள் வரும்போது சட்டத்தை மீறாதவகையில், அமைதிக்குப் பங்கம் உண்டாகாத வகையில் எந்த வகையில் கழகத் தோழர்கள் கருப்புக்கொடியைக் காட்டவேண்டும் என்பதை வலியுறுத்தவே பேச இருந்தார். அவரைப் பேசவிடாமல் தடுத்து சிறையிட்டதன் காரணமாகவும், ஒரு பாவமும் அறியாத மக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்ததின் காரணமாகவும் நடைபெற்ற எல்லா அசம்பாவிதமான காரியங்களுக்கும் பொறுப்பாளி இந்தச் சர்க்கார் தான். நேரு அவர்கள் பெரியாரைப் பற்றி என்ன பேசினார்கள் என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. காரணம் பெரியார் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிவிடலாம். இந்த மன்றத்தில் காண்கிறோம் உலகப் பிதா என்று உங்களாலேயே போற்றப்படுகிற, எங்களால் பாராட்டப்படுகிற காந்தியாரின் திருவுருவப்படத்தோடு அவருக்கு நேருக்கு நேராக அதே மரியாதையுடன் இந்த மன்றத்தில் ராஜாஜி அவர்கள் படத்தை வைத்துக்கொண்டு நாம் இன்றைக்குச் செயல்படுகிறோம். ஒப்பற்ற தலைவர், உயர்வான தலைவர் என்று உங்களால் பாராட்டப்படுகிற ராஜாஜியை பற்றி நேருஜி அவர்கள் என்ன கூறினார்கள். வக்கிரபுத்திக்காரர், கிழவர், முட்டாள் என்று பல வகையில் பேசியிருக்கிறார். எங்களுக்கு என்று தனியாகச் செய்தி வருகிறதா? இல்லையே. உங்கள் பத்திரிக்கையில் வருகிற அந்தச் செய்தியைத் தானே நாங்களும் வாங்கிப் படித்து வருகிறோம். நேருஜி அவர்கள் உங்களால் போற்றப்படுகிற தலைவர் ஒருவரைப் பற்றி அவ்வளவு அவதூறாகத் தூற்றியிருக்கும் போது உங்களுக்கு அவமானமாக இல்லையா? காங்கிரசுக்கு ராஜாஜி அவர்கள் எவ்வளவு உழைத்திருக்கிறார் என்று நமக்குத் தெரியாதா? உங்களைவிடப் பண்மடங்கு அவர் காங்கிரஸ் ஸ்தாபனத்தை வளர்ப்பதற்கு உழைத்திருக்கிறார். அவரைப் பற்றி ஒருவர் அவதூறாகப் பேசுவது என்றால் அதை அவமானமாக இவர்கள் கருதவில்லையா? இவர்கள் நினைக்கவில்லை என்றாலும் தமிழகத் தலைவர்கள் வடநாட்டார் ஒருவரினால் பலவகையில் அவமானமாகப் பேசப்பட்டு வருகிறார்கள் என்பதைக் கண்டிப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் சட்டபூர்வமாகக் கருப்புக் கொடியைக் காட்டுவதற்கு தீர்மானித்திருந்தது. அந்த வகையில் அமைதியான முறையில் கொடியைக் காட்டவேண்டும் என்பதை விளக்குவதற்காக 3-ந்தேதி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவரைப்போல பேசுகின்ற போலீஸ் அமைச்சர் அவர்களும் சரி, மற்றவர்களும் சரி என்ன செய்திருக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகக்கூட்டத்தை 3-ந்தேதி நடைபெற அனுமதித்து மறுநாளே 4-ந்தேதி கடற்கரையில் இவர்கள் ஒரு பெரிய கூட்டத்தை கூட்டி "அண்ணா அவர்கள் கருப்புக்கொடி காட்டவேண்டும் என்பதாகச் சொல்கிறார். அவர் பேச்சைக் கேட்க வேண்டாம். நம்முடைய மதிப்பிற்குரிய நேருவுக்கு யாரும் கருப்புக்கொடி காட்ட கூடாது" என்று சொல்லி

ஏன் உங்களுக்கு நேருவிடத்தில் இருக்கும் பக்தியின் காரணமாக மக்களிடத்திலும் நேருவிடத்தில் பக்தி உண்டாகும்படியாகச் செய்து, தேசிய ஒற்றுமை தேசிய உணர்வு என்கிற அடிப்படையைச் சொல்லி கருப்புக் கொடியைக் காட்டாமல் இருக்கும்படியாகச் செய்திருக்கக்கூடாது? அப்படிச் செய்திருந்தால் அது ஜனநாயகமாகும்.

அதுகூடச்செய்யவில்லை. நேரு சென்னைக்கு வருகிறார். சென்னையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கருப்புக் கொடியைக் காட்டினாலும் காட்டிவிடுவார்கள் என்று கைதி செய்யட்டும். எதற்காக மாநிலம் பூராவும் இருக்கிற தோழர்களை எல்லாம் கைதி செய்யவேண்டும்? அங்கங்கே தமிழகம் பூராவும் இருக்கிற தோழர்களுக்கு பேசுவதற்குரிய உரிமையை ஏன் மறுக்க வேண்டும்? இவ்வளவுக்கும் காரணம் என்ன? தெரிந்தோ, தெரியாமலோ எத்தனைதான் ஆட்சியாளர் திரைபோட்டு மூடினாலும் எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுடைய உள்ளத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் கோரிக்கைகள், செயல்கள் முதலியவற்றின் உண்மை உணர்ச்சி உண்டாகிவிட்டது. எனவே அதை ஒடுக்குவதற்கு எந்தவகையிலாவது முயற்சி செய்யவேண்டும் என்கிற எண்ணத்தோடு தான் கழகத் தோழர்களை எல்லாம் கைது செய்து, பாமர மக்களை தடியினாலும், துப்பாக்கியினாலும் தாக்கிக் கொடுமை படுத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அன்றையதினம் நாலாயிரத்து, எழுநூறு பேர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. 6–ந்தேதி இரவு நேரு அவர்கள் சென்னை வந்து சென்றுவிட்ட பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற இடங்களில் எல்லாம் —குறிப்பாக காக்ஸ் சேரி, கரீம் மொய்தீன் தெரு, வரதராஜபுரம் முதலிய இடங்களில் உள்ள வீடுகளில் எல்லாம் நுழைந்து தாய்மார்களையும், குழந்தைகளையும், வயதானவர்களையும் அக்கிரமமான முறையில் தாக்கித் துன்புறுத்தியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி மதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் கூறவில்லையே என்று பச்சாதாபப்படுவதா? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தச் சர்க்கார் இப்படிப் பல கொடுமைகளைச் செய்திருக்கிறார்களே என்று கொதிப்பதா ?

12-30 p.n.

அன்றையதினம் வீட்டிலே இருக்கக்கூடிய தாய்மார்களையும் குழந்தைகளையும் பெரியோர்களையும் தடிக்கொண்டு தாக்கி இருக்கிறார்கள். ஒரு தாயாரை முதுகில் அடித்திருக்கிறார்கள். சதை பிய்த்துக் கொண்டு ரத்தம் கொட்டி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் இதுபோல பல ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு தாய்க்கு கை போய்விட்டது. ஒருவருக்கு கால் போய்விட்டது என்று அவர்களே போலீஸில்கூட சொல்லியிருக்கிறார்கள். அடிக்கும் போதுகூட போலீஸ்காரர்கள் " நீங்கள் அந்த திராவிட முன்னேற்றக் கழக அன்பழகனுக்கு வோட்டு போட்டீர்கள் அல்லவா, தொலையுங்கள் " என்று சொல்லிக்கொண்டே அடித்திருக்கிறார்கள். இவ்வளவு கொடுமைகளையும் செய்துவிட்டு இந்த சர்க்கார் இதைப்பற்றி ஏதாவது வாய் திறக்கிறதா என்று பார்த்தால், இதைப்பற்றி யாரும் ஒன்றும் சொல்லுவது கிடையாது. தமிழ் நாட்டு மக்களை தாக்குவதற்கு ஆந்திரா போலீஸார் அல்லது மலையாள போலீஸாரை ஏவிவிட்டு தாக்கியிருக்கிறார்கள். அந்த போலீஸார் அடிக்கும் போது அவர்கள் கூறிய வார்த்தைகளை ஒரு ஆளும் கட்சித் தோழர் சொல்ல நாம் கேட்டோம். இந்த ஆளும் கட்சியினருக்கு தேசீய உணர்வு அதிகமாக இருந்தால் தமிழ் நாட்டிலே நடைபெறும் ஒரு நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு அளிக்க தமிழ்நாட்டு போலீஸாரை ஏன் உபயோகிக்கவில்லை? அவ்வாறு செய்ய இந்த அரசாங்கத்திற்கு ஏன் நம்பிக்கை இல்லை. அதனால்தானே தமிழ்நாட்டு போலீஸாரைக் கொண்டு தாக்கவில்லை. தமிழ் நாட்டு போலீஸார் உதாசீனம் செய்வார்கள் சொன்னதை எங்கே செய்யாமல் இருந்துவிடுகிறார்களோ என்ற சந்தேக எண்ணத்தின் காரணமாகத்தான் ஆந்திர போலீசார்களையும், மலையாள போலீசார்களையும் தமிழ் நாட்டு மக்கள் மீது ஏவி விட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த அளவிற்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கும். திராவிட முன்னேற்றக் கழகத்திடம் நாட்டு மக்களுக்கு பற்று பாசம் எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. இதை அமைச்சர் அவர்களும் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் வேறு விதமாக பேசுகிறார்கள். அவர்கள் அப்படி பேசித்தானே ஆக வேண்டும், அவர்கள் பதவியில் இருப்பதன் காரணமாக.

திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த நாங்கள் கவர்னர் உரையின் மீது பேசும்போது நாட்டிலே இவ்வளவு பயங்கரமான கோரத் தாண்டவம் ஆடி இருந்தும்கூட பொதுமக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருந்தும்கூட அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது சமாதானம் கூறியிருக்கிறார்களா என்றால், இதுவரையில் அதற்கு ஒன்றும் கூறாமல், அதற்கு மாறாக மக்களது மனதை வேறு வழியில் திருப்பப் பார்க்கிறார்கள். அப்படி வேறு வழியில் திருப்புவதன் மூல மாக அண்ணா அவர்கள் இந்தியை தேசிய மொழியாக ஏற்றுக் கொண் டார்கள் என்று தவறான கருத்தை மக்களிடையே பரப்புகிறார்கள். ஆனால் அண்ணா அவர்கள் இந்தியை என்றைக்காவது ஒப்புக் கொண்டிருக்கி றார்களா? இல்லை. அப்படி இருக்கும்போது தவறான முறையிலே பொதுமக்களிடையே அமைச்சர்கள் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பின்னர் விளக்கம் தருவார்கள் என்று நம்புகிறேன். அறையில் நடந்தது அம்பலத்திற்கு வரும் காலமும் நேர மும் நிச்சயமாக வந்துதானே ஆகவேண்டும். இதைப் பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. உதாரணமாக நேரு வந்திருந்த போது திராவிட முன்னேற்ற கழகத்தினர் காலித்தனமாக நடந்து கொண் டார்கள் என்ற தவறான எண்ணத்தை மக்களிடம் புகுத்தியிருக்கிறார் கள். ஆனால் ஆட்சியாளர் வேண்டுமானால் அந்த காலத்தில் தாங்கள் புரிந்த செயல்களை சற்று நினைவு படுத்தி பார்க்கட்டும். "40 ஆண்டு கால மாக நாங்கள் செய்து காட்டியதைத் தானே நீங்கள் செய்கிறீர்கள்" என்று நமது முதல் அமைச்சர்கூட சுட்டிக் காட்டியிருக்கிறார். நீங்கள் உள்ள படியே செய்திருக்கிறீர்கள். அது உங்களுக்குத் தெரியாதது அல்ல. ஆனால் எங்களுக்கு இந்த பலாத்காரச் செயலிலே நம்பிக்கை இல்லை. தந்திக் கம்பியை அறுத்து, தபால் ஆபீசைக் கொளுத்தி, திராவகத்தை அதிகாரி கள் மீது ஊற்றி சுதந்திரம் பெற்றீர்களே, அவ்வாறு செய்ய நாங்கள் விரும்ப வில்லை. திராவிட முன்னேற்ற கழகத்தினர் அமைதியான முறை யிலே ஜனநாயக முறையிலே சுதந்திரம் அடைய எங்கள் கடமையைச் செய்கிறோம். இதை மக்கள் மன்றத்திலே மறக்கவோ மறைக்கவோ முடியாது.

கவர்னர் உரையில் சீர்திருத்த திருமணத்தைப் பற்றி குறிப்பிடாதது குறித்து வருந்துகிறேன். மேலும் ஆதி திராவிட மக்களை, அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தினராக இல்லாதிருந்தவர்களையும்கூட போலீசார் அடித்திருக்கிறார்கள். அதற்கு அமைச்சரின் விளக்கம் தேவை என்று கூறிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* **SRIMATHI KOLANDAI AMMAL:** கனம் சட்ட மன்ற தலைவர் அவர்களே, கவர்னர் பேருரையை ஆதரித்து பல அன் பர்கள் உள்ளத்திலே தோன்றிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த சமயத்தில் நானும் அவர்கள் கூறிய கருத்துக்களை பின் பற்றி ஒரு சில கருத்துக்களை இந்த இடத்திலே கூற விரும்புகிறேன். அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து நமது சென்னை மாகாணத்திற்கு கவர் னராக வந்திருக்கிற பெரியார் அவர்கள் ஏதோ டெல்லி பீடத்திலே வீற் றிருக்கும் ஏகாதிபத்தியத்திற்கு தன்னுடைய நாட்டின் முதன் அமைச்ச ராக இருந்த நேரத்திலே அடிவருடினார் என்றும் அது போலவே சென்னை மாகாணமும் டெல்லிக்கு வெகு தூரத்தில் இருப்பதால் இங்கும் பல குறைபாடுகள் இருக்கும் என்று அவரே ஒத்துக்கொண்டு அதை களை வதாக அவர் கூறியிருப்பதை பாராட்டுகிறேன் என்று எதிர்கட்சியிலுள்ள அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இந்த இடத்திலே அவர் களின் உரையிலிருந்து முழுதும் கவனிப்போமேயானால் நாம் அவசியம் தேசிய ஒற்றுமை உணர்வை பேணி வளர்த்து, கவர்னராக இருந்தாலும் சரி, அமைச்சராக இருந்தாலும் சரி, அங்கத்தினராக இருந்தாலும் சரி கடைப்பிடிக்க வேண்டியது ஒரே ஒரு பிடிதான் என்று அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த முறையிலேதான் நாம் பாரத நாட்டில் பிரஜைகள் என்ற முறையில் நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு மொழி, பல்வேறு பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் பல்வேறு நாகரீகத்தின் அடிப்படையிலே வாழும்படியான மக்கள் அதி லும் சிறப்பாக தமிழ் பண்பாட்டிலே ஊறி பரிணமிக்கும்படியான மக்கள்,

11th February 1958] [Srimathi Kolandai Ammal]

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று போற்றக்கூடிய மக்கள், ஊரெல்லாம் அட்ட சோறு என்றெல்லாம் சொல்லி பெருமைப் படக்கூடிய மக்கள் உதவாத பிரச்னைகளில் ஈடுபட்டு தங்களுடைய காலத்தை வீணுக்குகிறர்களே என்று வருத்தப்படுகிறேமே தவிர வேறு ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் மிகக் குறைவு. கவர்னர் பேருரையில் விவசாய பெருமக்களுக்காக இந்நில வரம்பு சட்டத்தை செய்ய ஒரு மசோதா கொண்டு வரப்போவதாக உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய கருத்துக்கு அதிலும் சிறப்பாக என்னுடைய தொகுதியிலே காணப்பட்டிருக்கிற குறைகளையெல்லாம் உள்ளத்திலே இறுத்தி ஒருசில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது அதிக நிலம் படைத்தவர்கள் மேலும் அதிகமான நிலம் வாங்குவதை அரசாங்கம் தடுத்து விடுவதில் ஒரு நன்மையும் பயக்காது என்று நான் கருதுகிறேன். ஒரு குடும்பத்திலே தந்தைக்கு இருக்கும் மக்களுக்கு ஆணுக இருந்தாலும் பெண்ணுக இருந்தாலும் மக்கள் என்ற முறையிலே பாகுபாடு இருக்கக்கூடாது. இப்பொழுது இருக்கும் நிலையில் ஒரு குடும்பத்தில் தகப்பனர் தன்னுடைய பெண்ணின் மீது சொத்தை எழுதி வைத்தால்தான் அந்த பெண்ணுக்கு அந்த சொத்து உரிமையாகிறது. மேலும் இந்த நாட்டிலே பெண்களின் விகிதாசாரம் அதிகமாக இருப்பதனுலும், ஆணும் பெண்ணும் சமம் என்ற முறையிலே பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்கப்படுமானுல், நிலவுடமைப் பங்கீடும் ஒன்றிரண்டு தலைமுறையிலே தன்னுலேயே சரியாகி விடும்.

அடுத்தப்படியாக தொழில் செய்யும்படியான பெண்களுக்கு மருத்துவ வசதியும் மற்ற வசதியும் செய்து கொடுப்பதற்கு சட்டம் நிறைவேற்றப் பட வேண்டுமென்று இந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறுர்கள். ஆனுல் நம்முடைய ராஜ்யத்தில் அதிலும் குறிப்பாக கோயம்பத்தூர் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய பெண்களுக்கு அதாவது ஒன்றிரண்டு வருஷங்களிலே சில மாதங்களுக்கு மருத்துவ விடு முறை கொடுக்க வேண்டியிருப்பதால் பெண்களுக்கே வேலை கொடுப்பதில்லை என்று சில மில் சொந்தக்காரர்கள் முடிவு செய்திருக்கிறுர்கள். ஏனென்றுல் இவர்களுக்கு வேலையில்லாமல் இரண்டு மூன்று மாதங்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டி யிருக்கிறது. குறிப்பிட்ட சில மில்களிலே பெண்களுக்கு வேலை கொடுக்காமல் பெண்களை புறக்கணிக்கிறுர்கள். ஆகவே நான் பெண் என்ற முறையிலே கேட்டுக் கொள்ளுகிறேன் ஆண்கள் சம்பாதிக்கும் பணம் தங்கள் குடும்பத்திற்கு போதவில்லை யாதலால்—அதாவது தங்களுக்கு பிள்ளை குட்டிகள் அதிகமாக இருப்பதனுல்—பெண்களும் வேலை செய்து சம்பாதிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறுர்கள். இந்தமாதிரி நிலைமை யிருப்பதால் மில்களில் பெண்கள் ஒரு சதவிகிதமாவது அமர்த்தப் பட வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி வேலைக்கு அமர்த்தாத மில்காரர்களுக்கு லைசென்ஸ் அரசாங்கம் வழங்குவதில்லை என்ற சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொறுத்தவரையிலும், நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டும் சட்டம் இயற்ற விரும்பும் நாம் அவர்களுக்காக இன்னும் சில காரியங்களைச் செய்ய வேண்டும். பருத்தி பயிரிடும் ஒரு விவசாயி 280 ராத்தல் கொண்ட ஒரு பொதி பருத்தியை ஒரு மில்லில் கொண்டுபோய்க் கொடுத்தால் அந்த மில்க்காரர் அவருக்கு ரூ. 130 அல்லது ரூ. 150 தான் கொடுக்கிறுர். 280 ராத்தல் பருத்தியை வாங்கிக் கொண்ட மில் முதலாளி அந்த விவசாயிக்கு 25 ராத்தல் பருத்திக் கொட்டையை திருப்பிக்கொடுக்கிறுர். "உழவர் உலகத்திற்கு அச்சாணி" என்று போற்றுவோமேயானுல், "மில்லுக்கு அச்சாணி உழவர்" என்றும் போற்ற வேண்டும். காரணம், உழவர் பருத்தியை உற்பத்தி செய்து பஞ்சாலைக்குக் கொண்டுபோய்க்கொடுத்தால் தான் பஞ்சாலை நடக்கும் பஞ்சாலைக்காரர்கள் தாங்கள் வாங்கிய பருத்தியைப் பஞ்சாக விற்கும்போது பருத்தியை வாங்கிய விலையைப் போல் 4-5 மடங்கு விலைக்கு விற்கிறுர்கள். பருத்தி பயிரிடும் விவசாயி எந்தவிதமான லாபமும் அடைவதில்லை. ஆகவே மில்லில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு மில் முதலாளிகள் 12-40 p.m.

[Srimathi Kolandai Ammal] [11th February 1958

போனஸ் கொடுப்பதுபோல் பஞ்சாலை முதலாளிகள் பருத்தி கொடுக்கும் விவசாயிகளுக்கு போனஸ் கொடுக்க வேண்டும். இதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை நான் விவசாயிகள் சார்பில் வற்புறுத்துகிறேன்.

நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு வெங்காயம், மிளகாய் முதலிய பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. எந்தக் காலத்தில் எந்த எந்தப் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பது கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளுக்குத் தெரியாது. எந்தக் காலத்திலோ, ஒரு படி ஒரு அணு வீதம் மிளகாயை விவசாயிகள் விற்றுவிடுகிறார்கள். கடைகளிலுள்ள வியாபாரிகள் அதை அந்த விலைக்கு வாங்கி நான்கணு, ஆறணு லாபத்திற்கு விற்கிறார்கள். தாங்கள் உற்பத்திசெய்யும் பொருள் எந்தக் காலத்தில் ஏற்றுமதியாகின்றன என்பது விவசாயிகளுக்குத் தெரிந்தால் அவர்கள் அந்தக் காலத்தில் அதை விற்று லாபமடைவார்கள். ஆகவே எந்தக் காலங்களில் எந்தப் எந்தப்பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பதை தண்டோரா போடுவதன் மூலம் அவர்களுடைய பாஷையில் கிராமமக்களுக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கான பொறுப்பை கிராமத் தலையாரி, மணியக்காரர் முதலியவர்களிடம் ஒப்படைக்கலாம்.

அடுத்தபடியாக, மாடுகள் கால்நடைச் செல்வங்கள். மாடு கொடுக்கும் பாலை விவசாயிகள் விற்கிறார்கள். அவர்கள் 40 அவுன்ஸ் படியில் பால் விற்கிறார்கள். பால்காரர்கள் 30 அவுன்ஸ் பாலும் 8 அவுன்ஸ் தண்ணீரும் கலந்த 38 அவுன்ஸ் பாலைக் கொடுக்கிறார்கள். விவசாயி, வீட்டில் விருந்தாளி வந்திருக்கும் நேரத்தில் அவசரமாக அதை வாங்கி விடுகிறான். இந்த நிலைமை நீங்கவேண்டும்.

அடுத்தபடியாக பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாம் என்று இப்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவில் ஏராளமாகப் பருத்தி கொட்டை உற்பத்தியாகிறது. அந்த எண்ணெய் பல காரியங்களுக்கு உபயோகிக்கலாம். அந்த எண்ணெய் எடுக்கக்கூடிய சிறு தொழிற்சாலைகளை ஏராளமாகப் பருத்தி உற்பத்தியாகும் கோயம்புத்தூர் ஜில்லாவில் நிறுவவேண்டும். நிறுவ வேண்டிய 90 சிறு தொழிற்சாலைகளில் 52 சிறு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுவிட்டன என்று கவர்னர் அவர்கள் தமது உரையில் கூறியிருக்கிறார்கள். இந்த எண்ணெய் உற்பத்திசெய்யக்கூடிய சிறு தொழிற்சாலைகளை சீக்கிரம் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியான சூளூரில் ஆட்டு ரோமத்தைக் கொண்டு கம்பளம் நெய்யும் தொழிற்சாலையை மத்திய சர்க்காரின் செலவில் நிறுவுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக பல ஆண்டுகளுக்கு முன்பு தெரிய வந்தது. சென்னை அரசாங்கமும் உதவி செய்தால் பல்லடம் தாலூகாவிலுள்ள சூளூர் பிர்க்காவில் அந்தத் தொழிற்சாலையை நிறுவலாம். பல்லடம் தாலூகா பஞ்சப் பிரதேசம் என்று பெயர்பெற்றிருப்பதால் அங்கே இந்தத் தொழிற்சாலையை நிறுவி அங்குள்ள மக்களுக்கு பிழைப்பிற்கு வழி செய்யவேண்டும். அங்குள்ள விவசாயிகள் வெற்றிலைக் கொடிக்கால் பயிர்செய்பவர்கள். அங்கே வெற்றிலைக்கொடிக்கால்கள் நோய்வாய்ப்பட்டு அந்தப் பயிர்த்தொழில் க்ஷீணித்திருக்கிறது. அங்கே இந்தத் தொழிற்சாலையை நிறுவினால், அந்த விவசாயிகள் கம்பள நெசவுத் தொழிலில் ஈடுபடக்கூடும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பீடித் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட ஒரு மசோதா சபைக்கு வரப்போகிறது. அதற்கு நான் ஒரு திருத்தம் கொண்டுவர விரும்புகிறேன். நகரங்களிலுள்ள பீடித் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் எல்லாம் கிராமங்களிலுள்ள எல்லா பீடித் தொழிலாளர்களுக்கும்—கிராமங்களில் 10 பேர் இருந்தாலும் சரி—கொடுக்கவேண்டுமென்ற திருத்தத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு போதுமான அளவு எல்லாப் பாதுகாப்புகளையும் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

11th February 1958] [Srimathi Kolandai Ammal]

அடுத்தபடியாக, லேவாதேவிக்காரர்கள் சட்டம் வந்த பிறகு விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பது மிகக் கடினமாகிவிட்டது. ஸ்டேட் பாங்கில் 3½ அல்லது 4½ சதவிகித வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்ட போதிலும் விவ்சாயிகளுக்கு அங்கே கடன் கிடைப்பதில்லை. காரணம் விவசாயிகள் கடனை சீக்கிரம் திருப்பிக் கொடுக்க முடிவதில்லை. வியாபாரிகளுக்கு அங்கே கடன் கொடுக்கப்படுகிறது ; ஏனென்றால், வியாபாரிகளால் சீக்கிரம் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட முடிகிறது. ஆகவே, 12 சதவிகித வட்டிக்கு விவசாயிகள் தனிப்பட்டவர்களிடம் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்கள் கடன் வாங்குகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். இதற்காக, 2½ அல்லது 3½ அல்லது 4½ சதவிகித வட்டிக்கு விவசாயிகளுக்கு மட்டும் கடன் கொடுப்பதற்காக 4–5 கிராமங்களுக்கு ஒன்று வீதம் பெரிய பாங்குகளை அமைக்க வேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 1,000-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டக்கூடும் என்று கவர்னர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருப்பது பார்த்து சந்தோஷப் படுகிறேன். இது விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்தி விஷயத்தில் உறுதுணையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதே சமயத்தில் இப்போது எங்கள் பக்கத்தில் மின்சார வெட்டு வந்துவிட்டது. மின்சார வெட்டு குடிசைத் தொழிலையும் விவசாயத்தையும் பாதிக்கிறது. மின்சார வெட்டு விவசாயிகளை பாதிப்பதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. சபையின் சென்ற கூட்டத்தின் போதும் இதுபற்றிக் குறிப்பிட்டேன். நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை பம்புசெட்டுகள் இயக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. அந்த நேரத்தில் உயரமாக வளர்ந்தோங்கியிருக்கும் பயிர்களினூடே சென்று அவைகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாது. மாலை 6 மணிக்குப் பிறகு இந்தப் பயிர்கள் காற்றடித்து ஓய்ந்தவுடன் படுத்திருக்கும். ஆகவே மாலை 4 மணி முதல் 6 மணி வரை, காலை 4 மணியிலிருந்து 10 மணி வரை ஆகிய இரு நேரங்களிலும் கரண்ட் அனுமதிக்கவேண்டும் ; அந்த முறையில் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். பம்பு செட்டுகள் விஷயத்தில் விவசாயிகளிடம் அதிகப்படியாக டெபாசிட் வாங்கவேண்டுமென்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது. ஒரு சில குறிப்பிட்ட பணக்கார விவசாயிகளைத் தவிர மற்றெல்லா விவசாயிகளும் இதனால் மிகவும் அல்லலுறுகிறார்கள். தங்களுக்கு ஏற்கனவே இருக்கும் கடன் பாக்கிகளைத் தீர்க்கமுடியாமல் அவர்கள் கஷ்டப்படும்போது அவர்கள் அதிகப்படியாக இந்த டெபாசிட்டைக் கட்ட வேண்டுமென்று கூறுவது மிகவும் வருந்தத்தக்கது. நாம் இப்படிச் செய்வதனால், விவசாயிகளுக்கு உதவிசெய்வதற்கு பதிலாக உபத்திரவம் செய்தவர்கள் ஆகிறோம். விவசாயிகளுக்குள்ள இந்தப் பெரும் கஷ்டத்தை நீக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அத்துடன், கனம் கல்வி அமைச்சர் அவர்களிடம் நான் பல முறை சொல்லிவரும் விஷயத்தை இப்போதும் எனக்கே உரிய பாணியில் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். தமிழாசிரியர்கள் குறிப்பிட்ட ஒரு உயர்ந்த சம்பளம் வேண்டுமென்றோ, ஸீனியர் லெக்சராகவோ ப்ரொபஸராகவோ நியமிக்கப்பட வேண்டுமென்றோ கோரினால், அதற்கு தமிழ் எம்.ஏ. பட்டம் வாங்கியிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இதை அங்கீகரிக்கிறோம். இந்த விதியை நிர்ணயித்திருக்கும் அரசாங்கம், தமிழ் நம் ராஜ்யத்தின் ஆட்சிமொழியானதையொட்டி, பௌதீகம், சரித்திரம், கணிதம் முதலிய பாடங்களை போதிக்கும் ஆசிரியர்கள் 10-வது வகுப்பின் தரமுள்ள தமிழ் பரீட்சைத் தேற வேண்டுமென்று விதிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டவரையில் ஒன்று கூற விரும்புகிறேன். பல திட்டங்களை அரசாங்கத்தார் வகுத்திருக்கிறார்கள். அதற்காக அரசாங்கத்தாரை பாராட்டுவதோடு அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் எனக்கு ஒரு வருத்தமும் உண்டு. அதாவது, இத்தனை திட்டங்கள் இருந்தபோதிலும் அவைகளால் என் தொகுதிக்கு ஒரு நன்மையும் இல்லையே என்று வருத்தப்படுகிறேன். (சிரிப்பு.) இந்தத் திட்டங்களால் என்னுடைய தொகுதிக்கு நன்மை இல்லை

பரம்பிக்குளம் திட்டத்தில் வெற்றி கண்டு அதை நிறைவேற்றும்போது கண்டிப்பாக அந்தத் தண்ணீர் எங்கள் கிராம வழியாகவும், பல்லடம் தாலூகா வழியாகவும், சாமக்குளம் வழியாகவும் செல்லும்படி அதை நிறைவேற்றவேண்டும் ; அந்தத் தண்ணீர் இந்த இடங்களில் வராமல் வேறு வழியாகச் செல்லும்படி திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். பல ஆண்டுகளாக மேல் பவானித் திட்டத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். அது வராது என்று சொல்லப்பட்டு விட்டது. அதுவரும்வரையிலும் அந்தப் பகுதியிலுள்ள பழைய குளங்களைச் செப்பனிட்டு நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

(**Deputy Speaker in Chair.**)

கடைசியாக ஒரு விஷயத்தை மறுபடியும் கூற விரும்புகிறேன். தொழிற்சாலைகளில் பெண்களுக்கும் வேலை கிடைக்கும்படி செய்ய வேண்டும். அதற்கு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 1,000 ஆண்களுக்கு வேலை கொடுக்கும் தொழிற்சாலைகள் கண்டிப்பாக 200 பெண்களுக்காவது வேலை கொடுக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் தொழிற்சாலைக்கு லைஸென்ஸ் கிடையாது என்றும் நிர்ணயித்தால்தான் தொழிற்சாலை முதலாளிகள் பெண்களுக்கு வேலை கொடுப்பார்கள். இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களுக்கு போதுமான உதவிகளை அளிக்க வேண்டும். திருவாரூர் கோயில்கள் போன்ற அற நிலையங்களிலே முத்தமிழ் வளர்ந்ததாக சாஸனங்களும் செப்போடுகளும் சொல்கின்றன. ஆடித்திரு மண்டபத்தில் நாடகம், நாட்டியம், இசை ஆகிய மூன்று கலைகளும் வளர்ந்தோங்கின. இந்தக் கலைகளைக் கோவில் களில் வளர்ப்பதற்கு பெண்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கையை அறநிலையப் பாதுகாப்பு இலாகா அமைச்சர் எடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

12-50 p.m. **Sri A. VEDARATHNAM PILLAI** : கனம் துணைத் தலைவர் அவர்களே இருதினங்களாக இங்கு நம்முடைய ராஜ்ய பாலருடைய உரையைப்பற்றி சவிஸ்தாரமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. எந்த விஷயத்தைப் பற்றி அவர் தன்னுடைய உரையில் குறிப்பிட்டுள்ளாரோ அந்த விஷயங்களை எல்லாம் விட்டு விட்டு அவர் கூறாத விஷயத்தைப் பற்றித்தான் இங்கு அதிகமாக விவாதிக்கப்படுகிறது. அதிலும், கூறாத விஷயத்தைப்பற்றி, நடக்காத ஒன்றை நடந்தது என்று வைத்துக்கொண்டு அதன் பேரில் இவ்வளவு விவாதம் நடைபெறுகின்றது என்பதைத்தான் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கூறாத விஷயம் என்ன, நடக்காத விஷயம் என்ன என்றால், நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் இங்கு வருகிற காலையில் அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டவேண்டுமே என்பதற்காக கூட்டம் நடத்த நம்முடைய எதிர்க்கட்சிகள் விரும்பியதாகும். அதற்கு அரசாங்கம் தடை விதித்துவிட்டதாகக் கூறி அவர்கள் வேண்டுமானால் வேறு ஒரு கூட்டம் போட்டு அதை மறுத்திருக்கலாமே அல்லாமல் தங்களுக்கு கூட்டம் நடத்த உத்தரவு கொடுக்காமல் தடை செய்யப்பட்டது ஜனநாயகத்திற்கு விரோதம் என்று ஜனநாயகத்தின் பேரில் அது ஆட்சேபிக்கப்படுகிறது. உண்மை என்னவென்றால் அவர்கள் இந்தக் கூட்டம் போடப்போகிறார்கள், அவர்கள் அப்படி ஒரு கூட்டம் கூட்ட வேண்டுமென்று சொன்ன காரணத்திற்காக தடை விதிக்கப்படவில்லை என்ற விஷயத்தை நான் பலமாக வற்புறுத்தி அதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

Sri A. V. P. ASAITHAMBI : தடை விதிக்கப்பட்டது சட்ட விரோதமானதா இல்லையா என்ற பிரச்னை வழக்கில் இருப்பதால் அதைப் பற்றி குறிப்பிடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri A. VEDARATHNAM PILLAI : இங்கு பேசியவர்கள் எல்லோரும் அதைப்பற்றி பேசியிருக்கிற காரணத்தினால் அதற்கு பதில் கூறுவது தவறாகாது என்பதால் கூறுகிறேன். ஏற்கெனவே தடை உத்தரவு

11th February 1958] [Sri A. Vedarathnam Pillai]

அமுலில் இருக்கிறது. அவர்களுடைய அரசியல் தந்தை இந்த நகரிலே நடத்திய சில போராட்டங்கள் காரணமாக இங்கு அமைதிக் குறைவு ஏற்பட்டதால் அதைத் தடுப்பதற்கு ஒரு தடை உத்தரவு போட்டு அது அமலில் இருக்கிறபோது அதை மீறி கூட்டம் போடவேண்டுமென்று முயற்சித்த காரணத்திற்காக அதைத் தடுத்தார்களே தவிர கூட்டம் போடவேண்டு மென்று சொன்னதற்காக தடை உத்தரவை விதிக்கவில்லை என்று நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். நமது அருமை அண்ணா அவர்கள் முதன் மந்திரியாக இருந்து ஆசைத்தம்பி போலீஸ் மந்திரியாய் இருந்து அவர்கள் போட்ட தடை உத்தரவை யாராவது மீற முன் வந்தால் அவர்கள் இருவரும் கண்ணை மூடிக்கொண்டு சும்மா பார்த்துக்கொண்டிருப்பார்களா என்று கேட்கிறேன். ஒருக்காலும் அப்படி இருக்கமாட்டார்கள். நாங்கள் காட்டிய கருணைகூட அவர்கள் கிஞ்சித்தேனும் காட்ட மாட்டார்கள் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன். தடை உத்தரவை மீறுகிறேன் என்றால் அதை எந்த ஜனநாயக சர்க்காரும் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது, பார்த்துக்கொண்டும் இருக்கமாட்டார்கள். தடை உத்தரவு ஏற்கெனவே இருந்த காரணத்தினால்தான் அதை மீற முன் வந்தவர்களை கைது செய்து சிறையில் அடைத்தார்கள். அப்படியல்லாமல், ஏதோ புதிதாக கருப்புக் கொடி காட்டிவிடுவார்களே என்று யாரும் அஞ்சி விடவில்லை. ஜனநாயகத்தின் சிகரம் என்று சொல்வார்களே, அதை எட்டிப் பிடித்தது நமது தமிழ் நாடேயாகும். மத்திய அரசாங்கம் நியமித்த மொழி கமிஷன் எல்லா மாகாணங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள மொழி நிபுணர்களையும், கல்லூரித் தலைவர்களையும், இதரர்களையும் கலந்து ஆலோசித்தது. அப்படி அவர்கள் ஒவ்வொரு மாகாணமாக அரசியல் மொழிபற்றி விசாரணை செய்துகொண்டு சென்னைக்கு வந்தபோது இவர்கள் கோஷ்டியார் அவர்களுக்கு கருப்புக் கொடி பிடிக்கவேண்டு மென்று கேட்டார்கள், அரசாங்கத்தை நடத்தும் எந்த ஒரு சர்க்காராக இருந்தபோதிலும்கூட, அராங்கம் நியமித்த, அதுவும் தங்கள் கட்சியைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் நியமித்த ஒரு கமிஷனை, பல மாகாணங்களுக்கும் சென்று விட்டு நமது மாகாணத்திற்கு விருந்தினர்களாக வருகிற நிபுணர்களை அவமானப்படுத்த அனுமதி கொடுப்பார்கள் என்று யாரும் எதிர் பார்க்க முடியாது. ஆனால் நமது சென்னை அரசாங்கம், கருப்புக்கொடி பிடிப்பதற்காக அவர்களுக்கு அனுமதி கொடுத்தது. இந்த கோட்டை வாசலிலேயே கருப்புக் கொடி பிடிக்க அவர்களுக்கு அனுமதி கொடுத்ததை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஜனநாயகத்திற்கு ஒரு உச்ச எல்லை உண்டு என்று சொன்னால், அப்படி அனுமதி கொடுத்தது தான் அதன் சிகரமாகும். அப்படிப்பட்ட ஒரு அனுமதியை வேறு எந்த அரசாங்கத்தினிடமும் யாரும் எதிர்ப்பார்க்க முடியாது. தாங்கள் நியமித்த கமிஷனை எதிர்க்கட்சிக்காரர்கள் அவமானப்படுத்துவதற்கு அனுமதி கொடுப்பதை வேறு எங்கும் எதிர்ப்பார்க்கமுடியாது. அதே சமயத்தில் நேரு அவர்களுக்கு ஒரு சிலர், நூற்றுக்கணக்கானவர்கள் கருப்புக்கொடி பிடித்துவிடுவதால் பிரமாதமான சமாசாரம் ஒன்றும் நடந்துவிடப்போவதில்லை. கருப்புக் கொடி காண்பித்து விடுவார்களே என்று பயந்து தடை உத்தரவு போடவில்லை. முப்பத்தாறு கோடி மக்கள், "நேருஜி வாழ்க. நேருஜிக்கு ஜே" என்று கோஷம் இட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் அவருக்கு ஒரு நூற்றுக் கணக்கானவர் கருப்புக் கொடி காட்டி விடுவதால், அது சூரியனை குடையால் மறைத்து விடுவதுபோல் ஆகுமே தவிர அவருக்கு பிரமாதமான அவமானமோ அல்லது வேறு எதையும் இவர்களால் உண்டாக்கிவிட முடியாது. அதற்கு அஞ்சி இந்த அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி கொடுக்காமல் இருந்து விடவில்லை என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். தடை உத்தரவை மீறுவதை எந்த ஜனநாயக அரசாங்கமும் பார்த்துக்கொண்டிருக்காது என்ற விஷயத்தைத்தான் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மொழிப் பிரச்னைதானே இத்தனைக்கும் காரணமாக அமைந்தது. மொழிப் பிரச்னைப்பற்றி சர்வ கட்சிக் கூட்டம் நடந்தது. அது, இந்தக் கோட்டையில்தான் நடந்தது. அதற்கு நம்முடைய அறிஞர் அண்ணா அவர்களும் வந்திருந்தார்கள். இப்பொழுது எதிர்க்கட்சியிலே குறிப்பிட்டார்கள், ஒரு கேலிக்கூத்தான கூட்டம் அது என்று. அதற்கு காரணம் என்ன சொன்னார்கள் என்றால், அதில்

[Sri A. Vedarathnam Pillai] [11th February 1958

கட்சிப் பிரதிநிதி இல்லாத ஒருவர், அதாவது இந்த சட்டசபை பிரதிநிதியாக இல்லாத ஒருவர், அதாவது ராமமூர்த்தி அவர்கள் அக்கூட்டத்திற்கு வந்திருந்த காரணத்தினுல் அது கேலிக்கூத்தான ஒரு கூட்டம் என்று இங்கு வர்ணிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டது தவருக இருக்குமாளுல் அன்று அக்கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த அண்ணு அவர்கள் ஒரு வார்த்தை அந்த இடத்தில் கூறியிருப்பார்களேயாளுல் ராமமூர்த்தி அவர்கள் அன்று அந்தக் கூட்டத்தில் இடம் பெற்றிருக்க முடியாது கல்யாணசுந்தரம் அவர்கள் தனது உடல் நலக் குறைவு காரணமாக அதில் பங்கு எடுத்துக்கொள்ள இயலவில்லை. எனக்காக என் கருத்தைத் தெரிவிக்க, என் கட்சியின் கருத்தைத் தெரிவிக்க ராமமூர்த்தி அவர்களை அனுப்புகிறேன், நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அக்கூட்டத் தலைவருக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். அக்கடிதத்தை அக்கூட்டத் தலைவர் படித்துக் காட்டி உங்கள் எல்லோருக்கும் சம்மதம் இருந்தால் நான் அதை அங்கீகரிக்கிறேன் என்ருர். யாரும் எந்த விதத்தில் ஆட்சேபிக்காமல் ராமமூர்த்தியை பங்கு கொள்ள அனுமதித்து விட்டு பிறகு இப்போது அது ஒரு கேலிக்கூத்தான கூட்டம் என்று சொன்ஞல் அதில் என்ன அர்த்தம் இருக்கிறது. அன்றைக்கு அறிஞர் அண்ணு அவர்கள் ராமமூர்த்தி இங்கே இருப்பது கூடாது, மெம்
1-00 p.m.
பர் அல்லாத ஒருவரை அனுமதிக்க நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் ராமமூர்த்தியை அனுமதித்திருக்க மாட்டார்கள். அன்றைக்கு முழு மனதோடு அங்கீகாரம் செய்துவிட்டு இன்றைக்கு அது கேலிக்கூத்தானது என்று சொல்வது நியாயமல்ல முறையல்ல என்பதை அவர்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைய தினம் ஹிந்தி மொழியைப்பற்றி நான் முக்கியமாக பேசினேன். அறிஞர் அண்ணு அவர்கள் எனக்கு பதில் சொல்லும் முறையில் அந்த கூட்டத்தில் பல கருத்துக்களை சொன்ஞர்கள். தமிழ் நாட்டில் ஹைக்கோர்ட்டு வரையிலும் சகல விவகாரங்களும் தமிழில் நடக்கவேண்டும். சுப்ரீம் கோர்டு விவகாரங்கள் போன்றவைகளும் ஏனைய ராஜ்யங்களோடு நடத்தும் விவகாரங்களும் தேசிய மொழியாகிய ஹிந்தியில் நடைபெற வேண்டும், என்றும் ஹிந்தியில் போதிய அளவு திறமை பெறுகின்ற காலம் வரையிலும் ஆங்கிலத்தையும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அதோடு எப்படி பிராமணர் அல்லாதவர்களுடைய நன்மைக்கு அறிந்தோ அறியாமலோ தீமைசெய்கிருர்கள் என்று சொல்லப்பட்டது. அவை யெல்லாம் அவர்களது உள்ளத்தை தொட்டதோ தெரியவில்லை. அதற்கெல்லாம் பதில் சொல்லும் முறையில் பேசினுர்கள். பதில் சொல்லிவிட்டு அரசாங்கத்திற்கு சொன்னது மொழி விஷயத்தில் நாம் ஏகமனதாக ஒரு அபிப்பிராயத்தை மத்திய அரசாங்கத்திற்கு தெரிவிக்கவேண்டியிருப்பதால், எங்களுடைய கொள்கை தனி தமிழ்நாடு என்றிருந்தாலும் இந்த விஷயத்தில் உங்களோடு சேர்ந்து ஒரே மனதாக ரிப்போர்டை சமர்ப்பிப்பதற்கு ஒத்துக்கொள்கிறேன் என்று கூறிஞர்கள். இதை சொல்லுவதற்கு முன் அவரது கட்சியை கலந்து கொண்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. வெளியே வந்த பிறகு அந்த கட்சி இவருடைய முடிவை தள்ளி இருப்பதற்கு நியாயமில்லை. தலைவர் என்ற முறையில் அந்த கட்சி அவர் சொன்ன வார்த்தையை அங்கீகாரம் செய்து கொள்ள வேண்டியதுதான் முறை. நாம் அவர்களுக்கு யோசனை சொல்லவேண்டிய தேவை இல்லை. ஏதோ வெளியே வந்த பிறகு மறுத்துவிட்டார்கள். அது ஒருபுறமிருக்க ராஜாஜி அவர்களைப்பற்றி மொழி விஷயமாக இவர்கள் எடுத்துக்காட்டிஞர்கள். மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகிருர்கள். நேரு அவர்கள் ராஜாஜி அவர்களையும் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்களையும் தாக்கி பேசிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக கருப்புக்கொடி காட்டினேம் என்று சொல்லுவதை நினைக்கும்போது ஏதோ ஆடு நனைகிறது என்று ஒநோய் அழுததாக சொல்லுவார்களே அது போல்தான் இருக்கிறது. ராஜாஜி அவர்களையும் ஸீ. பி. அவர்களையும் தாக்கினதற்கு இவர்களுக்கு ஆத்திரம் வந்ததை பார்க்கிறபொழுது உண்மையிலேயே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இவர்கள் உச்சி குடுமி என்றும் அவுட்டுத்திரி என்றும் கொடுத்தகொடை எவ்வளவோ இருக்கின்றன.

SRI A. V. P. ASAITHAMBI : இருக்கலாம். ராஜாஜி அவர்களே முன்ஞல் ஹிந்தியை பாராட்டிஞர்கள். இன்று எதிர்கிருர்கள்.

11th February 1958]

Sri A. VEDARATHNAM PILLAI : இரண்டாம் தடவை நேரு அவர்கள் வந்தபோது இதை உணர்ந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். உணர்ந்துகொண்டு அவர்கள் ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார்கள் என்று சொன்னார்கள். அவர் சொல்லாமல் போகவில்லை. சொன்னதை நம் நண்பர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை அவ்வளவுதான். ஒரு மொழியில் பேசுவதை வேறு மொழியில் அதே உணர்ச்சியோடு அதே கருத்தோடு மொழி பெயர்ப்பது சாத்தியமல்ல என்று சொன்னார்கள், ராஜாஜி ஹாலில் தமிழ் வளர்ச்சி வெளியீட்டு விழாவில் பேசும்போது, "எல்டர் ஸ்டேட்ஸ்மென்" இவ்விதமெல்லாம் பேசுவது விந்தையாக இருக்கிறது என்று சொன்னார். அதை நம்முடைய தமிழ் பத்திரிகைகள் தமிழில் "கிழட்டு அரசியல் வாதிகள்" என்று மொழி பெயர்த்துச் தாங்க முடியாத ஆத்திரத்தை உண்டு பண்ணக்கூடிய விதத்தில் தூண்டி விட்டு விட்டார்கள். அதன்'பின் எவ்வளவோ சம்பவங்கள் நடந்துவிட்டது. அவையெல்லாம் நிகழ்ந்துபோன விஷயங்கள். மொழி விஷயத்தில் இவர்கள் என்ன சொல்லுகிறார்கள். ராஜாஜி அவர்களைப்பற்றி நன்றாக புரிந்திருந்தால் இவர்கள் அவர்களை மேற்கோளாக எடுத்துக்காட்ட முன் வந்திருக்க மாட்டார்கள். ராஜாஜிதான் முன்னமேயே அரசியல் நிர்ண சபையில் சட்டத்தையும் இயற்றி இருக்கிறார்கள். 1965-ம் ஆண்டில் தேசிய மொழியாக ஹிந்தி வரவேண்டும் என்று சொல்லிப்பட்டி ருக்கிறது. அதற்காக எந்த மாகாணமும் முயற்சி எடுத்துக்கொள்வதற்கு முன்பாகவே சென்னை மாகாணம் அந்த முயற்சியை எடுத்துக்கொண்டது. பள்ளி பிள்ளைகளுக்குப் புகுத்தினார்கள். அப்போது ஹிந்தி கட்டாய மொழி யாக இருக்கவேண்டுமென்று புகுத்தினார்கள். அப்போது கட்டாயம் என்றிருப் பதை பிரமாதமாக ஆட்சேபிக்கப்பட்டது. இனிமேலாவது அண்ணா அவர்கள் ராஜாஜி அவர்களை சந்திக்கும்பொழுது வேண்டுமானால் கேட்கட்டும், ஹிந்தி கட் டாயம் என்றிருப்பதில் ஆட்சேபனை உண்டா என்று கேட்கட்டும் என்று அண்ணா அவர்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன். அவ்விதம் கட்டாயம் என்று வருமானால் அதற்கு ராஜாஜி அவர்கள் நல்வரவு கூறுவார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அப்போது இந்த ஹிந்தி கட்டாயமாக்கப்பட்டிரு ந்தால் இதற்கு முன்னால் ஹிந்தி தேசீய மொழியாக ஏற்றுக்கொள்வதற்கு தகுதி வாய்ந்த மொழியாக ஆகியிருக்கும். இன்றைக்கு ஹிந்தி புரியாத மொழியாக இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கு தேசீய மொழியாக கொண்டு வருவதை ஆட்சேபிக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமல்ல. இத ற்கு ஆதரவாக ராஜாஜி அவர்களே கூறிய வார்த்தைகளை சொல்ல விரும்பு கிறேன். அதாவது 1990 வருஷத்தில் ஹிந்தி ஆட்சி மொழியாக வருவ தாக இருந்தாலும் கூட அதற்காக இன்றே வேண்டிய ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். அந்த ஏற்பாடுகள் செய்யாமல் அந்த மொழி ஆட்சிமொழி யாக வருவதற்கு வேண்டிய தகுதியைப் பற்றி பேசுவது சரியல்ல என்று அவர்கள் கூறியிருப்பதை பத்திரிகை வாயிலாக நீங்கள் அனைவரும் பார்த்தி ருப்பீர்கள். பெரும்பான்மையான மக்களுக்குத் தெரியாத ஒரு மொழியை தெரியாத நேரத்தில் கொண்டு வருவதைதான் ஆட்சேபிக்கிறார்களே தவிர ஹிந்தி மொழி ஒரு சமயத்திலும் வேண்டாம் என்று சொல்லவில்லை. இதையே இன்று அவர்கள் மேற்கோளாக எடுத்துக்காட்டி ராஜாஜி அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களிடம் பத்திரிகை மூலம் கூட கேட்காமல் அவர்கள் இருவரும் சேர்ந்து பேசியபோது நேருக்கு நேர் கேட்டார்கள். இந்த தனி ஆட்சி என்கிற பேச்சை விட்டுவிடுங்கள், அந்த பேச்சை எடுக்கவேண்டாம் என்று கேட்டார்கள். இன்றைக்கு முதிய அரசியல் வாதி என்றெல்லாம் சொல்லுகிற இவர்கள் ராஜாஜி அவர்களின் பேச்சை உதறி தள்ளுவது அவர் களது அரசியல் சம்பிரதாயத்திற்குத்தான் பயன்படுமே அல்லாமல் மக்களை மாற்றுவதற்கு பயன்படாது என்பதை சொல்ல விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : The hon Member's time is up.

Sri A. VEDARATHNAM PILLAI : திருச்சியில் நேரு அவர்கள் கூறி யதைப் பற்றி கோபமாகப் பேசினார்கள் என்று சொன்னார்கள். என்ன கோபமாகப் பேசினார்கள். இந்த எதிர் கட்சிகாரர்கள் எந்தக் கட்சியி லிருந்து வந்தவர்களோ அந்த ஜஸ்டிஸ் கட்சி இந்த ராஜ்யத்தை 19 வருட காலம் ஆட்சி செய்திருக்கிறது. அந்தக் காலத்தில் 1-'0 p.m.

[Sri A. Vedarathnam Pillai] [11th February 1958

அக்கிரகாரத்தில் ஹரிஜனங்கள் நுழைய முடியாது. கழுதை, பன்றி இவைகள் இறங்கக் கூடிய குளங்களில் இவர்கள் இறங்கினால் குற்றம். தண்ணீரைத் தொட்டால் குற்றம். கோவிலுக்குப் போனால் குற்றம். அதற்குச் சிறை தண்டனை. இப்படிப் 19 வருட காலம் ஆட்சியில் இருந்தபோது ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அன்றைக்கு முதன் முதலாக காங்கிரஸ் பதவியேற்ற 1937-ம் ஆண்டிலேயே சோஷல் டிஸெபிலிடீஸ் ஆக்ட் கொண்டு வந்து, இந்த மாதிரிப் பல திட்டங்களைக் கொண்டுவந்து இந்த ஜாதிகளை ஒழிப்பதற்காக ஆலயப் பிரவேச சட்டம் போன்றவைகளை நிறைவேற்றியிருக்கிறது. நமது அரசியல் சட்டத்தில் வகுப்பு அடிப்படையில் எந்த பேதமும் கிடையாது என்று கண்டிருக்கிறது. ஜாதி வித்தியாசத்தை ஒழிக்கவேண்டுமானால் நம் பெரியார் நாயக்கர் அவர்கள் நாளை மறுதினம் ஜாதி ஒழியவேண்டுமென்று விரும்பினால், பண்டித நேரு அவர்கள் இன்றே ஒழிய வேண்டுமென்று சொல்லுவார். இந்த ஜாதி ஒழிப்பிற்காக வேண்டிய சகல சட்டங்களையும் அரசாங்கம் செய்துவிட்டாகிவிட்டது. அனுஷ்டானத்திற்கு வருவது தான் பாக்கி. இந்த அரசியல் சட்டத்தை ஒருவர் கொளுத்த வேண்டுமென்று கூறினால் அவருக்கு இந்த நாட்டில் இடமில்லை. ஏனென்றால் ஜாதி வேண்டுமென்று சொல்லுகிற ஒரு கோஷ்டி ஆட்சிபீடத்தில் இருக்குமானால் அதை அரசியல் சட்டம் கூறுமானால், அதை எதிர்த்தால் அர்த்தம் உண்டு. அறவே ஜாதியை ஒழிக்கவேண்டும், அதுவும் ஆண், பெண் என்ற வித்தியாசம் கூட இருக்கக்கூடாது என்று சொல்லுகிற என்கிற ஆட்சிமுறையில் அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டுமென்று கூறினால் அவர்களுக்கு இந்த நாட்டில் இடமில்லைதான். அவர்கள் கூறியதன் உயர்ந்த கருத்தை அவர்களால் அர்த்தம் செய்துக்கொள்ள முடியவில்லை.

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தலரிது."

என்று சொன்ன மாதிரியாக அந்த மாதிரியான அடிப்படையில் எந்த விதமான ஜாதி வித்தியாசம் பாராட்டுவதையும், மதத்திற்குள் வித்தியாசம் பாராட்டுவதையும் கொண்டிராத அத்தகைய பெரியதொரு அரசியல் சட்டத்தை கொளுத்தவேண்டுமென்று சொன்ன காரணத்தினால், அப்படிப்பட்டவர்களுக்கு இந்த நாட்டில் இன்னொரு சட்டம், இதை விடச் சிறந்ததாக வரப் போவதில்லை. ஆதலால் இதை விடச் சிறந்ததாக உள்ள வேறு நாட்டுக்குப் போகவேண்டுமென்று சொன்னாரேயல்லாமல், ஜாதி வித்தியாசம் இருக்க வேண்டும், இதைத் தவிர்க்க எந்தக் காரியத்தையும் சாதிக்கக் கூடாது என்று சொல்லவில்லை. நிதர்சனமாக இந்த ஆட்சியில் மாறுதல்களைக் கண்ணாரக் கண்டுங்கூட இந்த மாதிரி பேச வேண்டுமா என்று அந்த உரையில் சுட்டிக் காட்டியிருக்கிறாரேயல்லாமல், ஜாதி வித்தியாசம் என்றும் நிலைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. இதை நன்கு உணர்ந்திருந்தால் சமீபத்தில் நடந்தது போன்ற இத்தனை பெரிய கிளர்ச்சிகள் நடந்திருக்க நியாயமில்லை, அவசியமும் இல்லை, என்று இங்கு குறிப்பிடவேண்டும்.

நான் சற்று முன்பு சொன்னபடி நம்முடைய அரசியல் சட்டம் ஜாதி, மதம் என்ற வித்தியாசங்களைக் கொண்டிராதது மட்டுமல்ல, ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசம்கூட இருக்கக் கூடாது என்று கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் ஜான்வி லட்சுமிபாய் சுவீகாரம் எடுத்துக் கொண்டபோது, அப்போது இருந்த வெள்ளைக்காரன் நம்முடைய மனு தர்ம சாஸ்திரத்தைக் காட்டி பெண்கள் சுவீகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லி அந்த சுவீகாரத்தை ரத்து பண்ணினான். ஆண்கள் சுவீகாரம் எடுத்துக் கொள்வது சரியானால், இந்த அடிப்படையில் பெண்கள் சுவீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வது சரியல்ல, பெண்கள் சுவீகாரம் எடுத்துக் கொள்ள அவர்களுக்கும் சகல உரிமையும் இருக்க வேண்டுமென்று அதற்குத் தக்கபடி சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இந்த ஜாதிகள் சங்க காலம் தொட்டு, சேர, சோழ, பாண்டியர் காலம் முதலாக இருந்து வருகிறது. இன்றைக்கு 6,000 ஆண்டுகளாக இருக்கும் இந்த ஜாதியை உடனே ஒழிக்க முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத் தான் போக்க முடியுமென்று கூறினால் அதை ஒரு அளவில் யாரும் மறுக்க முடியாது.

தலைவர் அவர்களே, இத்தகைய ஆட்சி முறை இருக்கும்போது, அதைப் பற்றிக் குறை கூறுவது என்று சொன்னால், அது பொறுத்தமல்ல, தர்ம மல்ல, நியாயமும் அல்ல என்ற விஷயத்தை நினைவூட்டி நேரம் ஆகிவிட்ட காரணத்தால், தலைவர் கொடுத்த நேரத்திற்குள் முடிக்கவேண்டுமென்ற காரணத்தால், கவர்னர் பெருமான் நிகழ்த்திய உரையை முழு மனதோடு ஆதரித்து என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI C. N. ANNADURAI : அரசியல் சட்டத்தைக் கொளுத்துகிற காரணத்தினாலே பெரியார் அவர்கள் இந்த நாட்டில் இருக்க இடமில்லை. அதனால் வெளி நாட்டுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கூறியதாக கனம் அங்கத்தினர் சொன்னார்கள். இங்கிருந்து வெளி நாட்டுக்கு போனால், வெளி நாட்டில் அனுமதிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த அபிப்பிராயம் உள்ளவர்களை எங்கும் வரவேற்கமாட்டார்கள். (சிரிப்பு.)

SRI C. N. ANNADURAI : அப்படியானால், இந்த நாட்டிலும் இடமில்லை, வேறு நாட்டிலும் அனுமதிக்கமாட்டார்கள் என்றால் அவர்களைக் கொன்று விடுவதாக உத்தேசமா என்று அறியவிரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளி நாட்டிற்கு அனுப்புவதாகச்சொல்லவில்லை. இங்கு இருப்பதற்கு உரியவர்களாகத் தோன்றவில்லை என்றுதான் சொல்லப்பட்டது. வெளி நாட்டிற்குப் போவதற்கு அவர்களே ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

SRI C. N. ANNADURAI : நான் சொன்னதை நாகரீகமான முறையில் சொன்னதாக வேண்டுமானால் ஆகுமே தவிர, என் கேள்வி அப்படியே தான் இருக்கிறது.

SRI T. THIRUMALIMUTHUVEERASAKKAYA THIRUVENKATASAMY NAYAGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் உரையின் மீது ஒரு சில விஷயங்களைப்பற்றிப் பேச முன் வந்திருக்கிறேன்.

கவர்னர் உரையிலே, நியாய விலைக் கடைகள் இன்னும் ஒரு சில மாதங்களில் எடுக்கப்பட்டு விடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். நம் விவசாய இலாகா இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால், நம் ராஜ்யத்திலே உணவு நெருக்கடி மிகவும் அதிகமாக இருப்பதாகச் சொல்லி கோதுமை போன்ற பண்டங்களை அதிகம் உபயோகப்படுத்தவேண்டுமென்று அறிக்கை விட்டிருந்தார்கள். அமைச்சர்களும் அவ்வாறே சொன்னார்கள். இன்றைய நிலையில் பெரும்பாலான நீர் வசதி உள்ள பிரதேசங்களில் கூட, அணைக் கட்டுப் பிரதேசங்களில் கூட விளைச்சல் அதிகமாக விளைந்ததாகக் கேள்விப் பட இயலவில்லை. நான் வரண்ட பகுதி நிறைந்த மதுரை ஜில்லாவில், பரந்த காட்டுப் பிரதேசமான வடமதுரை தொகுதியைச் சேர்ந்தவன். குறிப்பாக இந்த வருஷத்தில் சாணார்பட்டி பிர்க்கா பிரதேசத்தில் மழை இல்லாத காரணத்தினால் குளங்கள் நிரம்பவில்லை. அதற்கு முன்பே கடலை போன்ற பணப் பயிர்களெல்லாம் கம்பளிப் பூச்சிகளால் நாசப் படுத்தப்பட்டன. இந்த நிலையில் அங்கு கிஸ்தி கட்டுவதற்குக் கூட மிகவும் சிரமமான சூழ்நிலை இருந்து வருகிறது. அதைப் போன்று காடாரம்பமான மானவாரி பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பது மிகவும் அறிதாக இருக்குமாதலால், நியாய விலைக் கடைகள் தொடர்ந்து நீடித்திருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் நிலம் இல்லாத ஏழைகள் சர்க்கார் புறம்போக்கு தரிசுகளில் 4, 5 வருஷங்களாகச் சாகுபடி செய்து வருகிறார்கள், தண்டத் தீர்வை செலுத்துகிறார்கள், அந்த நிலம் இல்லா

[11th February 1958

[Sri T. Thirumalaimuthuveerasakkaya Thiruvenkatasamy Nayagar]

தவர்களுக்கு, அப்படிப்பட்ட நிலங்களை ஜாரி செய்து அவர்கள் பெயருக்குப் பட்டா செய்து கொடுத்தால் அந்த நிலங்களை நல்ல முறையில் விவசாயம் செய்து உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு வேலை செய்வார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சாணார்பட்டி பிர்க்காவிலே, பெரும்பாலான பகுதிகளிலே புஞ்சை தானியங்களெல்லாம் சரியான விளைச்சல் இல்லாத காரணத்தால், பெரும்பாலான விவசாயிகள் மிகக் கஷ்டமான சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்கள் இப்போது சர்க்காருக்கு வரி வஜா செய்யவேண்டி மனுக்கள் தயாரித்து வருகிறார்கள். அதைக் கூடிய சீக்கிரம் அனுப்பிவைப்பார்கள். அவைகளை நன்கு கவனித்து வரி வஜா கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வடநத்தம் பிருக்கா என்பது பிளாக் டெவலப்மெண்ட் திட்டம் நடைபெறுகிற வட்டத்தின் பகுதி. நத்தத்தில் பிளாக் டெவலப்மெண்ட் திட்டம் நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய அங்கு ஒரு வருஷமாக இயங்கி வந்தும் நத்தம் பகுதியிலே உருப்படியான வேலை எதுவும் செய்யவில்லை. ஓரிரு பள்ளிகள் கட்டுவதற்காக எஸ்டிமேட் கூட இன்னும் தயார் செய்யப்படவில்லை. அந்த கிராம மக்கள் மிகவும் ஆர்வத்திலே, பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸரின் சொல்லுக்கிணங்க அஸ்திவாரம், தோண்டியும், சாமான்கள் சேகரித்தும் வைத்து எஸ்டிமேட்டுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் எஸ்டிமேட் கிடைக்காமல் இருந்து
1-20 p.m. வருகிறது. நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்னால் நத்தம் மாவட்ட பிளாக் டெவலப்மெண்டு அட்வைஸரி கமிட்டி மேலூர் ஆர். டி. ஓ. தலைமையில் கொட்டாம்பட்டியில் கூடியது. வட நத்தம் பிர்க்காவிலிருந்து ஒரு பிரதிநிதி கூட அந்த அட்வைசரி கமிட்டியில் சேர்க்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்னவென்று தெரியாத நிலையில் இருக்கிறோம். ஆளும் கட்சியைச்சேர்ந்த அங்கத்தினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பள்ளிக்கூட கட்டிடங்களுக்கு ரூ. 20,000 எஸ்டிமேட் என்றால் ரூ. 10,000 ராஜ்ய அரசாங்கமும், ரூ. 10,000 மத்திய அரசாங்கமும் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தமாதிரி நடைபெறுவதாக நான் கேள்விப்படவே இல்லை. ஒருக்கால் நாங்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வேண்டுமானால் அட்வைசரி கமிட்டியில் பிரதிநிதித்துவம் கொடுக்காமல் இருக்கலாமே ஒழிய, இம்மாதிரி திட்ட வேலைகள் சம்பந்தப்பட்டவரை எங்களுக்கு ஒரு விதமாகவும், ஆளும் கட்சிக்கு ஒரு விதமாகவும் இருக்கும் என்று நான் கருத முடியவில்லை.

அடுத்தபடியாக, வடநத்தம் பிளாக் டெவலப்மெண்டு ஏரியாவில் 10 கிராம சேவக்குகள் வேலை செய்கிறார்கள். அவர்களால் செய்யப்படும் வேலை ஒன்றும் குறிப்பாகச் சொல்லுவதற்கு உகந்ததாக இல்லை. அங்கு தேனீ வளர்ப்பு மிகவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இனிமேல்தான் எஸ்டிமேட்டுகள் போட்டு வேலைகள் ஆரம்பிக்கப்போகிறார்கள். பிளாக் ஏற்பட்டு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும் இனிமேல் தான் வேலைகள் ஆரம்பிக்கக்கூடிய நிலையில் இருந்து வருகிறது. இவைகளையெல்லாம் சரியான முறையில் இயங்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறு சேமிப்பு திட்டம் சம்பந்தமாக கிராமங்களிலே பல இடங்களில் கட்டாய முறையில் தான் வசூலிக்கப்படுகிறது என்று கிராம மக்கள் என்னிடம் நேரில் சொன்னார்கள். ஒரு பட்டாதார் ரூ. 10 கிஸ்தி செலுத்துகிறார் என்றால் அவர் குறைந்த பட்சம் ரூ. 50 ஆவது சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் செலுத்தவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவதாக என்னுடைய தொகுதியில் உள்ளவர்கள் என்னிடம் சொல்லுகிறார்கள். இது சம்பந்தமாக ஒரு முக்கியமான விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனது ஜில்லாவிலே மேலூர் தாலூகாவில் ஒரு பிரபல மிராசுதார் இருக்கிறார். அவருக்கு தென்னை மரம் குத்தகையில் மட்டும் ஒரு வருஷத்திற்கு ரூ. 40,000 வருமானம் வரும். அவரை சிறு சேமிப்பு திட்ட அதிகாரிகள் அணுகியபோது ' நான் பெரிய மிராசுதார் தான். ஆனால் என்னுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

11th February 1958]

[Sri T. Thirumalaimuthuveerasakkaya Thiruvenkatasamy Nayagar]

என்னிடம் பணம் இல்லை. நான் மிகவும் கஷ்டப்படுகிறேன். இந்த நிலையில் எனக்கு நீங்கள் எங்கேயாவது ரூ. 1 லட்சம் கடன் வாங்கிக் கொடுத்தால், நான் உங்களுக்கு ரூ. 30,000 கொடுக்க தயாராக இருக்கிறேன்' என்று சொன்னாராம். இந்த நிலையில் அன்றாடம் கூலி வேலை செய்து வயிறு வளர்த்துவரும் மக்களிடையே பணம் இப்பொழுது எப்படி இருக்க முடியும், அவர்கள் எவ்வாறு சிறு சேமிப்புத் திட்டத்திற்கு பணம் கொடுக்க முடியும் எனபதை கனம் மந்திரி அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசும்பொழுது எதிர்க்கட்சிக்காரர்கள் 'ரூபாய் கொடுத்தால் உங்கள் பணம் திரும்பக் கிடைக்காது' என்று பிரசாரம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதுமாதிரி யாரும் சொல்லவில்லை. யார் இஷ்டப்பட்டுக் கொடுக்கிறார்களோ, யாரிடம் பணம் இருக்கிறதோ அவர்களிடம் வசூல் செய்யுங்கள் என்று சொல்லுகிறோமே தவிர, பணம் கொடுத்தால் திரும்பி வராது என்று எந்த இடத்திலும் நாங்கள் பேசவும் இல்லை, சொல்லவும் இல்லை.

குறிப்பாக மின்சாரம் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூறி, என்னுடைய பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன். மின்சார சம்பந்தமாக சிறுகுடி வட்டாரத்திலே சர்வே நடைபெறுகிறது. இந்த வருஷத்திலாவது அங்கே மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சாணார்பட்டி பிர்க்காவிலும் மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri T. P. ELUMALAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். கவர்னர் பெருமான் சட்டசபை மெம்பர்களுக்கு சில வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ராஜ்யத்திற்கு எப்படியெல்லாம் நாம் நன்மை செய்யவேண்டும், ஏழை மக்களுக்கு நம்முடைய உதவி எப்படி எல்லாம் இருக்கவேண்டுமென்று சில நோக்கங்களை நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த நோக்கங்களை வைத்துக்கொண்டு கட்சியின் நோக்கங்களாக ஒரு சிலர் பேசுவதை நாம் பார்க்கிறோம். குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த எங்களைப்போன்றவர்களுக்கு இரண்டு காரியங்கள் இருக்கின்றன. ஒன்று மக்களுடைய முன்னேற்ற வேலைகளைப் பற்றி பேசவேண்டும். மற்றொன்று எங்களுடைய கட்சியின் செல்வாக்கை காப்பாற்றிக்கொள்ளக்கூடிய முறையில் பேசவேண்டும். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் அவர்கள் கட்சியைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இவர்கள் என்ன செய்கிறார்கள், எப்படியெல்லாம் இந்த நாட்டிற்கு மேலும் அவர்களுடைய உதவி கிடைக்கும் என்பதை பெருவாரியான பாமர மக்கள் ஓரளவு அறிந்துகொண்டே வருகிறார்கள். தி.மு.க. தலைவர்கள் பேச்சிலேயே நாட்டை ஆளவேண்டும் என்று நினைக்கிற ஒரு போக்கு அவர்களிடமிருந்து ஓரளவு விலக வேண்டுமென்று நான் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மதுவிலக்கு சட்டம் வந்தது. மக்கள் நன்றாக வாழவேண்டுமென்று எதிர்பார்த்துதான் அந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தோம். ஆனால் அந்த மதுவைவிட ஒரு பெரிய அரக்கனை தொடர் வார்த்தையிலும், பேச்சிலும் அவர்கள் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். என்னுடைய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுவார்கள். "நாட்டை ஒரு ராஜா ஆண்டு கொண்டிருந்தால் ராஜ குரு என்று ஒருவர் இருப்பார். அவர் அந்த நாட்டை ஏமாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்." அவர் அம்மாதிரி கருத்துகள் கொண்ட பல கதைகளை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி ராஜகுருவாக இந்த சட்ட சபை மெம்பர்களாக இருந்துகொண்டு, ஏதோ பேச்சிலேயே பல காரியங்களை சாதித்துவிட முடியும் என்று எண்ணுகின்ற அளவுக்கு அவர்களுடைய செயல் போய்க்கொண்டிருக்கிறது. நேரு அவர்கள் இந்த நாட்டிற்கு வந்தபொழுது அவர்கள் கல்லையும் கருப்புக் கொடியையும் வைத்துக்கொண்டிருந்தார்கள். அதோடு கேழ்வரகும் வெங்காயமும் கூட வைத்துக்கொண்டிருந்தார்கள். குழப்பத்திற்கு அஸ்தி

[Sri T. P. Elumalai] [11th February 1958

வாரம் போட்டிருக்கிறோம், எம்மாதிரியான குழப்பங்கள் நடக்கும் என் பதை அறிந்துகொண்டு, கண்ணீர் வாயு உபயோகித்தால் அதை தடுப்ப தற்கு வெங்காயம் வேண்டுமென்று வெகு உஷாராக வெங்காயத்தை யும் கொண்டு வந்தார்கள். கேழ்வரகை கீழே இறைத்துவிட்டால் அந்த சமயத்தில் நேருவின் கார் வேகமாக போக முடியாது, அவர்கள் அப் பொழுது என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற எண்ணத்திலே, கேழ்வரகு வைத்திருந்தார்கள். இம்மாதிரி பல ரூபத்தில் குழப்பத்தை விளைவிக்க அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் சட்ட சபையிலே அங்கலாய்த்துக்கொண் பேசுகிறார்கள். ஒன்றே ஒன்று அவர்களுக்குச் சொல்லுகிறேன் மந்திரிகளும், குறிப்பாக போலீஸ் மந்திரிக்கு அவர் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். இ. வி. ராமசுவாமி நாயக்கர் அவர்கள் இந்த நாட்டிலே பல குழப்பங்களை ஏற்படுத்தி கொண்டு வந்தார்கள். அவர்கள் குழப்பங்களையெல்லாம் ஏற்படுத்து வதற்கு இடம் கொடுத்தார்கள். பிறகு நிலைமை என்ன ஆயிற்று, என்ன நடந்தது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அவருடைய புத்தியெல் லாம் எந்த மார்க்கத்தில் சென்றிருக்கிறது? ஆகவே, திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அண்ணாதுரை போன்றவர்கள் அதில் ஈடு படக்கூடாது என்ற பெரும் நோக்கத்திலே, போலீஸ் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் அதற்கு உதவி செய்திருக்கிறார்கள். அந்த உதவிக்காக அமைச்சர்களை பாராட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சமயத்தில் தி.மு.க. பல காரணங்கள் சொல்லுகிறார்கள். ராஜாஜி போன்றவர்களை இழுத்து சாட்சியங்கள் கொடுக்கிறார்கள். ராஜாஜி எந்த வார்த்தை சொன்னாலும் சரி, அதில் சூழ்ச்சி இருக்கும், நம்பமுடியாது என்று அவர்களே சொல்லி வந்தவர்கள். இப்போது அப்படியே தலை கீழாக திருப்பியிருக்கின்றார்கள்.

DEPUTY SPEAKER: The hon. Member will continue his speech tomorrow. The House will now adjourn and meet again to-morrow at 8-30 a.m.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules, orders and notifications.

* 49. *Notification issued with G.O. Ms. No.* 104, *Public (General-M), dated 11th January* 1958, *under section* 4 *of the Madras Official Language Act,* 1956 *(Madras Act XXXIX of* 1956.) (Laid on the tabile of the House under section 6 of the Madras Official Language Act, 1956.)

50. *Notifications issued with G.O. Ms. No.* 3669, *Public (Services-A), dated 30th December* 1957, *amending the Madras Public Service Commission Regulations,* 1954, *so as to exclude the post of the District Social Education Officers from the Commission's purview.* [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

B. Reports and other papers.

* 18. *Short review of activities of the Madras Record Office for the first half of* 1957–58.

* 19. *Memorandum submitted by the Government of Madras on the Report of the Official Language Commission (Both English and Tamil Copy).*

* 20. *Report on the simplification and improvement of the Sales Tax System in Madras by Dr. P. S. Lokanathan.*